Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

பக்கம் 24 ஏப்.24-30, 2016 செய்தி - 30

# முருகன் -நளினி விடுதலைக்கு உதவுங்கள்

## தாயார் சோமணி மைத்திரியிடம் வேண்டுகோள்



கடந்த 28 வருட காலமாக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள எனது மகன் முருகனையும், மருமகள் நளினியையும் உடனடியாக விடுதலை செய்யவும். இவ்வாறு முருகனின் தாயார் திருமதி.வெ. சோமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பளையில் உள்ள இத்தாவில் முருகன் கோவில் வீதியில், கணவன் வ. வெற்றி வேலுவுடன் வாழ்ந்து வருகிறார். வெற்றி வேலு - சோமணி தம்பதிக்கு ஒன்பது பிள்ளைகள். ஐந்து ஆண், நான்கு பெண் பிள்ளைகள்.

02 இல்

வடக்கு கிழக்கில் அமைக்கப்படவுள்ள பொருத்து வீடுகள்

02 இல்

விஜய் படங்கள் வெளியாவதில் ஏற்படும் சிக்கல்கள்

19 இல்

தினச்செய்தி வாரமலர்
என்றும் உங்களுடன்

T.P : 0212222636

Fax : 0212222139

Web : www.thinacheithi.com/lk

## வடக்கு கிழக்கில் அமைக்கப்படவுள்ள பொருத்து வீடுகள்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 65000 பொருத்து வீடுகள் கட்ட புனஉவாழ்வு மீழ்குடியேற்ற அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் நடவடிக்கை எடுத்து வருகின்றார். இத் திட்டம் தொடஉபான கருத்துக்கள் தினசரி வெளியாகின்றன.

"வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 65000 பொருத்து வீடுகள் எம் மக்களுக்கு பொருத்தமானது இல்லை." என. எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஆனால் தெல்லிப்பளை மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் இரண்டு மாதிரியான பொருத்து வீட்டுத் திட்டத்தினைப் பெறுவதற்கு மக்கள் முண்டியடிப்பதாக அமைச்சர் சுவாமிநாதன் குறிப்பிடுகின்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், யாழ் மாவட்டத்தில் 32000 பேரும், அதுமாத்திரமன்றி வவுனியா மாவட்டத்தில் 8300 பேரும் விண்ணப்பித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளாஉ.

இவ்வாறு மக்கள் பொருத்து வீடுகள் தேவை என விண்ணப்பிப்பதைப் பார்க்கும் பொழுது. இப் பொருத்து வீடுகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் எனத் தெரியவருகின்றது என. அமச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, எதிஉக்கட்சித் தலைவர் சம்பந்தன் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பொழுது. இப் பொருத்து வீடுகள் சம்மந்தமாக பத்திரிகையாளரிகளிடம் பேசுகையில், வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு இப் பொருத்து வீடுகள் பொருத்தமற்றது எனக் கூறினார்.

எமது மக்கள் பாரம்பரியமாக கல் வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். எனவே இப் பொருத்து வீடுகள் எமது கலாச்சாரத்திற்கு பொருத்தமற்றது எனக் கூறினார்.

"இவ் வகையான பொருத்து வீடுகள் எமது நாட்டில் எங்கும் கட்டப்படவில்லை," எமது நாட்டில் பல விதமான வீடுகள் கட்டப்படுகின்றன ஆனால் பொருத்து வீடுகள் கட்டப்படவில்லை அந்நிலையில் இப் பொருத்து வீடுகளை ஏன் வடக்கு கிழக்கில் கட்டவேண்டும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

அது மாத்திரமல்லாமல; திரு சம்பந்தன் மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பிவைத்த கடிதத்தில், இந்தப் பொருத்து வீடுகள் சாதாரண வீடுகள் என்றபோதும் இதைக் கட்டுவதற்கு இரண்டு மடங்கு பணம் செலவு செய்கிறாஉகள், எனக் குறிப்பிட்டுளார்

மேலும் பொருத்து வீடுகள் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு பொருத்தமற்து என்றும் கூறினார்.

அமைச்சஉ சுவாமிநாதன் முதன் முதலாக பொருத்து வீட்டுத் திட்டத்தை நாட்டில் அறிமுகம் செய்துள்ளார். அவர் கட்டும் வீட்டில் இரண்டு அறைகள், ஹோல், வீட்டின் பின் பக்கம் மலசல கூடம், ஈசான மூலையில் குழாய்க் கிணறும் குளிப்பிடமும் மற்றும் சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் பெறும் மின்கலன் என்வற்றை அறிமுகப்படுத்துகிறார்.

இதுவரையில் எமது நாட்டில் பொருத்து வீடுகள் கட்டப்படவில்லை. எனவே இப்போது கட்டுவது எமது கலாச்சாரத்திற்குப் பொருத்தமற்றது என திரு சம்மந்தன் கூறினார். இவை இரண்டு தலைவர்களின் கூற்றாகும்.ஆனால் இந்த வீட்டில் வாழப்போவது என்னைப்போல, உங்களைப்போல, சாதாரண மக்களே.

இந்த மக்கள் என்ன கூறுகிறார்கள்?

இதுவரை வடபகுதியில் 40000 பேர் தமக்கு பொருத்து வீடுகள் வேண்டுமென விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ்வாறு விண்ணப்பம் செய்ததை அடிப்படையாக வைத்துக் கொண்டு. அமைச்சர் சுவாமிநாதன் சொல்வதை ஏற்றுக்கொள்ளலாமா?

பொறுத்திருந்து பார்ப்போம்.

"பொறுத்தார் பூமியாழ்வார்."

நுடப்பதெல்லாம் நன்மைக்கே.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## முருகன்-நளினி....

யோகேஸ்வரன் ராஜேஸ்வரி லண்டன் சிவஸ்ரீ 1978 ஆம் ஆண்டு சங்கானை குண்டு வெடிப்பில் அகால மரணமடைந்தார். முருகன் என்று அழைக்கப்படும் ஸ்ஸ்ரீகரன் 1971 ஆம் ஆண்டு முதல் வேலூர்சிறையில்லுள்ளார். ஐங்கரன் சுவிஸ்ஸ. ராஜூ சரோஜா லண்டன், மயூரன் லண்டன், சுகன்யா யேர்மனி, கோகிலவதனி லண்டன், கண்ணன் லண்டன்

முருகன் என்று அழைக்கப்படும் ஸ்ரீகரன் ஆரம்பக் கல்வியை இத்தாவில் பாடசாலையிலும் உயர்தரத்தை பளை மத்திய கல்லூரியிலும் பயின்றார். 20 வயது வரை கல்விகற்று அப்பொழுது அவர் பொறியியல் கல்வியைத் தொடர்ந்தார். அந்தகாலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அவரை பலவந்தமாகப் பிடித்துச்சென்றனர்.

புலிகளின் பிடியில் இருற்து விடுதலையாகி இந்தியா சென்றார் அவர் இந்தியாவில் இருக்கும் போது விருகம்பாக்கத்தில் நளினியைக் காதலித்தார். 1991 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அவர்கள் திருமணம் செய்தனர்.

வெளிநாடு செல்வதற்காகவே எனது மகன் இந்தியாவுக்குச் சென்றார். வேறு எந்தக் காரணத்துக்காகவும் அவர் இந்தியாவுக்குச் செல்லவில்லை. இந்தியாவில் இருக்கும் போது நளினியை சந்தித்து காதலித்து திருமணம் செய்தார்.


1991 ஆம் ஆண்டு மேமாதம் 21 ஆம் திகதி, ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். அவருடைய கொலைக்கும் எனது மகனுக்கும், மருமகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என நான் அடித்துக் கூறுகிறேன்.


எனது மருமகள் நளினி இந்தியப் பிரஜை.அவருடைய விருகம்பாக்கம் வீட்டில் அன்று நளினி பகல் உணவு தயாரித்துக் கொண்டிருக்கும் போது முருகன் அறையில் கட்டிலில் படுத்திருந்தார். 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி படுத்திருந்த பொழுது தான் பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். அவர்கள் இருவரும் கொலையில் சம்பந்தப்பட்டிருந்தால் ஆசுவாசமாக வீட்டில் இருந்திருப்பர்களா? வழமையான வேலைகளை செய்திருப்பார்களா? இதனை எவரும் கவனத்தில் எடுக்க வில்லை.என்று திருமதி சோமணி கூறினார்.

முருகனின் தாயார் திருமணி சோமணி' தினச்செதிக்கு வருமாறு கூறினார்.

நளினியின் ஒப்புதல் வாக்கு மூலம் 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி பொலிஸாரால் பெறப்பட்டது. முன்னதாக முதல் நாள் எனது மகன் முருகனின் வாக்கு மூலம் பெறப்பட்டது. பஸ்சில் தப்பி ஓடும்போது கைது செய்யப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டதாக பொலிஸார் நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்தனர்.

நான் முதன் முதலில் 1997 ஆம் ஆண்டு பூந்தமல்லி சிறைச்சாலையில் நளினியையும் முருகனையும் சென்று பார்த்தேன். 1992 ஆம் ஆண்டு சிறச்சாலையில் நளினி குழந்தையைப் பெற்றார். அக்குழந்தைக்கு ஹரித்ரா



எனப் பெயர். இரண்டு வயது வரை ஹரித்ரா நளினியுடன் சிறையில் வளர்ந்தார். வழக்கறிஞர்களின்உதவியுடன் ஹரித்திராவை சிறையில் இருந்து மீட்டெடுத்து கோயம்புத்தூரில் ஒரு வீட்டில் தங்க வைத்தேன்.1997 ஆம் ஆண்டு நான் இந்தியாவுக்குச் சென்று எனது பேரப்பிள்ளையைப் பொறுப்பெடுத்தேன்.

தடா நீதி மன்றத்தில் 26 குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் 41 குற்றவாளிகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்களில் ஒற்றைக்கண், சிவராசன் உட்பட 13 பேர் தற்கொலை செய்தனர், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன்,பொட்டு அம்மான், ஆகிய 16 பேரைத்தவிர்த்து 26 பேருக்கு எதிராக தடா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் தடா நீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்.எம்.சித்திக் விசாரணை நடத்தி வந்தார். பின்னர் நீதிபதி நவநீதம் விசாரித்து தீர்ப்பு வழங்கினார்.இந்த வழக்கு 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.

1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி எனது மகன் முருகனை பூந்தமல்லி சிறைசசாலையில் நான் சென்று பார்த்தேன்.தமக்கு எதிராக எந்தவித ஆதாரமும் இல்லை. ஆகையால் விடுதலையாவோம் என்று நம்பிக்கையுடன் நாம் அனைவரும் விடுதலையாகி வந்தலுடன் அனைவருக்கு இரவுச்சாப்படுயாழ்ப்பாண முறைப்படி சமைக்கும்படி எனது மகன் முருகன் கேட்டார்.அதியடுத்து விருகம்பாக்கத்தில் உள்ள நளினியின் தங்கை கல்யாணியின் வீட்டில் எனதுமகன்,மருமகள், உட்பட சகலருக்கும் உணவு தயாரிப்பதற்கு ஆயத்தமானேன். 52 முட்டைகளும் மரக்கறி வகைகளும் வாங்கிவைத்து நானும் கல்யாணியும் மாலை 5 மணிக்கு சமையல் செய்ய திட்டமிட்டோம்,.

அப்போதுசரியாக மாலை 4 மணியளவில் கல்யாணியின் கணவன் அன்று வெளியான மாலைப்பத்திரிகையுடன் சோர்ந்த முகத்துடன் வீட்டுக்கு வந்தார்.. அவர் கொண்டு வந்த பேப்பரைப் போட்டுவிட்டு தேம்பித் தேம்பி அழுதார். ஏன் அழுகிறாய் என விசாரித்தோம் அப்போது அழுதழுது தொடர்ந்தும் அழுது கொண்டே ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்ட 26 பேருக்கும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு விட்டது எனக் கூறினார்.

செய்தியை அறிந்த நான் மயக்க நிலைக்குச் சென்றேன், அப்பொழுது பேரப்பிள்ளை ஹரித்ரா இருந்ததால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். 26 பேரும் விடுதலையாவார்கள் அப்போது அவர்களுக்கு சமைப்பதற்காக காய் கறிகள் வாங்கி வைத்தோம். அவற்றை என்ன செய்வதென்று தெரியவில்லை அவற்றை எல்லாம் ஒரு பொட்டளம் கட்டி றோட்டோரத்தில் வைத்து விட்டு மீண்டும் விருகம்பாக்கம் சென்றோம் அதே நேரத்தில்தடா நீதி மன்றத்தில் தணடனை விதிக்கப்பட் 26 பேரையும் வேலூர் சிறைக்கு மாற்றினார்கள். பின்னர் நான் பேரப்பிள்ளையுடன் னெது மகனையும் மருமகளையும் பார்ப்பதற்கு வேலூர் சிறை வாசலில் 5 நாட்கள் தவமிருந்தேன். முருகனையும் நளினியையும் பார்க்க அனுமதி தரவில்லை. 5 வது நாள் அங்கு நின்ற பொலிஸ் அவிகாரியஜன் காலில் விழுந்து ஒப்பாரிஅங்கு காவலுக்கு நின்ற பொலிஸ் அதிகாரியின் காலில் விழுந்து ஒப்பாரி வைத்து கதறினேன்.நான் காலில் விழுந்து ஒப்பாரி வைத்ததை சிறை


(தொடர்ச்சி 23 இல்...)

# நான் ஏன் முன்னைய அரசாங்கத்தை விட்டு விலகினேன்; ஜனாதிபதி தன்னிலை விளக்கம்

(கொழும்பு)

பிரிட்டிஸ் பிரஜை ஒருவரை கொலை செய்ததில் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததற்காக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தன்னைக் கண்டித்தார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.அண்மையில் ஸ்ரீலங்கா பௌண்டேசன் நிலையத்தில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மத்தியில் பேசும் பொழுது இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.

அவர் இது சம்பந்தமாக மேலும் குறிப்பிடுகையில், பிரிட்டிஸ் பிரஜை குறாம் ஸெய்க் ஸமனை(32) 2011 டிசம்பர் மாத பிற் பகுதியில் கொலை செய்ததில் தொடபுடையவர் எனக் கருதப்பட்ட தங்காளை பிரதேச சபைத் தலைவர் சம்பத் புஸ்ப விதாணபதிரண மீது தான் நடவடிக்கை எடுத்தாதகவும், அவ்வாறு எடுத்த நடவடிக்கை தவறு எனக் கூறி முன்னால் ஜனாதிபதி கண்டித்ததாகவும் கூறினார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் தானும், ஐக்கிய மக்கள் முன்னணியின் முன்னாள் செயலாளர் நாயகம் சுசில் பிறேம்ஜெயந்தாவும் கொலையில் ஈடுபட்டவர்கள என்று சநதேகிக்கபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்ததை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ கடுமையாக எதிர்த்தார் என மைதத்திரிபால கூறினார்.உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி, மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிடுகையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தன்னையும் சுசில் பிறேம்ஜெயந்தாவையும் அலரிமாளிகைக்கு அழைத்து தங்கானை பிரதேச சபைத் தலைவரை பதவி நீக்கம் செய்தது தவறு எனக் கூறி கடுமையாகத் கண்டித்தார் எனக் கூறினார். அதனையடுத்து, அந்த பிரதேச சபைத் தலைவரை பதவி நீக்கம் செய்ய அனுப்பி வைத்த கடிதத்தை உடனே வாபஸ் பெறும்படி சுசில் பிறேம்ஜெயந்தாவுக்கு முன்னாள் ஜனாதிபதி உத்ரவிட்டார்.முன்னாள் அரசாங்கத்தில் நடந்த தில்லு முல்லுகளையும் அல்லோல கல்லோலங்களையும் பொறுக்க முடியாததனால்தான், தான் அந்த அரசாங்கத்தை விட்டு விலகியதாக




மைத்ததிரிபால சிறிசேன கூறினார்.

உங்களுக்கு பிரதம மந்திரி பதவி தரவில்லை என்பதற்காகத்தான் நீங்கள் எதிர்க் கடசியை ஆதரித்தீர்கள் என்ற போது, அந்தக் குற்றச்சாட்டை ஜனாதிபதி மைத்திரி சிறிசேன மறுத்தார்.

# கடலுணவு ஏற்றுமதித் தடையை விலக்க

## ஐரோப்பிய ஒன்றிய ஆணையம் முன்வந்துள்ளது



(கொழும்பு)

இலங்கையின் கடலுணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை விலக்குமாறு ஐரோப்பிய ஆணையம் பரிந்துரை செய்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.இலங்கை அரசுடனான நீண்ட பேச்சுவார்த்தையின் பின்னர், தடையை நீக்குவதற்கான இணக்கம் எட்டப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடை முறைகளை கண்காணிப்பதற்கும், தடுப்பதற்குமான ஏற்பாடுகளை இலங்கை கடைப்பிடிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியே, 2012-ம் ஆண்டில் இலங்கைக்கு மஞ்சள் அட்டை எனப்படுகின்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2015-ம் ஆண்டு பிப்ரவரியில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.இலங்கை, தற்போது அதன் சட்ட ஏற்பாடுகளை திருத்திக் கொண்டுள்ளதாகவும் மீன்பிடி படகுகளை கண்காணிப்பதற்கான பொறிமுறைகளை மேம்படுத்தியுள்ளதாகவும் ஐரோப்பிய ஆணையம் திருப்தியடைந்துள்ளது. புதிய பரிந்துரையை ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன்வளத்துறை பேரவை ஏற்றுக்கொண்டவுடன், இலங்கை மீதான தடைநீக்கம் அமலுக்கு வரும்.ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்குள் சூரை மீன் உள்ளிட்ட முக்கிய மீன்வகைகளை அனுப்பும் இரண்டாவது பெரிய ஏற்றுமதி நாடாக இலங்கை முன்னர் இருந்தது.ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை காரணமாக ஆண்டுக்கு 1600 கோடி ரூபா வருமானத்தை இலங்கை இழக்க நேரிட்டதாக நாட்டின் மீன்வளத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

# அமெரிக்கா அதிபர் தேர்தல்


(நியூ யோர்க்)

திறந்த போட்டி முறை நீக்கப்பட்டு கட்சி வேட்பாளர்களாக டொனால்டு றம் மற்றும் ஹிலாரி கிளின்ரன் ஆகிய இருவரும், ஜனாதிபதி வேட்பாளர்களாக நேரடியாக அறிவிக்கப்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

சென்ற செவ்வாய்க்கிழமை அமெரிக்காவின் அடுத்த அதிபர் வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்காக, நியூயோர்க் மாகாணத்தில் நடைபெற்ற உட்கட்சித் தேர்தலில் ஹிலாரி கிளின்ரன், டொனால்டு றம் ஆகிய இருவரும் வெற்றி பெற்றனர்

நியூயோர்க் மாகாணத்தில் நடைபெற்ற போட்டியை அடுத்து இரு போட்டியாளர்களும் சிறு சரிவிலிருந்து மீண்டுள்ளார்கள்.

அமெரிக்க அதிபர் போட்டி எதிர்வரும் நவம்பர் 8ம் திகதி நடைபெறவுள்ளது. இதனையடுத்து அதிபர் தேர்விற்கான



உட்கட்சித் தேர்தல் நடை பெற்றது.

இத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியில் ஹிளாரி கிளின்ரன் பெர்ணி சாண்டேஸ் ஆகியோருக்கிடையிலும், குடியரசுக் கட்சியில் டொனாலடு றம் - டெப் குறூஸ் ஆகியோருக்கிடையிலும் போட்டிகள் நிலவுகின்றது.

# அமெரிக்கா அதிரடி நடவடிக்கை சிரியா தூதரகங்கள் மூடல்

:அமெரிக்காவில் உள்ள சிரிய நாட்டு தூதரகங்கள் மற்றும் துணை தூதரகங்களை மூட அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. இதனால் அங்கிருக்கும் அமெரிக்கா அல்லாத வெளி நாட்டு அதிகாரிகள் உடனடியாக அவர்களது நாடுகளுக்கு திரும்பும்படி அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.இதுகுறித்து அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறுகையில், சிரியாவில் கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் உள்நாட்டு போரை நிறுத்துவதற்கான அமெரிக்கா மேற்கொண்ட அமைதி முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. எனவே சிரியாவுடனான வெளியுறவு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அமெரிக்காவின் சிறப்பு தூதர் டேனியல் ருபின்ஸ்டெய்ன் கூறுகையில், உள்நாட்டு போரில் சிரிய மக்கள் கொல்லப்பட்டதற்கு பொறுப்பேற்க சிரிய அதிபர் பஷால் அல் ஆசாத் மறுத்துவிட்டார்.எனவே ஆசாத்தால் அமெரிக்காவில் பணியாற்ற தூதரகங்களில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.இதைத் தொடர்ந்து, வாஷிங்டன், டிராய், மிக்சிகன், ஹஸ்டன் மற்றும் டெக்சாஸ் ஆகிய நகரங்களில் உள்ள துணை தூதரகங்களின் சேவைகளையும் நிறுத்திக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் டேனியல் ருபின்ஸ்டெய்ன் தெரிவித்துள்ளார். ஏற்கனவே அமெரிக்காவில் உள்ள தனது தூதரகங்களை மூடப் போவதாக கடந்த 10-ம் தேதி சிரியா அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் சங்கத்தின் மீது ராதிகா வருத்தம்




நட்சத்திர கிரிக்கெட் போட்டிக்கு தங்களை நடிகர் சங்க நிர்வாகிகள் அழைக்கவில்லை என்று ராதிகா சரத்குமார் தெரிவித்துள்ளார். தென்னிந்திய நடிகர் சங்க கட்டடத்திற்கு நிதி திரட்ட நட்சத்திர கிரிக்கெட் போட்டி சென்னையில் நடைபெற்றது. இதில் தமிழ்த் திரையுலகைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர். ஆனால் நடிகர் சங்கத் தேர்தலில் விஷால், நாசர் அணியை எதிர்த்துப் போட்டியிட்ட சரத்குமார் அணியில் இருந்து யாரும் பங்கேற்கவில்லை. இந்நிலையில், கிரிக்கெட் போட்டிக்கு தங்களை சங்கத்தின் நிர்வாகிகள் முறையாக அழைக்கவில்லை என்று ராதிகா சரத்குமார் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சிக்கு அனைவரையும் அழைத்திருந்தால் உங்களின் முதிர்ச்சியான அணுகுமுறையும் அனைவரிடமும் இணக்கமாக இருக்கும் தன்மையும் வெளிப்பட்டு இருக்கும். இதைவிட பெரிய நிகழ்வுகளை நடிகர் சங்கத்திற்காக, நாட்டிற் காக நடத்தியவர்கள் அவர்கள் (சரத்குமார் அணி). அவர்களை அழைக்காததால் உங்களுக்கு கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது. நீங்கள் என்னையும் அழைக்கவில்லை. சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை, என்று தனது சமூக வலைதளப் பக்கத்தில் ராதிகா குறிப்பிட்டுள்ளார்

# அரசசேகரியின் பதில்கள்





**கேள்வி:-** வடமாகாண அமைச்சர்களை மாற்றும் போராட்டம் பிசுபிசுத்துப்போனதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**கண்ணன், யாழ்ப்பாணம்.**

**பதில்:-** எதிர்பார்க்கப்பட்டதுதான்,

**கேள்வி:-** பொருத்து வீடு யாழ்ப்பாணத்துக்குப் பொருத்தமானதா?

**மு.கந்தசாமி, கோப்பாய்.**

**பதில்:-** உலகின் எல்லா நாட்டுக்கும் பொருத்தமானது.

**கேள்வி:-** வடபகுதியில் கஞ்சா கைப்பற்ற ப்படுவது அதிகமாகியுள்ளதே?

**வ.வளர்மதி.கிளிநொச்சி.**

**பதில்:-** உள்ளூர் கள்ளர்கள்தான் பின்னணியில் இருக்கிறார்கள் போலுள்ளது.

**கேள்வி:-** உண்மையைச் சொல்லுங்கள், கச்சதீவை இந்தியா திரும்பப்பெறுமா?

**சி.குமணன், வவுனியா.**

**பதில்:-** ஒருகாலமும் திரும்பப் பெறமுடியாது.2013 ஆம் ஆண்டு நான் கச்சதீவுக்குச்சென்று, இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றினேன்.

**கேள்வி:-** இலங்கை, சீன புதிய உறவு இந்திய உறவைப் பாதிக்குமா?

**மு.மாலதி, முல்லைத்தீவு**

**பதில்:-** ஒரு நாட்டின் உறவு இன்னொரு நாட்டின் உறவைப் பாதிக்காது.இது உறவைப் பெறுபவரின் கையில் தான் உள்ளது.

**கேள்வி:-** நல்லாட்சியிலும் ஊழல் புரிந்தவர்கள் இருப்பது சரியா?

**உருத்திரன், மன்னார்.**

**பதில்:-** எல்லா அரசியல் கட்சிகளிலும் மனிதர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆசாபாசம் உண்டு.

**கேள்வி:-** செல்பி மோகத்துக்கு என்ன காரணம்?

**ஜி. ஜீவிதா, சாவகச்சேரி.**

**பதில்:-** பழையகால பழமொழி தம்மைப்புகழாத தம் மானும் இல்லை.அதேபோல் தங்களை நிழல்படங்களில் பார்க்க ஆசைப்படுவதே காரனம்.

**கேள்வி:-** புதிய அமைச்சர்கள் பதவியேற்கப்போகிறார்களாம், உண்மையா?

**தி.தனுஜன், மாங்குளம்,**

**பதில்:-** அப்படித்தான் செய்திகள் வெளியாகின்றன.எதிர்க்கட்சியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப்பதவி என்ற தூண்டில் போடப்படுகிறது.

**கேள்வி:-** கொடூரமான வெய்யிலுக்கு என்ன காரனம்?

**ஜே.ஜோசப், கைதடி.**

**பதில்:-** காலநிலையின் சீற்றம்,

**உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்**
**சிறந்த கேள்விகளுக்கு பணப்பரிசில் தர அரசகேசரியார்**
**தயாராக உள்ளார்.**

*சிறந்த முதல் கேள்விக்கு ரூபா 1 000*
*இரண்டாவது கேள்விக்கு ரூபா 500*
*மூன்றாவது கேள்விக்கு ஆறுதல் பரிசாக ரூபா 100 வழங்கப்படும்.*


**வரும் கேள்விகளிலிருந்து சிறந்த கேள்வியை**
**தெரிவு செய்யும் பொறுப்பு அரசகேசரியாருடையதாகும்.**
**ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைக்கு முன்னர் வரும் கேள்விகள்**
**மாத்திரமே தெரிவு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும்.**

*ஒரு வாரத்திற்கு 10 கேள்விகள் மாத்திரமே தெரிவு செய்யப்படும்.*
*அதன் பின்னர் வரும் மிகுதிக் கேள்விகள் அடுத்தவாரம் பிரசுரமாகும்.*
*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

# சுயபடம் எடுத்த பொலிஸ்காரி பணி இடை நீக்கம் செய்யப்பட்டார்.





மெக்ஸிகோ நாட்டைச்சேர்ந்த பெண் பொலிஸ் ஒருவர் கடைமையிலிருக்கும் போது அரை நிர்வாணமாக தனது மார்பு தெரியும்படியாக சுயபடம் எடுத்ததற்காக அவர் பதவியிலிருந்து ,டை நீக்கம் செய்யப்பட்டார்.

கடைமையிலிருந்த நிடியா ஹர்சிகா (Nidia Garcia) என்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் வாகனத்திலிருந்து தானியங்கித் துப்பாக்கியை தனது மடியில் வைத்துக் கொண்டு சுய படம் எடுத்துள்ளார்.

அந்தப் படம் எவ்வாறோ அவருடைய முக நூலில் வெளி வந்து விட்டது. ஆனால் அந்தப்படம் தற்சமயம் அவருடைய முக நூலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

இருந்த போதும் இந்த படம் பொலிஸ் தலைமைக்கு இனந்தெரியாதவர்களால் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து அப் பெண் பொலிஸ் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுளார். தற்சமயம் பொலிஸ் தலைமைத்துவம் பெண் பொலிஸிற்கு தோட்ட வேலை செய்யும் தண்டனை வழங்கியுள்ளது.

தற்சமயம் தானியங்கித் துப்பாக்கியுடனும் சீருடையணிந்தும் எடுத்த படமானது இணையதளங்களில் வெளி வந்துள்ளது. அதே நேரத்தில் இரண்டு பிள்ளைகளுக்கு தாயான பொலிஸ் உத்தியோகத்தர் மன்னிப்பை தனது முக நூலில் கோரியுள்ளார்.மேலும் கடைமை நேரத்தில் சீருடை அணிந்திருக்கும் பொழுது இவ்வாறு படம் பிடித்துக் கொண்டது தவறானது என்று முக நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நான் எனது பொலிஸ் தலைமைச் செயலாளரிடமும் மாநகர சபை தலைவர் Escobedo விடமும் மன்னிப்புக் கோருகிறேன். நான் செய்ததற்கு எனது இரண்டு பிள்ளைகளுக்கும் கணவனுக்கும் பெற்றோருக்கும் சகோதரரிக்கும் முழுக் குடும்பத்திற்கும் அவமரியாவையாக நடந்து கொண்டதிற்கு மன்னிப்புக் கோருகின்றேன் என தனது முக நூலில் குறிப்பிட்டுளார்.

# தினச்செய்தி சிறுகதைப் போட்டி

இந்தச் சிறுகதைப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சுமார் எழுநூற்று ஐம்பது தொடக்கம் ஆயிரம் சொற்களுக்கு இடையில் எழுதி அனுப்பி வைக்க வேண்டும்.

எழுதுபவரின் சொந்தக் கற்பனை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். **சமகால விடயங்களை உள்ளடக்கியதாக சிறுகதை அமைய வேண்டும்.**

இப்போட்டி **ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் ஒரு சிறுகதை மாத்திரமே அனுப்பலாம். ஒன்றிற்கு மேற்பட்ட சிறுகதைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏ4 தாளில் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் எழுது பவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையையும் (பெயர், விலாசம் அடையாள அட்டை இலக்கம், தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி இலக்கம், அத்தோடு பாஸ்போட் சைஸ் புகைப்படம்) இணைத்து அனுப்ப வேண்டும்.

வெற்றி பெறும் சிறுகதைகளுக்குப் பரிசுகள் உண்டு.

| | |
|---|---|
| **முதல் பரிசு** | **ரூபா 10000** |
| **இரண்டாவது பரிசு** | **ரூபா 5000** |
| **மூனறாவது பரிசு** | **ரூபா 2500** |

முதல் பத்து சிறுகதைகளும் வரிசைக்கிரமப்படி தினச்செய்தி வாரமலரில் பிரசுரிக்கப்படும். அதையடுத்து தினச்செய்தி சிறுகதைத் தொகுப்பு என்று பத்து சிறுகதைகளையும் சேர்த்து புத்தக வடிவில் வெளியிடப்படும். புத்தக வடிவில் வெளியிட்டு புத்தக அறிமுக விழா வின் போது புத்தகத்தில் சிறுகதை எழுதிய பத்து எழுத்தாளர்களும் விழா மேடையில் வைத்துக் கௌரவிக்கப்படுவார்கள்.


தபால் மூலம் சிறுகதை எழுதி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி

**தினச்செய்தி**
தில்லைக்கட்டி லேன்,
சுன்னாகம்.


# சொன்னார்கள் சொன்னார்கள்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் அரசியல் நிலைப்பாடும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கும் அரசியல் நிலைப்பாடும் ஒன்றாகஇருக்குமானால் அது தமிழ் முஸ்லிம் சமூகத்தை வெற்றியடையச் செய்யும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிரேஸ்டசட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



ஒவ்வொருவரும் பங்களிப்பு செய்ய முடியும் சூழலை உருவாக்க வேண்டும். 125 கோடி மக்களின் ஆற்றலும் தேசத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்லும்."இவ்வாறு கூறினார் மோடி.




வற் வரி அதிகரிப்பு மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பவற்றை சில துறைகளில் சேர்ப்பதற்கு காரணம் கடந்த அரசாங்கத்தினால் சுமத்தப்பட்ட கடன் சுமையே என பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களை சந்தித்தபோது கூறினார்.

வீதியில் வெடிகுண்டு வீசப்படுகிறது. பொலீஸ் அதிகாரி விஷ்ணுபிரியா தற்கொலை செய்துகொண்டுள்ளார். ஆனால் சேலத்தில் பேசிய ஜெயலலிதா. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சிறப்பாக இருப்பதாக பொய் கூறியுள்ளார். என்னம்மா இப்படி பண்றீங்களேம்மா..? என்று கேட்க தோன்றுகிறது என ஸ்டாலின் கூறுகிறார்.




ஹெலிகொப்டரில் நான் போகும்போது கூட. உத்தியோகபூர்வ பெறுபேற்றை. தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்டிருக்கவில்லை. அப்போது. சிறிசேன அவர்கள். எதிரணியின் வேட்பாளர். அவரைத் தேடிக்கொள்ளமுடியவில்லை. . அதன் பின்னரே. ரணில் விக்கிரமசிங்கவைஅழைத்துப் பேசிவிட்டு. அன்று காலை 6 மணியளவில். நான் வெளியேறினேன் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்

"இதுவே என் கடைசி உரையாகக்கூட இருக்கலாம். நமது லத்தீன் அமெரிக்க நண்பர்கஉயளவசழளுக்கும் பிற நாட்டு நண்பர்களுக்கும் கியூப மக்கள் எப்போதும் வெற்றியாளர்களே என்ற செய்தியை தெரிவிக்க வேண்டும்" என ஃபிடெல் காஸ்ட்ரோ தனது உரையில் தெரிவித்துள்ளார்



அமெரிக்காவுக்கு சென்றுள்ளதாக கூறப்படும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை அங்கு கைது செய்யுமாறு இரு தமிழ் அமைப்புக்கள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை வலியுறுத்தியுள்ளன.



நியோக்கர்கள் எப்போது எனது பின்னால் இருந்தார்கள். நான் எப்போதும் உங்களுடையவராக இருக்கவே முயற்சிக்கிறேன். நாம் ஒன்றிணைந்து வெற்றி பெற்றிருக்கிறோம். நான் மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவிக்கிறேன் என்று வெற்றிக்குப் பின்னர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.



மோசமான பூமி அதிர்ச்சி

தென்அமெரிக்கநாடானஈகுஅடோரில் வரலாறு காணாத மிக மோசமான பூமி அதிர்வு சம்பவித்துள் ளது. குறைந்த பட்சம் 350 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்கள் வீடுவாசல்களைஇழந்துள்ளார்கள். நெடுஞ் சாலைகள்போக்குவரத்து கண்காணிப்பு கோபுரங்கள் என்று கட்டடங்கள் பெரும் அழி வைச் சந்தித்துள்ளன.



ஈ. சிகரெட்டுகள்-E-cigarettes

ஈ சிகரெட்டுகள்-E-cigarettes

கடந்த ஆண்டில் ஈசிகரெட்டுகளின் பாவனை அமெரிக்க மாணவர் களிடையே வெகுவாகஅதிகரித்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதே சமயம் சிக–ரேட் புகைப்பவர்கள் தொகை வீழ்ச்சி கண்டுள்ளது

# அங்கும் இங்கும்

ஸ்மார்ட் போன் ஸ்மார்ட்தொலைக்காட்சி வரிசையில் இப்பொழுது ஸ்மார்ட் குடையும் வரப்போகின்றது. ஸ்மார்ட் போனில் அப்ளிகேஷனை தரவேற்றி ஊம்ப்ரெல்லாவை இயக்க முடியும். இதன் பெயர் OOMBRELLA . பிரான்ஸ் நாட்டு நிறுவனமான Wezzoo இந்தக் குடையை வெகு விரைவில் சந்தையில் அறிமுகப்படுத்த உள்ளது. இதில் கூட கிளாசிக், மொடேர்ன்(classic and modern) என்று இரண்டு வகை இருக்கும். 3.1 அடி உயரத்துடன் வளைந்த கைப்பிடி இருந்தால் அது கிளாசிக்.0.8 அடிஉயரத்துடன் நேரான கைப்பிடி இருந்தால் அது மொடேர்ன்.வெளிச்சம், ஈரப்பதம், அழுத்தம், வெப்பநிலை போன்றவற்றைப் பதிவு செய்து, அடுத்து அரை மணி நேரத்தில் என்ன நடக்க இருக்கிறது என்பதைச் சொல்லிவிடுகிறது.

குடையை மறந்துவிட்டுக் கிளம்பினாலோ, வேறு எங்கோ குடையை வைத்துவிட்டுக் கிளம்பினாலோ, ஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலம் குடை இருக்கும் இடத்தை நமக்கு போன் காட்டிக் கொடுத்துவிடும்.



Smart umbrella- ஸ்மார்ட் குடை

# இவர் தாண்டா நீதிபதி



சென்னை: உத்தராகண்ட் மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சியை மத்திய அரசு அமல்படுத்தியதை ஹைகோர்ட் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.இதுகுறித்து மூத்த பத்திரிக்கையாளர் கதிர் வேல் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்துள்ளதாவது: குமாரசாமிகளையும் சில தத்து பித்துகளையும் பார்த்து இந்திய நீதித்துறை மீதே நம்பிக்கை சீர்குலைய தொடங்கியிருக்கும் சூழ்நிலையில்,

இதோ நாங்கள் இருக்கிறோம் என்று இந்திய அரசியல் சாசனத்தை உயர்த்தி பிடித்து எழுந்து நிற்கிறார் உத்தராகாண்ட் ஐகோர்ட் தலைமை நீதிபதி கே எம் ஜோசப். லயோலாவில் படித்தவர்.கேரளா ஐகோர்ட்டில் பத்ததாண்டுகள் பணியாற்றியவர். தந்தை சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக பணியாற்றியவர். உத்தராகாண்டில் காங்கிரஸ் அரசை கலைத்த வழக்கில் நேற்றும் இன்றும் ஜோசப் எழுப்பிய சாட்டையடி கேள்விகளால் திகைத்து நிற்கிறது மோடி அரசு. அநீதிக்கு எதிராக நீதியரசன் வாள் சுழல்வதை பாருங்கள்: ஜனாதிபதி உத்தரவு போட்டுவிட்டால் அதை யாரும் கேள்வி கேட்க முடியாதா? யார் சொன்னது? முன்பு அப்படி இருந்திருக்கலாம். இப்போது இல்லை.ஒரு உத்தரவு சட்டப்படி சரியா தவறா என்பதை முடிவு செய்யும் அதிகாரத்தை அரசியல் சாசனம் வழங்கியிருப்பது கோர்ட்டுக்குதானே தவிர ஜனாதிபதிக்கு அல்ல. ஒரு மாநில அரசை கலைத்து அங்கே மத்திய அரசின் அதிகாரத்தை நிறுவ ஜனாதிபதி தனது அரசியல் ஞானத்தின் அடிப்படையில் முடிவு எடுத்தார் என்று சொல்வதை ஏற்க முடியாது.ஜனாதிபதியும் மனிதர்தான். தவறே செய்யாத மனிதன் இருக்க முடியாது. நாங்களும் தவறு செய்கிறோம். அதனால்தானே மேல்கோர்ட்டுக்கு போகிறீர்கள்? ஜனாதிபதி ஆணைக்கு மட்டும் அப்பீலே கிடையாது என்றால் எப்படி?

ஜனாதிபதி ரொம்ப ரொம்ப நல்லவராக இருக்கட்டும். அபாரமான அறிவாளியாக இருக்கட்டும். அதெல்லாம் தவறு செய்ய மாட்டார் என்பதற்கு உத்தரவாதம் ஆகுமா? ஒரு மாநில அரசு மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டது. அது மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது என சிலர் சொல்கிறார்கள். கவர்னரிடம் மனு கொடுக்கிறார்கள்.அவர் முதலமைச்சருக்கு உத்தரவு போடுகிறார். சட்டசபையை கூட்டி உனக்கு மெஜாரிடி இருப்பதை நிரூபித்து காட்டு என்கிறார். சபாநாயகர் அதன்படி சபையை கூட்டுகிறார். நாளை ஓட்டெடுப்பு என்றால் இன்றைக்கு ஆட்சியை கலைத்து ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்கிறீர்கள். இது என்ன விளையாட்டு?பதவி பறிக்கப்பட்ட முதல்வர் நியாயம் கேட்டு வந்திருக்கிறார். இந்த வழக்கில் நாங்கள் விசாரித்து தீர்ப்பு சொல்ல வேண்டும். அதற்குள் ஜனாதிபதி ஆட்சியை வாபஸ் பெற்றுக் கொண்டு பிஜேபி ஆளை முதலமைச்சராக நியமித்து புது ஆட்சி அமைக்க மத்திய அரசு திட்டமிடுவதாக அவர் சந்தேகிக்கிறார். அப்படி செய்ய மாட்டோம் என உறுதி அளிக்க சொன்னால் மத்திய அரசு தலைமை வக்கீல் அப்படி உறுதி தர இயலாது என்கிறார். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறது மத்திய அரசு? கோர்ட்டுடன் மோத தயார் ஆகிறீர்களா?

நீதியை சிதைத்து சின்னாபின்னமாக்க நினைக்கிறீர்களா? விட்டால் இதையே ஒவ்வொரு மாநிலத்திலும் செய்வீர்கள். உங்களுக்கு பிடிக்காத மாநில அரசை கலைத்து ஜனாதிபதி ஆட்சியை பிரகடனம் செய்வீர்கள்.பத்து பதினைந்து நாளில் உங்கள் கட்சியில் .ஒருவரை தயார் செய்வீர்கள். அவர் முதல்வராக வசதியாக ஜனாதிபதி ஆட்சியை திரும்ப பெறுவீர்கள், அப்படித்தானே?இந்திய அரசின் மிகவும் உயர்ந்த பொறுப்பில் இருப்பவர்கள் இப்படி நடந்து கொண்டால் யாரிடம் போய் சொல்வது? நீதித்துறையோடு விளையாடிப் பார்ப்போம் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?லேட்டஸ்ட் தகவல்: ஜனாதிபதி ஆட்சி பிரகடனத்தை ரத்து செய்தது உத்தராகாண்ட் ஐகோர்ட். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## தற்கொலை செய்து கொண்ட பிரதியுஷா, கர்ப்பமாக இருந்த தகவல் வெளியாகி திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

மும்பையை சேர்ந்த பிரபல டி.வி. நடிகை பிரதியுஷா கடந்த 1ந் தேதி வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரும், அவரது காதலன் ராகுல் சிங்கும் தனிமையில் வசித்து வந்த நிலையில், திடீரென அவர் இந்த முடிவை தேடிக் கொண்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.மேலும், ராகுல்சிங் கொடுத்த சித்ரவதை காரணமாக தான் பிரதியுஷா தற்கொலை செய்து கொண்டதாக அவரது தாயார் போலீசில் புகார் கொடுத்தார். இதனிடையே, இந்த வழக்கில் தன்னை போலீசார் கைது செய்யாமல் இருப்பதற்காக மும்பை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்து, ராகுல் சிங் முன் ஜாமீன் பெற்றார். அவரது முன் ஜாமீன் மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**கர்ப்பம்**

இந்த சூழலில், தற்கொலை செய்து கொண்ட 24 வயது டி.வி. நடிகை பிரதியுஷா, கர்ப்பமாக இருந்த தகவல் வெளியாகி பெரும் திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. அவரது



கருப்பையில் மேற்கொண்ட சோதனையில் இந்த தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், தற்கொலை செய்து கொள்வதற்கு சில நாட்களுக்கு முன்பு தான் பிரதியுஷா தன்னுடைய வயிற்றில் வளர்ந்த கருவை கலைத்திருக்கிறார். இந்த தகவலை ஜே.ஜே. மருத்துவமனை டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.ஏற்கனவே, பிரதியுஷா தற்கொலை வழக்கில் மறைந்து கிடக்கும் மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் முன்னர், அவர் கர்ப்பமாக இருந்த தகவல் வெளியாகி மேலும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## இலங்கை மனித உரிமை மீறல்கள் குறித்த அமெரிக்கா அறிக்கையால் பிரிட்டன் கவலை

இலங்கையில் மனித உரிமை நிலவரங்கள் குறித்து அமெரிக்கா அளித்துள்ள அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் கவலை அளிப்பதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. இலங்கையில் கடந்த 2009-ம் ஆண்டு நடைபெற்ற விடுதலை புலிகளுக்கு எதிரான ,றுதி கட்ட போரில் பல்வேறு போர் குற்றங்கள் நடந்ததாக புகார் எழுந்தது. ,ந்நிலையில் இலங்கையில் கடந்த ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் வெற்றி பெற்று மைத்ரிபாலா சிறிசேனா அதிபரானார்.

இதை தொடர்ந்து இலங்கையில் மனித உரிமை நிலவரங்கள் குறித்து அமெரிக்கா அண்மையில் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டது. சித்தரவதை, பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட புகார்களை மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்து எழுப்பி வருவதாகவும், தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நிலை இன்னும் சீரடையவில்லை எனவும்



அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை நிலவரங்கள் குறித்து அமெரிக்கா அளித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் கவலை அளிப்பதாக பிரிட்டன் வெளியுறவு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மனித உரிமையை பாதுகாப்பதில் ,லங்கை அரசு இனி தீவிர கவனம் செலுத்தும் என நம்புவதாகவும் தெரிவித்துள்ளது.

## பாலியல் அடிமைகள் ஆக மறுத்த 250 பெண்களுக்கு மரண தண்டனை விதித்த ஐ.எஸ்

கொடூரமானச் செயல்களுக்கு பெயர் பெற்ற ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு, பயங்கரவாதிகளுக்கு பாலியல் அடிமைகளாக மறுக்கும் பெண்களுக்கு மரண தண்டனை விதித்து வருகிறது.இதற்காக மொசூலில் பெண்களை வேட்டையாடி வரும் ஐ.எஸ். அமைப்பு, அவர்களைக் கடத்தி வந்து தங்கள் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளை தற்காலிகமாக மணந்து கொள்ள கட்டளையிடுகின்றனர், இந்த உத்தரவுக்கு கீழ்படியாத பெண்களை, சில சமயங்களில் அவர்களது குடும்பத்துடன் கொலை செய்து வருகிறது ஐஎஸ். இவ்வாறு உத்தரவுக்குக் கீழ்படியாத 250 பெண்களை கொலை செய்ததாக குருதிஷ் ஜனநாயகக் கட்சிச் செய்தித் தொடர்பாளர் சயீத் மமூஸ்னி தெரிவித்தார்.

சில தருணங்களில் உத்தரவுக்கு கீழ் படிய மறுக்கும் பெண்களுடன் அவர்களது குடும்பத்தினரையும் ஐஎஸ் கொலை செய்து வருவதாக குர்திஷ் செய்தி நிறுவனம் அஹ்லுல்பய்த் தெரிவித்துள்ளது. ஐ.எஸ். பிடியில் இருக்கும் மொசூலில் பெண்கள் தங்கள் விருப்பப்படி மணமகனைத் தேர்வு செய்து கொள்ள அனுமதி கிடையாது. மேலும் அவர்கள் தனியாகச் செல்லவும் அனுமதி இல்லை என்று குர்திஸ்தான் நாட்டுப்பற்று கட்சி அதிகாரியான கயாஸ் சுர்ச்சி மேலும் ஒரு அதிர்ச்சித் தகவலை பகிர்ந்து கொண்டார்.கடந்த ஆகஸ்ட்டில் ஐஎஸ் தீவிரவாதிகளுடன் பாலியல் உறவு வைத்துக் கொள்ள மறுத்த 19 பெண்களை கொலை செய்த அதே விதத்தில்தான் இப்போதைய பெண் கொலைகளும் நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட் 2014-ல் 500 யாஜிதி இனப்பெண்களை ஐஎஸ் தீவிரவாதிகள் கடத்திச் சென்று பலாத்காரம் செய்துள்ளனர். அக்டோபரில் மேலும் 500 யாஜிதி பெண்கள், சிறுமிகளை ஐ.எஸ். கடத்தி சென்றது.இந்நிலையில் கடந்த திங்களன்று அதிபர் ஒபாமா நம்பிக்கை தெரிவிக்கையில், இந்த ஆண்டு இறுதிவாக்கில் ஐ.எஸ் பிடியிலிருந்து மொசூல் விடுபடுவதற்கான நிலைமைகளை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம் என்று கூறியுள்ளார்.

# புலிகளுக்கு வந்த ஆயுதங்கள் அடங்கிய கொள்கலனை எம்.ஜி.ஆர். விடுவித்தார்

அங்கே தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், நிதிக்குப் பொறுப்பான தமிழேந்தியும், கேணல் சங்கர் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் ஆகியோர் இவர்களின் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தார்கள்.

திருவாண்மையூர் வாசஸ்தலம் வந்த பிற்பாடு, காவல் வழங்க வந்த பொலிஸ் தலைவர், "எல்லாம் சரிதானே?" எனக் கேட்டு, கைகுலுக்கி விட்டுச் சென்றார்.

அதையடுத்து வாகனத்தில் கொண்டு வந்த பொருட்கள் பாலசிங்கத்தின் படுக்கையறைக்குள் வைக்கப்பட்டது. ஒவ்வொரு பெட்டியாகப் பரிசோதித்தார்கள்.

ஒவ்வொரு பெட்டிக்குள்ளும் நூறு ரூபா கட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஒரு பெட்டியில் பத்து இலட்சம் ரூபா இருந்தது.

இருபது பெட்டிகளையும் திறந்து எண்ணி, மீண்டும் அடுக்கி வைக்கும்போது பொழுது புலர்ந்து விட்டது.



அவ்வளவு தொகையான பணத்தினை எம்.ஜி. இராமச்சந்திரன் வழங்கியதைப் பார்த்த பிரபாகரன் மகிழ்ச்சியும் அதிர்ச்சியும் அடைந்தார். அதேபோல மற்றவர்கள் மனதிலும் உணர்ச்சிகள் ஓடிக் கொண்டிருந்தன.

அந்த காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் நிறைய பணக் கஸ்டத்தை அனுபவித்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருசிலர் வழங்கிய பணத்தினைக் கொண்டே இயக்கத்தினை நடத்தி வந்தார்கள்.

பணப் பற்றாக் குறையால், பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகளை இயக்க முடியாமல் மிகவும் திண்டாடிக் கொண்டிருந்தார். ஆனால் எம்.ஜி. இராமச்சந்திரன் கொடுத்த அன்பளிப்பு, அவர்களுடைய திட்டங்களை எல்லாம் நிஜமாக்க வழிவகுத்தது.

பிரபாகரன் அந்த கிழமையே எம்.ஜி. இராமச்சந்திரனை சந்தித்தார். அவருடன் கூட பாலசிங்கமும் சென்றிருந்தார்.

பிரபாகரனை, எம்.ஜி. இராமச்சந்திரன் அன்புடனும் பாசத்துடனும் வரவேற்றார்.

பிரபாகரனும் எம்.ஜி. ஆரும் பார்த்தவுடனே பரஸ்பரம் அவர்கள் இருவருக்கும் பிடித்துக் கொண்டது. எம்.ஜி. இராமச்சந்திரன் பிரபாகரனை தனது இளைய சகோதரன் போலவே நடத்தினார். எம்.ஜி. இராமச்சந்திரன் பிரபாகரனை "தம்பி" என்று அன்புடன் அழைத்தார். அந்த சந்திப்பின்போது பிரபாகரனைப் பார்த்து பெற்றோர், சகோதரர்கள் அவரது இளமைக் காலம், கனவு, நோக்கம், இலட்சியம் ஆகியன பற்றி எம்.ஜி. இராமச்சந்திரன் விசாரித்தார். அப்பொழுது கொரிலா வீரனாக இருந்த காலத்தில் தான்பட்ட துன்பங்களை எல்லாம் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு விளாவாரியாக விளக்கினார். அதனைக் கேட்ட எம்.ஜி. இராமச்சந்திரன் ஆடிப்போனார். தம் உறவுக்கும் தமிழினத்துக்கும் இலங்கை இராணுவம் இழைத்த கொடுமைகளை எடுத்துக் கூறிய போது எம்.ஜி. இராமச்சந்திரன் தனது ஆழ்ந்த கவலைகளை வெளிக் காட்டினார். தம்பி உனக்கு என்ன தேவையானாலும் என்னைக் கேள், என்று உத்தரவாதம் வழங்கினார். எம்.ஜி. இராமச்சந்திரன் தனக்குப் பிடித்தவர்களை தன்னுடன் காலை உணவு உண்ண அழைப்பது வழக்கம் அவருக்கும் பிரபாகரனுக்குமிடையிலான முதல் சந்திப்பை அடுத்து ஒரு நாள் காலை எம்.ஜி. இராமச்சந்திரனின் செயலாளர் பாலசிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனடியாக அவசர கூட்டத்தற்கு பிரபாகரனை அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று கூறினார். உங்களுக்காக முதலமைச்சர் காத்துக்கொண்டிருக்கிறார் என்று எம்.ஜி. இராமச்சந்திரனின் செயலாளர் கூறினார். எம்.ஜி. இராமச்சந்திரனின் தொலைபேசி அழைப்பை அடுத்து பிரபாகரனும் பாலசிங்கமும் எம்.ஜி. இரா மச்சந்திரனின் இல்லத்திற்கு விரைந்தார்கள். அவர்கள் இருவரையும் வீட்டு வாசலில் வைத்து எம்.ஜி. இராமச்சந்திரனின் செயலாளர் அன்புடன் வரவேற்று சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அவர்கள் இருவருக்காகவும் எம்.ஜி. இராமச்சந்திரன் காத்துக் கொண்டிருந்தார். அவர்கள் இருவரையும் எம்.ஜி. இராமச்சந்திரன் கண்டவுடன் "வா தம்பி வா," நீங்கள் இருவரும் என்னோடு காலை உணவு சாப்பிட வேண்டும் என்று கூறினார்.

அந்த காலை உணவின்போது ஆரம்பத்தில் இட்லியும் சட்னியும் சாம்பாரும் பரிமாறப்பட்டது. அதையடுத்து தோசை பரிமாறப்பட்டது அதையடுத்து பூரியும் உப்புமாவும் பரிமாறப்பட்டது பாலசிங்கம் ஒரு நீரிழிவு நோயாளி, அன்று அவர் காலையில் ஏற்ற வேண்டிய இன்சூலின் ஊசியை, அவர் ஏற்ற மறந்து விட்டார். அவர் அங்கே பரிமாறப்பட்ட சாப்பாடுகளை சாப்பிடுவதில் மிகவும் சிரமப்பட்டார். அதனை அவதானித்த எம்.ஜி. இராமச்சந்திரன் என்னுடைய விருந்தாளிகள் நன்றாக சாப்பிட வேண்டும், என்று நன்றாக கடிந்துகொண்டார். அதையடுத்து பிரபாகரனைப் பார்த்து அவருக்கு வழங்கப்பட்ட உணவுகளை எல்லாம் சாப்பிட்டு அவருடைய கோப்பையை சுத்தமாக வழித்து உண்டிருப்பதை கண்டு மகிழ்ச்சியடைந்தார். பாலசிங்கத்தைப் பார்த்து "தம்பியை பார்," என்று திருப்தியுடன் எம்.ஜி. இராமச்சந்திரன் கூறினார். இப்படித் தான் வரும் விருந்தாளிகள் விருந்தளிப்பவரை கௌரவிக்கவேண்டும், ஆனால் நீங்கள் உங்களுக்கு வழங்கப்பட்ட சாப்பாட்டை ஒழுங்காக சாப்பிடவில்லை என்று பாலசிங்கத்தைப் பார்த்து எம்.ஜி. இராமச்சந்திரன் கூறினார். அதையடுத்து எம்.ஜி. இராமச்சந்திரன் அங்கே நின்ற உணவு பரிமாறுபவரைப் பார்த்து கையசைத்தார். உணவு பரிமாறுபவர் மீண்டும் நிறைய இட்லி தோசை சாம்பார் ஆகியவற்றை கொண்டு வந் தார். மேலதிக உணவு வந்த தைப் பார்த்த பாலசிங்கம் நான் ஒரு நீரிழிவு நோயாளி என்று பரிதாபமாக கூறினார் மேலும் வழமையாக எடுக்கும் இன்சூலின் ஊசியை நான் போடவில்லை எனக்கு உணவு கட்டுப்பாடு உள்ளது, நான் அதிகம் உணவு சாப்பிடக் கூடாது என்று கூறினார்.

அதைக் கேட்ட எம்.ஜி. இராமச்சந்திரன் சிரித்துக் கொண்டு எனக்கும் நீரிழிவு நோய் இருந்தது ஆனால் இப்போ எனக்கு குணமாகி விட்டது. நீரிழிவு நோய் இருந்தால் யார் சொன்னது சாப்பிடக் கூடாது என்று எந்த மடையன் உங்களுக்கு வைத்தியம் செய்கிறான் என்று கேட்டார். அதற்கு பதிலளித்த பாலசிங்கம் தான் வழக்கமாகவே இன்சூலின் ஊசி போட்டுக் கொண்டு இருக்கிறேன் என்றும் தனது வாழ்க்கையே இன்சுலினில் தான் தங்கியுள்ளது என்றும் கூறினார். நீரிழிவு நோய் குணமாக்க முடியாத நோய் என்றும் கூறினார்.

அதையடுத்து எம்.ஜி. இராமச்சந்திரன் தனது வைத்தியரை அங்கே வருமாறு அழைத்தார். அங்கே வந்த வைத்தியரை பார்த்து எம்.ஜி. இராமச்சந்திரன் பாலசிங்கம் சொல்லுகிறார், தான் ஒரு நீரிழிவு நோயாளி, குணப்படுத்த முடியாது என்று ஆனால் நான் கூறினேன் குணப்படுத்த முடியும் என்று. நீங்கள் இந்த நோய் சம்பந்தமான விற்பன்னர் எனவே இதில் யார் கூறியது சரி, என்றுகேட்டார். ஐயா, நீங்கள் சொன்னது தான் சரி என்று வைத்தியர் பதிலளித்தார் அதையடுத்து இந்த நோயை குணப்படுத்த எவ்வளவு காலம் எடுக்கும் என்று கேட்டார்.

அதையடுத்து இரண்டு கிழமைக்குள் குணப்படுத்த முடியுமா என்று கேட்டார் அதற்கு டாக்டர் "ஆம்" என்று கூறினார். நீங்கள் அவரை அழைத்துக் கொண்டு போய் உங்கள் ஆஸ்பத்திரியில் அனுமதித்து வைத்தியம் செய்யுங்கள் என்று எம்.ஜி. இராமச்சந்திரன் டாக்டருக்கு உத்தரவிட்டார். பிரபாகரனை பாலசிங்கம் பரிதாபகரமாகப் பார்த்தார்.

ஆனால் பிரபாகரனோ நடக்கும் கூத்தை மனதிற்குள் சந்தோசமாக அனுபவித்த போதும் முகத்தை கடுமையாகவே வைத்திருந்தார்.

அதன் பின்னர் பாலசிங்கமும் பிரபாகரனும் எம்.ஜி. இராமச்சந்திரனின் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் பிரபாகரன் கடகட என சிரித்தார் பின்னர் டாக்டரைப் பார்த்து நீங்கள் ஏன் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு பொய் சொன்னீர்கள் என்று கேட்டார் அதற்கு டாக்டர், நான் எவ்வாறு முதலமைச்சர் சொல்வதை முரண்பாடாக சொல்வது இப்பவும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை நீங்கள் வந்து ஆஸ்பத்திரியில் இரண்டு கிழமை ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

அதன்படியே பாலசிங்கமும் ஆஸ்பத்திரியில் ஓய்வெடுத்தார். இந்த சம்பவம் நடந்து மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் பாலசிங்கமும் பிரபாகரனும் எம்.ஜி. இராமச்சந்திரனின் வீட்டிற்கு காலைச் சாப்பாட்டிற்கு அழைக்கப்பட்டார்கள். அவ்வாறு சாப்பாட்டிற்கு போகும் முன் பாலசிங்கம் வழமையிலும் பார்க்க மேலதிகமாக ஒரு டோஸ் இன்சுலினை ஏற்றிக் கொண்டே போனார்.

"உன்னுடைய நீரிழிவு நோய் எப்படி? "நீ நோயிலிருந்து மீண்டு விட்டாயா"? என்று பாலசிங்கத்தைக் கேட்டார்.

"ஆம் ஜயா," நன்றிகள் என்று பாலசிங்கம் கூறினார். மேலும் பாலசிங்கம் அவருக்கு வழங்கப்பட்ட எல்லா உணவுகளையும் சாப்பிட்டார். எம்.ஜி. இராமச்சந்திரன் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

**அரசகேசரி**

எம்.ஜி. ஆரினால் வழங்கப்பட்ட நிதியை, மிகவும் காத்திரமாகப் பாவித்து, தமிழ் நாட்டில் பல பயிற்சி நிலையங்களை பிரபாகரன் உருவாக்கினார். அந்த பணத்தைப் பாவித்து நிறைய புதிய இளைஞர்களை தன் இயக்கத்தில் இணைத்தார். புதிய ஆயுதங்களையும் கொள்வனவு செய்தார். மேலும் கே.பியின் தலைமையில் ஆயுத படையை உருவாக்கினார். அவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பின் கீழ் சர்வதேச சட்ட விரோதமான ஆயுத சந்தையில் பிரபாகரன் ஆயுதங்கள் பலவற்றை கொள்வனவு செய்தார்.

கே.பி. என்ற கே. பத்மநாதன் லெபனானில் வைத்து ஒரு கொள் கலன் அளவு ஆயுதங்களை கொள்

(தொடர்ச்சி 17 இல்...)



# வார்த்தை தவறிய வைகோவுக்கு பலத்த எதிர்ப்பு

அரசியல் எதிரிகளை வசைபாடுவது அரசியலில் அநாகரிகத்தின் உச்சக்கட்டம். அரசியல் தலைவர்களில் பலர் வெளிபடையாகவும் மறைமுகமாகவும் வசைபாடும் அநாகரிகத்தைத் தொட்டுப்பார்த்தவர்கள். தேர்தல் காலத்தில் இந்த அரசியல் அநாகரிகம் உச்சக்கட்டத்தை அடைந்துவிடும். எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை கீழ்த்தரமான வார்த்தைகளால் விமர்சிக்கும் பேச்சாளர்களுக்கு கட்சிகள் பணம் கொடுக்கின்றன. அவர்களின் பேச்சை ரசித்து கைதட்டி ஆரவாரம் செய்து தொண்டர்கள் உற்சாகப் படுத்துவர்கள். கட்சித் தலைவர்களும் இரண்டாம் கட்டத் தலைவர்களும் மேடை ஏறுவதற்கு முன்பு இந்த அநாகரிகம் அரங்கேறிவிடும். அந்த அநாகரிக அரசியல் பேச்சில் உண்மையும் இட்டுக்கட்டிய பொய்களும் இருக்கும். கம்பீரமான பேச்சால் தலைவர்களையும், தொண்டர்களையும், மக்களையும் கட்டிப்போட்ட வைகோ உணர்ச்சி வசப்பட்டு பேசிய ஒரு சொல் அவரது அரசியல் வாழ்க்கையை புரட்டிப் போட்டுள்ளது. அரசியல், இலக்கியம், வரலாறு, புறநானூறு, மாக்யவல்லி, பெர்னாட்ஷா, முசோலினி, ஹிட்லர், சோக்கிரடீஸ் என அவர் எந்தத் தலைப்பிலும் சிறு குறிப்பும் இல்லாமல் கரைபுரண்டோடும் சொற்களால் மணிக்கணக்கில் சொற்பொழிவாற்றுவார். நாடாளுமன்றத்திலும், தமிழக சட்டசபையிலும் அவரது உரையை அனைவரும் அக்கறையுடன் செவிமடுப்பார். அவருடைய கேள்விகளுக்கான பதில் உடனடியாகக் கிடைக்காது. அப்படிப்பட்ட வைகோவின் வாயிலிருந்து வெளியான சொல்லால் அவரது அரசியல் பயணத்தில் கரும்புள்ளி விழுந்துள்ளது.

வைகோ,பிரேமலதா ஆகிய இருவரும் கருணாநிதியையும் ஸ்டாலினையும் குறிவைத்து மிக மோசமாகத் தாக்கிப் பேசுகின்றனர். ஜெயலலிதாவை விமர்சிப்பதை இவர்கள் தவிர்த்து வருகின்றனர். கருணாநிதியின் சாதியைப் பற்றி பகிரங்கமாக வைகோ பேசியது அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளது. அரசியல் தலைவர்களின் சாதியைக் குறிப்பிட்டு முன்னரும் பல தடவைகளில் பலர் பேசியுள்ளனர். சாதியத்துக்கு எதிரான சதிக்கு எதிரான சாதிக்கு எதிரான போராட்டங்களை முன்னின்று நடத்திய வைகோ சாதியைக் குறிப்பிட்டுப் பேசியதை ஏற்றுக்கொள்ள எவருமே தயாராக இல்லை. தமிழக காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் முன்பொருமுறை சாதியைக் குறிப்பிட்டு கருணாநிதியை இகழ்ந்தார். அப்போது அவருக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டம் செய்தது. தமிழக சட்ட சபைத் தேர்தல் காலம் என்பதால் வைகோவுக்கு




எதிரான போராட்டம் உச்சக் கடட்டத்தை அடைந்துள்ளது.. கருணாநிதிக்கு எதிராக தான் பேசியது தவறு என உணர்ந்து கொண்ட வைகோ உடனடியாக மன்னிப்புக் கேட்டுள்ளார். அவரது மன்னிப்பை ஏற்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் தயாராக இல்லை. வைகோவுக்கு எதிரான போராட்டம் தமிழகம் முழுவதும் முடுக்கி விடப்பட்டுள்ளது. வைகோவின் அநாகரிக உரையை தனக்குச் சார்பாகத் திருப்பிவிட திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சிக்கிறது. வைகோவின் உருவப் பொம்மைகள் முக்கிய நகரங்களில் எரிக்கப்படுகின்றன.

மக்கள் நலக் கூட்டணிக்கு வாக்களிக்கலாம் என விரும்பியவர்கள் தமது முடிவை மாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. சாதியத்துக்கு எதிரானவர் வைகோ என்ற முகத்திரை கிழிந்துள்ளது. சாதியத்துக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தி சிறைக்குச் சென்ற இடதுசாரித் தலைவர்களும் திருமாவளவனும் வைகோவின் பேச்சால் அதிர்ச்சியடைந்துள்ளனர். தேர்தல் பரப்புரையின் போது வைகோவுக்கு எதிரான குற்றச்சாட்டால் சாதிக்கு எதிரானவர்களின் வாக்கு மக்கள் நலக்கூட்டணிக்கு கிடைக்காத நிலை தோன்றியுள்ளது. தலித்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக கட்சியை ஆரம்பித்த திருமாவளனுக்கு வைகோவின் பேச்சு அதிர்ச்சியளித்துள்ளது. வைகோவின் தற்போதைய பேச்சுக்கள் கூட்டணிக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாக கம்யூனிஸ்ட்கள் அஞ்சுகிறார்கள். மக்கள் நலக் கூட்டணியின் இணைப்பாளரான வைகோவின் அத்து மீறிய அநாகரிகப் பேச்சு, பத்திரிகையாளர்கள் மீதான கோபம், எதிர்க் கட்சிகள் மீதான ஆதாரமில்லாத குற்றச்சாட்டு என்பன கூட்டணித் தலைவர்களை கிலேசமடைய வைத்துள்ளது. மக்கள் நலக் கூட்டணியின் இணைப்பாளர் பதவியில் இருந்து வைகோவை அகற்றுவதற்கு கம்யூனிஸ்ட்கள் விரும்புகிறார்கள். விஜய காந்தின் மனைவி பிரேமலதா அல்லது திருமாவளவனை இணைப்பாளராக்க வேண்டும் என்பது கம்யூனிஸ்ட்களின் விருப்பம். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அது வைகோவுக்கு பின்னடைவாக இருக்கும். வைகோவிடம் இருந்து இப்படியான பேச்சை யாரும் எதிர்பார்க்கவில்லை.

விஜயகாந்தைத் தவிர ஏனைய கூட்டணித் தலைவர்கள் அனைவரும் கண்டனம் தெரி வித்துள்ளனர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர ஏணைய கட்சித் தலைவர்கள் அனைவரும் வைகோவை கண்டித்துள்ளனர். கருணாநிதியின் அரசியல் வாழ்க்கை நேர்மையானதல்ல. இராஜதந்திரம் என்ற பெயரின் அவர் நடத்திய அரசியல் சித்து விளையாட்டுகள் ஏற்புடையதல்ல. அரசியலுக்கு அப்பால் அவருடைய தமிழ்மொழி அறிவு, இலக்கியம், இதிகாசம் என்பனவற்றில் அவருக்குள்ள புலமை என்பன அவரை சற்று உயர்வாக வைத்துள்ளன. 92 வயதிலும் நவீன தொழில்நுட்பங்களுக்கு ஈடு கொடுத்து அவர் கடமையாற்றுவதை மதிக்காதவர் எவருமில்லை. துவண்டு கிடந்த திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வைகோவின் பேச்சு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. விஜயகாந்துக்கு ஒரு கட்சி இருக்கிறது. அக்கட்சிக்கு அவர் தலைவர்.

விஜயகாந்துக்குப் பின்னால் இருந்த மனைவி பிரேமலதா இன்று முன்னணிக்கு வந்துள்ளார். விஜயகாந்தைப் புகழ்ந்து எதிரணிகளை விமர்சித்து அவர் ஆற்றும் உரை தொண்டர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற் றுள்ளது. எம்.ஜி.ஆரையும் பெருந் தலைவர் காமராஜரையும் பிரேமலதா விமர்சித்ததை அதிகமானோர் ஏற்கவில்லை. விஜயகாந்த் பேசுவது யாருக்குமே புரிவதில்லை. அது பற்றிய விமர்சனங்கள் அதிகளவில் வெளிவந்துள்ளன. விஜயகாந்தின் பேச்சு விளங்கவில்லை என்ற விமர்சனம் பிரேமலதாவை எரிச்சலடைய வைத்தது. எம்.ஜி. ஆர். பேசியது யாருக்காச்சும் புரிந்ததா? சொல்லுங்க எம்ஜிஆர். பேசியது யாருக்காச்சும் புரிந்ததா? என்று தனது கட்சித் தொண்டர்களைப் பார்த்துக் கேட்டார். அவருடைய கட்சித் தொண்டர்கள் எதிர்த்து எதுவும் பேசமாட்டார்கள். பொது வெளியில் கேட்டிருந்தால் நிச்சயம் பதில் கிடைத்திருக்கும். எம்,ஆர். ராதா சுட்ட பின் எம்.ஜி.ஆரின் பேச்சில் மாற்றம் ஏற்பட்டது. அதன் பின்னர் எம்.ஜி.ஆர். நடித்த போது ரசிகர்கள் அவரை வசூல் சக்கரவர்த்தியாக்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து பிரிந்து வெளியேறி புதிய கட்சி ஆரம்பித்து தேர்தலில் போட்டியிட்டபோது மக்கள் அவரை முதலமைச்சராகினார்கள். விஜயகாந்த் தனித்து தேர்தல்களில் போட்டியிட்டு படுதோல்வியடைந்தார். ஜெயலலிதாவின் புண்ணியத்தால் எதிர்க்கட்சித் தலைவரானார். படிக்காத காமராஜர் முதலமைச்சராகலாம் விஜயகாந்த் முதலமைச்சராகக் கூடாதா என பிரேமலதா கேட்டுள்ளார். பிரேமலதாவின் இந்த பேச்சு எம்.ஜி.ஆரின் ரசிகர்களையும் காமராஜரின் விசுவாசிகளையும் கோபமடைய வைத்துள்ளது. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எதிரணித் தலைவர்களைப் பற்றிய கீழ்த்தரமான பேச்சுக்கு முற்றுப் புள்ளிவைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.



**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

*தொடர்புகளுக்கு :*

**தில்லைகட்டி லேன்,**
**சுன்னாகம் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**தொலைபேசி : 021 7539300**
**தொலைநகல் : 021 7539300**
**இணையம் : thinacheithi@gmail.com**

# நாட்டுக் கோழி

**ஏ.ஜெ .ஞானேந்திரன்**

பஸ் யன்னலூடாகத் தெரிந்த அழகு என்னைப் பிரமிக்க வைத்தது. பச்சைக் கம்பளம் விரித்தாற் போல. என்று பள்ளிக் காலத்தில் தமிழ் ஆசிரியர் சொல்லித் தந்த சொற்றொடரின் நிஜம் கண்களில் தெரிந்தது..

அடடா என்ன அழகு.. என்னை அறியாமலே என் வாய் முணுமுணுத்தது பாம்பொன்று வளைந்து வளைந்து ஊர்ந்து செல்லுமாற்போல, மலைப்புறத்தில் நெளிந்து வளைந்து சென்ற பாதையூடாக சாரதி பஸ் வண்டியை இலாவகமாகச் செலுத்திக் கொண்டிருந்தார். வாகனம் சரிந்து அதல பாதாளத்தில் விழுந்து விடுமோ என்ற பயமும் பயணிகளிடம் இலேசாகத் தொற்றியிருந்தது. அதையும் மீறி பச்சைக் கம்பளத்தைப் போர்த்தாற் போன்றிருந்த தேயிலைத் தோட்டங்களின் அழகு மெய்மறக்க வைத்தது. மிக ஜாக்கிரதையாக யன்னலூடாக என் ஐபோனை நீட்டி, படங்கள் எடுத்துக் கொண்டிருந்தேன். அதுவும் வஞ்சகம் செய்யாமல் நல்ல நல்ல போட்டோக்களை எடுக்க உதவிக் கொண்டிருந்தது.. இந்த ஐபோன்கள் வந்தபின்பு, கமராக்கள் வேலையில்லாப் பட்டதாரிகளாகி விட்டன என்றே அப்பொழுது எனக்கு நினைக்கத் தோன்றியது.

தேயிலைக் கொழுந்தை இலாவகமாகக் கொய்து, முதுகிலிருந்த கூடைக்குள் போட்டுக் கொண்டிருந்த பெண்களையும் படமெடுத்த போது, காலங்காலமாக மிகக் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்து கொண்டு வரும், அந்த இந்திய வம்சாவளிப் பெண்களின் ஊதிய நினைப்பும் வந்து போயிற்று

எனக்குப் பின் உட்கார்ந்திருந்த ஒரு பெண் பஸ் யன்னலூடாக வாந்தியெடுக்கும் சப்தம் காதில் வீழ்ந்தது. சிலருக்கு இந்தப் பயணங்கள் ஒத்து வருவதில்லை. நெடுந்தீவுக்கு கப்பலில் சென்றபோதும் இதே காட்சியை நான் கண்டிருந்தேன். கப்பலை அலைகள் புரட்டும்போது, வயிற்றைக் குமட்ட வாந்தி எடுப்பவர்கள் இருக்கின்றார்கள். இப்படி வளைந்து வளைந்து மலைப்பிராந்திய பஸ் வண்டிகளில் பயணிப்பவர்களும் வாந்தி எடுத்து விடுகின்றார்கள்.

இந்த ஒரு சின்ன நாட்டில் எவ்வளவு அழகு கொட்டிக் கிடக்கின்றது என்று மனதுள் நினைத்துக் கொண்டேன்.

வானம் பார்த்த பூமி வடபகுதிப் பூமிவடபகுதி மழையை நம்பிக் கிடக்கும் ஒரு வரண்ட பூமியாக இருப்பினும், இங்கு ஆழக் கிணறுகள் வீட்டுக்கு வீடு இருப்பதாலும், தறை என்று சொல்லப்படும் மண் வளமாக இருப்பதாலும், வடக்கில் தீவுப் பகுதிகள் நீங்கலாக பல பகுதிகள் செழிப்பாக இருக்கின்றன. வாழை,கமுகு, புகையிலை, மரக்கறிப் பயிர்ச் செய்கை என்று செழிப்பான பிரதேசங்களும் இருக்கவே செய்கின்றன. மண்ணைப் பொன்னாக்கும் உழைப்பாளிகளுக்கு இங்கே பஞ்சமில்லை என்பது தலையான காரணம

இலங்கையின் தெற்குப் பிராந்தியத்தினர் கொடுத்து வைத்தவர்கள். ஆறுகள் ஓடும் பூமி. பச்சைப் பசேலென்று காணப்படும் பூமி மலையகத்தவர்களுக்கும் இயற்கை அன்னை வஞ்ச கமில்லாமல் வாரி வழங்குகிறாள்.. அரு விகள், நீர்வீழ்ச்சி என்று காணப்படும் இங்கும் வரட்சி தலைகாட்டுவதில்லை..

மஸ்கெலியாவில் பஸ் நின்ற போது, தடம் புரண்டோடிய எண்ணங்களுக்கும் பிரேக் போடப்பட்டது. நான் இறங்க வேண்டும் என்ற நினைப்பு என்னுள் எழுந்தது.

என் பையை எடுத்துக் கொண்டு, பஸ்ஸிலிருந்து இறங்கினேன்.

என் பேரன் முரளி பஸ் தரிப்பிடத்தில் எனக்காகக் காத்திருந்தான். நான் இறங்கியதும் இறங்காததுமாக, என் பிரயாணப் பையை தான் வாங்கிக் கொண்டு,புன்முறுவலோடு என் சுகம் விசாரித்து விட்டு முன்னே உற்சாகமாக நடக்க நான் அவனைப் பின்தொடர்ந்தேன். சிவனொளி பாத மலை உச்சி தூரத்தில் தெரிந்தது. அது சிவனொளிபாத மலையேறும் ஸீஸன் என்பதால், அந்தப் பிராந்தியத்தில் ஜனநடமாட்டம் அதிகமாக இருந்தது. நல்லதண்ணி என்று அழைக்கப்படும் சிவனொளி பாத மலையடிவாரம் இங்கிருந்து தூரத்தில் இல்லை

வாங்க ஐயா வாங்க என்று அண்ணாவின் மகள் கார்த்திகா வரவேற்க, செருப்பை வாசலில் கழற்றி வைத்து விட்டு வீட்டுக்குள் நுழைந்தேன் எனது இளவயதில் பல தடவைகள் நண்பர்கள் சகிதமாக சிவனொளிபாத மலை உச்சிக்கு போய் வந்திருக்கிறேன். அப்பொழுது அண்ணன் உயிரோடு இருந்த காலம்.நான் என் குடும்பத்தில் மிகவும் நேசித்த ஒருவர். ஆனால் கடவுள் அவரது 55வது வயதில் கிறிஸ்மஸ் தினமன்று தன்னிடம் அழைத்து விட்டார். வெளிநாட்டில் அதுவும் ஒரு நாடும் இல்லாமல் இன்னொரு நாட்டுக்குப் போக வழிதேடி மொஸ்கோ வீதிகளில் சுற்றித் திரிந்த போது, இந்த இழவுச் செய்தி ஜேர்மன் நாட்டில் வாழ்கின்ற சகோதரி மூலம் காதில் வீழந்தது. அறைக்குள் இருந்து தனியனாக அழுததைத் தவிர வேறு எதையுமே என்னால் அப்பொழுது செய்ய முடியவில்லை

பிந்திய இரவில் கூட் டமாக யாத்திரீகர்களோடு யாத்திரிகளர்களாக மலையேறி, கதிரவன் அதிகாலையில் கிழக்கே மேலேறும் அற்புத காட்சியைக் கண்டு கழித்து,காலையில் கீழே இறங்கி வரும் அந்த அனுபவத்தை எப்படி வாழ்நாளில் மறக்க முடியும்? ஒரு மதத்தவர் சிவனொளி பாதம் என்று பூஜிக்க, இன்னொரு மதத்தவர் இது கௌதம புத்தரின் திருவடி என்று பிரர்த்தனை செய்ய, கிறிஸ்தவர்களோ ஆதாமின் காலடிகள் என்று நம்ப, மூன்று மதத்தவர்களுமே திரள் திரளாக இங்கு கூடுகின்றார்கள். இத்தனைக்கும் அங்கே எந்தப் பாதவடிகளையும் காணமுடியாது. எல்லாமே மூடப்பட்ட நிலையில்தான் காணப்படுகின்றன.

தை மாதத்தில் ஆரம்பிக்கும் இந்த ஸீஸன் மே வெசாக் கொண்டாட்டம் வரை தொடரும். அதன் பின்பு இந்தப் பிராந்தியம் வெறிச்சோடிப் போய்விடும். இந்த ஸீஸனில்தான் கடை,யாத்திரீகர், பொலீஸ் பாதுகாப்பு, அங்கும் இங்குமாக வாகன ஓட்டங்கள் என்று பிராந்தியம் அமர்க்களப்படும்.

கிட்டத்தட்ட 30 வருட ங்களுக்குப் பின்பு மீண்டும் சிவனொளி பாத மலையடிவாரம் வந்திருக்கிறேன். அதே மலை அதே யாத்திரீகர்கள் கூட்டம். எதுவுமே மாறவில்லை. ஆனால் என் வாழ்க்கையில்தான் எத்தனை மாற்றங்கள். அண்ணா மாரடைப்பில் மரணம். அண்ணாவின் இரு பெண் பிள்ளைகளுக்கும் திருமணமாகி ஆளுக்கு இரண்டு பிள்ளைகளையும் பெற்று



விட்டார்கள். இருவருக்குமே மலையகத்து பாடசாலைகளில் ஆசிரியர் பணி கிடைத்து விட்டது. ஆசிரியையாக இருந்த அண்ணியும் பதவி ஓய்வு பெற்று விட்டார். இப்படி அடுக்கடுக்காக எத்தனை மாற்றங்கள். என் மகனுக்கும் திருமணமாகி நானும் ஒரு பேரப் பிள்ளையைக் கண்டு வாழ்வின் முதுமைக் காலத்தைத் தொட்டாயிற்று. இளமை தொலைந்து விட்டாலும் மனம் இன்றும் உற்சாகமாகத்தான் இருக்கின்றது.

இன்று மலை மீது ஏறும் திட்டமில்லை. மலையடிவாரத்தில் சற்றே சுற்றி விட்டுப் போவோம் என்ற எண்ணத்துடன்தான், பேரப் பிள்ளைகளோடு அங்கு வந்திருந்தேன்..

கொழும்பில் தொதல் வாங்குவதாக இருந்தேன். ஆனால் இங்கே நிறையக் கடைகளில் தொதல் விற்பனை நடந்து கொண்டிருந்தது.. எனவே கலு தொதோல் என்று சிங்கள மொழியில் சொல்லப்படும் கறுப்பு நிறத் தொதோலை வாங்கிக் கொண்டேன். இடையிடையே படங்களையும் எடுத்துக் கொண்டேன். சிங்கள மொழயைச் சரளமாகப் பேச முடியும் என்பதால், கடைக்காரர்களுக்குப் பேச்சுக் கொடுத்து சில பல புதிய விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது. .பயண அனுபவங்களை ஒரு கட்டுரைத் தொகுப்பாக எழுதுவது என் வழமை. எனவே பலதும் பத்தும் அறிந்தால்தானே எழுத முடியும்?

வீடு திரும்பி, இரவுச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு, படுக்கை நேரம் வந்தது. இது ஒரு சோதனைக் காலம்.. யாழ்ப்பாணத்தைப் போலவே இங்கும் நுளம்புகளின் அட்டகாசம். அழுக்கான ஊசியைக் காவிக்கொண்டு அகப்படுவோரை எல்லாம் குத்தித் தொலைக்கும் ஆசாமி .ஆனால் இவர்கள் நுளம்பு வலையை கடட்டிலில் மேல் கட்டியிருந்தமையால், நிம்மதியாகத் துங்க முடிந்தது. நுளம்புக் கச்சேரியும் நடக்கவில்லை.

பழக்க தோஷம் பொல்லாதது. ஆறு மணிக்கு மேல என்னால் தூங்க முடியவில்லை. எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, ஹோலின் முன்பக்கம் வந்து சோபாவில் உட்கார்ந்தேன். கையோடு கொண்டு போயிருந்த சாண்டில்யனின் யவன ராணியின் பக்கங்களை புரட்டலானேன்.

கார்த்திகா தேநீரோடு வந்தாள். அதைப் பருகிக் கொண்டிருக்கும்போது அவள் கணவன் கையில் தேநீர் கோப்பையுடன் வந்து என் பக்கத்தில் உட்கார்ந்தார்.

என்ன முரளி எழும்பல்லையா? அவர் பதிலுக்கு சிரித்தார்.என்ன பகிடி விடுகிறீங்களா? அவனாவது இப்ப எழும்பிறதாவது.. அதுவும் இந்த ஞாயிறில் .. என்றார் அவர் நக்கல் சிரிப்போடு..

அப்ப எத்தனை மணிக்குத்தான் எழும்புவான்?

மீண்டும் சிரிப்பு..ஐயய்யோ இதுகள் எல்லாம் வைட் லெகோன் குஞ்சுகள்.. நாங்க நாட்டுக் கோழிக்குஞ்கள் மாதிரி வளர்ந்தனாங்க வைட் லெகோன் முட்டையளையும்,குஞ்சுகளையும் பார்த்திருப்பியள்தானே?


ஏன் பிள்ளையளை இப்பிடிச் சொல்லிறியள்? ஐயோ நானும் ஸ்கூல வைஸ் பிரின்ஸ்ஸிபல்தான். எத்தனை ஆயிரம் பிள்ளையளைப் பார்த்திருப்பன். எங்கிட காலத்தில, அப்பாவிட காலத்தில இருந்த பிள்ளயள் இப்ப இல்லை. பல்ப் வெளிச்சத்தில தீனி போட்டு, ஆறு மாசத்தில பெயருக்குப் பருக்கிற லெகோன் கோழிகளைப் போலதான் இண்டைய பிள்ளையள்

அவர் பேச்சில் விரக்தி இழையோடிப் போயிருந்தது.. தன் மகன் இருபத்திநான்கு வயதிலும், உருப்படியாக எதையும் படித்து முடிக்காமல், எந்த வேலையும் செய்யாமல் வீட்டுக்குப் பாரமாக இருந்து தன் மானத்தை வாங்குகிறான் என்ற ஆதங்கம் அவருக்குளதையும் அந்தந்தப் பருவத்தில் செய்துவிட வேண்டும் என்ற தீவிரத்தில் இருப்பவர் அவர்.

தன்னை ஒரு நாட்டுக் கோழியாகவும், தன் மகனை ஒரு லெகோன் கோழியாகவும் மனதில் வரித்து, ஆதங்கப்படுகிறார் அந்தத் தந்தை வெளிநாட்டில் டாக்டராகப் பணிபுரியும் என் மகனை அப்பொழுது நினைத்துக் கொண்டேன்.

இவர் மகன் வைட்லெகோன் குஞ்சென்றால், என் மகன் நாட்டுக் கோழிக் குஞ்சா? என்னால் அப்படி நினைத்துப் பார்க்க முடியவில்லை.. ஆனால் இன்றைய பிள்ளைகள் எல்லாம் வைட்லெகோன் குஞ்சுகள் என்ற கூற்றையும் ஏற்க முடியவில்லை..பயணக் களையாக் கிடக்கு.. பஸ்ஸின்ட குலுக்கிலில முதுகு நோ இன்னும் எடுபடல. கொஞ்சம் சரிஞ்சா சுகமா இருக்கும் போல கிடக்கு மெல்ல எழுந்து, நல்ல உறக் கத்திலிருந்த வைட் லெக்கோன் குஞ்சின் பக்கத்தில் மெல்லச் சரிந்தேன்.

# உலகில் 20 வீத மக்களை வருத்தும் குடல்புண் நோய்



குடல் புண்

குடல் புண் என்பதை சாதாரணமாக சொல்லி விட்டாலும், சில சமயங்களில் இதனால் ஏற்படும் வயிற்று வலியால் பலர் தற்கொலை செய்த சம்பவங்களும் நடந்துள்ளன. முறையான உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிப்பதுடன், மன அழுத்தம் ஏற்படாமல் இருந்தால் இதிலிருந்து தப்பிக்கலாம். குடல் புண் பற்றியும் அதனை தவிர்ப்பது பற்றியும் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம்.

குடல் புண் என்பது தொண்டைக்குக் கீழ் உள்ள உணவுக் குழாய், வயிறு, சிறுகுடல் ஆகிய பகுதிகளில் உள்ள தசைகளில் அரிப்பு ஏற்படுவதால் உருவாகின்றது. இயல்பாக தொண்டை முதல் சிறுகுடல் வரையிலான பகுதி கட்டியான வழுவழுப்புத் தன்மையுடன் இருக்கும். ஆனால் குடல்புண் பாதிப்பு உள்ளவர்களிடம் இந்த வழுவழுப்பு குறைவாக இருப்பும். மேலும் சமிபாட்டுக்குப் பயன்தரும் அமிலத் தன்மை அதிகரித்தாலும் தசை எளிதில் அரிப்பு ஏற்பட்டு குடல் புண் ஏற்படுகின்றது.

இது ஒவ்வொரு இடத்திற்கு தக்க வேறுபட்ட பெயர்களில் அழைக்கப்படுகின்றது. 20 சதவீத மக்கள் குடல் புண் தொந்தரவால் அவதிப்படுகின்றார்கள். 15 சதவிகிதம் பேருக்கு உள் இரத்தக் கசிவால் பாதிப்பு ஏற்படுகிறது. 10 சதவீதம் பேருக்கு தற்காலிகமாக குடல் புண் ஏற்படுவதும் பின் சரியாகி விடுவதுமாக உள்ளது.

முக்கியமாக இரவு நேரங்களில் உணவு அருந்திய பின் மேல் வயிற்றில் தாங்க முடியாத வலி, வயிற்றுப் பொருமல், வாந்தி, ஏப்பம், பசியின்மை, இரத்த வாந்தி, உடல் நலிவு போன்ற அறிகுறிகள் காணப்படும். நெஞ்சுக் கூட்டுப் பகுதியில் இருக்கும் வெறும் வயிற்றில் சற்று வலியாக இருக்கும். வலியினால் உணவு மேல் வெறுப்பு ஏற்படும். உணவிற்குப் பின் படிப்படியாக வலி குறையும். குடலில் உள் இரத்தக் கசிவால் கருநிற மலம் வெளி யேறும். புண் இருக்கும் இடத் திற்குத் தக்க அறிகுறி மாறித் தெரியும். அதாவது வயிற்றிற்கு மேல் பகுதியில் உணவுக் குழா யில் வாந்தி வருவது போன்று பசியின்மை, வாந்தியுடன் இரத்தம் கலந்துள்ள அறிகுறிகள் தென் படும். வயிற்றுப் பகுதியில் குடல் புண் இருந்தால் உணவிற்குப் பின் 3 மணி நேரத்திற்கு தாங்க முடியாத வலி இருக்கும்.

**20 சதவீத மக்கள் குடல் புண் தொந்தரவால் அவதிப்படுகின்றார்கள். 15 சதவிகிதம் பேருக்கு உள் இரத்தக் கசிவால் பாதிப்பு ஏற்படுகிறது. 10 சதவீதம் பேருக்கு தற்காலிகமாக குடல் புண் ஏற்படுவதும் பின் சரியாகி விடு வதுமாக உள்ளது.**

60 சதவீத மக்களுக்கு நுண் பக்டீரியாவான ஹெலிக் கோபேக்டர் பைலோரை நோய்த் தொற்றே காரணம். பாதிக்கப்பட்டவரிடம் குடலில் பக்டீரியா எதிர்ப்பு சந்தி குறைந்து, இக்கிருமிகள் அதிகமாகி குடல் சுவர்களை அரித்து புண்ணை ஏற்படுத்தும். அதிகமாக மருந்துகளை உட்கொள் வதால் குடலில் புண் ஏற்படுவதும் உண்டு. மிகக் குறைந்த காரணங்களாக மருந்து, புகையிலை, புகைபிடித்தல், மது பானம், மனஅழுத்தம், கல்லீரல் சுருக்கம், நோய்களுக்கான மருந்துகளை பயன்படுத்துவதாலும் பாதிப்பு அடைகின்றனர். மிக அரிதாக காரமான உணவு சாப்பிடுவதாலும், கோப்பி, தீராத வியாதிகளாலும் பாதிப்பு ஏற்படுகிறது. வயிற்றுப் புற்றுநோய், பித்தப்பை கல், கல்லீரல் வீக்கம், இருதய நோய் ஆகிய பிரச்சினைகளாலும் மேற்கூறிய வயிற்றுவலி காணப்படும்.

எந்தப் பகுதியில் இரத்தம் கசிந்தாலும் ஆபத்தானது. குடலில் ஓட்டை விழுவதால் உணவு குடலில் இருந்து ஒழுகி பல நோய்களின் தாக்கத்தை உருவாக்கும். சில சமயம் அருகில் உள்ள மற்ற அவயவங்களையும் துளைத்து சிக்கலை ஏற்படுத்தி குடல் சுருங்கி வாந்தி ஏற்படும்.

ஆயுள்வேத வைத்தியர் நாகேந்திரன் வாமதேவன்

என்டோஸ்கோபிக், எக்ஸ்ரே அல்லது மலப்பரிசோதனை மூலம் குடல் புண்ணை அறியலாம். அமிலத்தன்மையை குறைப்பதற்கான மருந்துகள் குடல் புண்ணுக்குத் தரப்படுகின்றன.

குடலில் இரத்தக்கசிவு இருந்தால் இரத்தம் ஏற்ற வேண்டும். அறுவை சிகிச்சை மூலம் இரத்த கசிவை நிறுத்தலாம்.

# பற்களைப் பலப்படுத்தும் ஆலம் விழுது



சாலையோரங்களில் வளர்ந்து நிழல் தரக்கூடியது ஆல மரம். இது அத்தி வகையை சேர்ந்தது. ஆலமரத்தின் இலைகள் மேல் பூச்சு மருந்தாக பயன்படுகிறது. புண்களை ஆற்றக் கூடிய தன்மையை கொண்டது. பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்ட ஆலமரத்தின் இலைகள் பழங்கள், வேர்கள், பட்டை, விழுது ஆகியவை மருந்தாகிறது. ஆலமரத்தின் இலையை ஒடித்தால் கிடைக்க கூடிய பாலை பற்கள், ஈறுகளின் மேல் வைத்தால் அவைகள் பலப்படும்.

ஆலமரத்தின் பட்டையைப் பயன்படுத்தி வயிற்று புண், வாய் புண்ணுக்கான மருந்து தயாரிக்கலாம். ஆலமரத்தின் பட்டையுடன் சீரகம் சேர்த்து கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்து வர சர்க்கரை நோய் கட்டுப்படும். ரத்தத்தில் உள்ள சர்க்கரையை குறைக்கும். வயிற்றுக் கோளாறுகளை சரிசெய்கிறது. வயிற்று வலி, வயிற்று புண் குணமாகும். வெள்ளைபோக்கு பிரச்னை சரியாகும். ஆலமர விழுதுகள் பல் துலக்க பயன்படுகிறது. இது நோய்களை நீக்கும் தன்மை கொண்டது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். பூஞ்சை காளான்களை போக்கும். பற்கள், ஈறுகளை பலப்படுத்தும். பற்கள் நீண்ட நாட்கள் இருப்பதற்கு விழுது பயன்படுகிறது.

குழந்தை இல்லாதவர்கள் ஆலம்வித்து பொடியை ஒரு ஸ்பூன் பாலில் கலந்து குடிக்கலாம். ஆலம் வித்து நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். காய்ச்சிய பாலுடன் ஆலம் வித்து பொடி, சிறிது பனங்கற்கண்டு சேர்த்து இரவில் படுக்கபோகும் முன்பு குடித்துவர குழந்தை இன்மைக்கு மருந்தாகிறது. ஆலமரத்தின் பழத்தை பயன்படுத்தி மலச்சிக்கலுக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு பாத்திரத்தில் நெய் விடவும். இதனுடன் ஆலம் பழத்தின் பசையை ஒரு ஸ்பூன் சேர்க்கவும். இது நன்றாக வதங்கிய பின் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தேன் சேர்த்து குடித்துவர மலச்சிக்கல் சரியாகிறது. அத்தி பழத்தில் உள்ள சத்துக்கள் இதிலும் உண்டு. வைட்டமின், மினரல் உள்ளிட்டவை இருக்கின்றன.

குழந்தையின்மைக்கு மருந்தாகிறது. உயிரணுக்களை அதிகரிக்க செய்கிறது. ஆலமர இலைகளை பயன்படுத்தி தோல்நோய்களுக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். ஆலமர இலை பசையுடன் தேங் காய் எண்ணெய் விட்டு தைலப் பதத்தில் காய்ச்சவும். இதை மேல் பூச்சாக பூசும்போது தோல் நோய்கள் குணமாகும். புண்கள் ஆறும். தோலில் ஏற்படும் கருப்பு தன்மை, அரிப்பு சரியாகிறது. ஆலம் இலைகளை பயன்படுத்துவதால் பல், ஈறுகளை வீக்கம் வற்றிபோகும். பற்கள் உறுதியாக்கும். ஆலம் விழுதால் பல் துலக்குவதால் பற்கள் கெட்டிப்படும். ஆலம் விழுதை இடித்து எண்ணெய்யில் இட்டு காய்ச்சி தலையில் தட வினால் முடி நன்றாக வளரும்

# கோடை காலத்துக்கான உணவுப் பழக்கம்

கோடை காலத்தில் வெயிலின் தாக்கத்தால் உடலில் உள்ள நீர்ச்சத்து மற்றும் உப்புச் சத்து ஆகியவை குறையும். இதனைத் தடுக்க நீர்ச்சத்து அதிகம் உள்ள பழங்களை உட்கொள்ள வேண்டும்.

உடலில் தண்ணீர் இருப்பை சரியான அளவில் வைத்துக் கொள்ள தினமும் 8 தம்ளர் சுத்தமான தண்ணீரை குடிக்க வேண்டும். மேலும் மோர், பழச்சாறுகள் ஆகியவற்றையும் உட்கொள்ளலாம். உடலில் இருந்து உப்புச்சத்து வெளியேறுவதால், சோடியம் மற்றும் பொட்டாசியம் அதிகம் உள்ள இளநீரை அருந்தலாம். உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் இளநீரை அதிகம் பருகாமல் இருக்க வேண்டும். இல்லையென்றால் உடலில் உப்பு அளவு அதிகரித்து விடும்.

சுகாதாரமான முறையில் விற்கப்படும் தர்பூசணி பழம், கிர்ணி பழம், திராட்சை, கொய்யா போன்ற பழங்களை சாப்பிடலாம்.

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போது மிகப்பெரிய ஒரு வரலாற்றுச் சாதனையைப் புரிந்த மனமகிழ்ச்சி தமிழ் மக்களிடம் இருந்தது. யுத்த வெற்றியில் திளைத்திருந்த அன்றைய அரசாங்கத்துக்கு தக்க பதிலடி கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை மிகச் சரியான வகையில் நிறைவேற்றிய திருப்தி தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது. ஆயுதத்தால் அடக்கிய அரசாங்கததுக்கு வாக்கின் பலத்தை உணர்த்திய அலை ஓய்வதற்கிடையில் அமைச்சுப்பதவியைப் பெறுவதற்கான நுண் அரசியல் ஆரம்பமாகியது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளை தமிழ் அரசுக் கட்சி மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாகத் தொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குற்றச்சாட்டை தமிழ் அரசுக்கட்சி நிலை பெற்றது. வினைத்திறன் அற்ற அமைச்சர்களை மாற்றி அவர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்க வேண்டும் என்ற கோஷம் மேலெழுந்தது.

வடமாகாணசபைத் தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்றது. மாகாணசபைக் கட்டடம், அமைச்சர்கள் நியமனத்தில் ஏற்பட்ட இழுபறி காரணமாக ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி அமைச் சர்கள் சத்தியப்பிரமாணம் செய்தார்கள். இரண்டரை வருடங்களில் அமைச்சரவை மற்றம் செய்யப்படும் என அப்போது தெரிவிக்கப்பட்டது. இதனை மக்கள் மறந்துவிட்டார்கள். சக உறுப்பினர்கள் மனதில் வைத்திருந்து இப்போது ஞாபகப்படுத்துகிறார்கள். வடமாகாணசபையின் அமைச்சர்களை மாற்ற வேண்டும் என கோரிக்கை விடுக்கும் அணிக்கு வடமாகாணசபையின் பிரதியினால் அமைச்சர்களை மாற்ற வேண்டும் என அன்ரனி ஜெகநாதன் வாதாடுகிறார்.

யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் அமைச்சராக இல்லை. தான் பிரதிநிதித்துவப்படுத்தும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமைச்சுப் பதவி ஒன்று கிடைக்காத காரணத்தினால் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என அன்ரனி ஜெகநாதன் கூறியுள்ளார்.

இதனால், இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை செய்து முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என தான் கோரிக்கை விடுத்துள்ள

அத்துடன் வடக்கு மாகாண சபையில் இருக்கும் தற்போதைய அமைச்சர்கள் மூலம் எதிர்பார்த்த அபிவிருத்தியை அடைய முடியாது. தற்போதுள்ள அமைச்சர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களின் அபிவிருத்திக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கி வருவதாகவும் போரில்


யின் அமைச்சர்களை மாற்ற வேண்டும் என்ற கடிதத்தை தலைவர் இரா.சம்பந்தனிடம் அன்ரனி ஜெகநாதன் கையளித்தார். வடமாகாண முதலமைச்சர், அவைத் தலைவர், அமைச்சர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. அமைச்சர்களை மாற்ற வேண்டும் என்ற கடி



# ஏமாற்றம் தந்த வடமாகாண அமைச்சரவை மாற்றம்

மறுத்தாலும் ஏனைய கட்சிகள் ஏற்கத்தயாராக இல்லை. நான்கு அமைச்சுப்பதவியைப் பெறுவதற்கான மரதன் நடைபெற்றது. தோழமைக் கட்சித் தலைவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள். அன்று ஆரம்பமான அதிருப்தி இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது. அமைச்சர்கள் மீது எதிர்க்கட்சிகளும் பொது மக்களும் குறைகூறிய காலம் போய் அவர்களை மாற்ற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சக உறுப்பினர்கள் பேர்க்கொடி தூக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் இடையிலான விரிசல் உச்சக்கட்டத்தை அடைந்த போது முதலமைச்சரை மாற்றுவதற்கான சதி உருவாகிறது என்ற கருத்து மேலோங்கியது. அந்தப் பிரச்சினை அடங்கியபோது அமைச்சர்களுக்கு எதிரான கருத்து முன்



அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் உரத்துக் குரல் கொடுக்கிறார். வடமாகாணசபையில் 30 உறுப்பினர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். 16 உறுப்பினர்கள் அமைச்சர்களை

மாற்ற வேண்டும் என்ற கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்கள் கை எழுத்திட்டமை

தாகவும் ஜெகநாதன் கூறியுள்ளார். வடக்கு மாகாண சபை யில் அங்கம் வகிக்கும் யாழ்ப் பாணம், கிளிநொச்சி, மன்னார், வவு னியா மாவட்டப் பிரதிநிதிகளுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சு பதவிகள் வழங்கும் போது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமைச்சு பதவிய வழங்காதது அநீதியானது.

பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தியை புறந்தள்ளியுள்ளதாகவும் ஜெகநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடமாகாணசபையின் அமைச்சர்களை மற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஒருவரை மட்டும் குறிவைக்காது நான்கு அமைச்சர்களையும் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை பெண்களுக்கு மதிப்புக்கொடுத்து அமைச்சுப்பதவி கொடுக்க வேண்டும் என்ற ஆதங்கம் பெண்களிடம் இருக்கிறது. பெண்களின் மனதில் உள்ள விருப்பம் வெளிவரவில்லை.

வடமாகாணசபை உறுப்பினர்களுக்கும் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது வடமாகாணசபை

தத்தை வாங்கிய தலைவர், அமைச்சர்களை மாற்றவேண்டிய அவசியம் இல்லை என்று பதிலளித்தார்.

வடமாகாணசபையில் சில குறைபாடுகள் இருக்கிறதென வெளியான விமர்சனங்களை ஏற்றுக்கொண்ட தலைவர், அமைச்சர்களின் செயற்பாடு திருப்திகரமாக இருக்கிறதெனத் தெரிவித்தார். முதலமைச்சர் மீதும், அமைச்சர்கள் மீதும் பிழை இல்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள குறைபாடுதான் இதற்குக் காரணம் என்றார். அரசியலமைப்பை மீறி முதலமைச்சரும் அமைச்சர்களும் செயற்பட முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இரண்டரை வருடங்களில் அமைச்சர் பதவி கைவிட்டுப் போகும் எனப் பயந்தவர்கள் நிம்மதியடைந்தனர். அமைச்சராகலாம் என நினைத்தவர்கள் ஏமாந்து போனார்கள்...

இலங்கையில் தமிழ் மொழி அரச கரும மொழியாக காணப்படுகிறதே தவிர நடைமுறையில் அவ்வாறு இல்லை என பலராலும் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

மத்திய அரசால் தமிழ் மொழில் வெளியிடப்படுகின்ற உத்தியோக பூர்வ அறிவிப்புகள், மற்றும் அரச திணைக்களங்கள், அலுவலகங்களின் பெயர் பலகைகள் என எல்லா இடங்களிலும் மிக மோசமான தமிழ் மொழி தவறுகள் காணப்படுகிறது.

நாட்டின் தெற்கு பகுதிகளில் சட்டத்திற்காக மும்மொழிகளிலும் அறிவிப்புகள் பெயர்பலகைள் இருக்க வேண்டும் என்பதற்காக தமிழ் மொழியை பயன்படுத்துகின்றார்களே தவிர, அங்கு எழுதப்பட்டிருக்கின்ற தமிழ் மொழியில் இருந்து எந்த அர்த்தத்தையும்




# தமிழ் திட்டமிட்டு கொல்லப்படுகிறதா?

எந்தத் தமிழராலும் பெற்றுக் கொள்ள முடியாது

தெற்கில்தான் அப்படியென்றால் வடக்கிலும் அரச திணைக்களங்களின் பெயர் பலகையில் மிக மோசமான தமிழ் பிழைகள் சமீப காலமாக காணப்படுகிறன. அதற்கான அண்மைய உதாரணம் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் பெயர் பலகையில் காணப்பட்ட தமிழ் பிழை.

(இது தற்போது பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்பட்டு திருத்தப்பட்டுள்ளது)

மேலும் தற்போதும் கூட கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமான போக்குவரத்தில் ஈடுப்படுகின்ற குளிரூட்டப்பட்ட புகையிரதத்தில் முதலாம் வகுப்புக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம் என்பதற்கு பதிலாக முதலாம் கடுப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆசனம் என எழுதப்பட்டிருக்கிறது. இதனை தவிர பேரூந்துகளின் அறிவிப்புகள், மற்றும் நாட்டின் தலைநகரத்தை கூட கொழும்பு என்பதற்கு பதிலாக ஒரு பேரூந்தில் சொழும்பு என எழுதப்பட்டிருக்கிறது.

மேலும் கையடக்க தொலைபேசிக்கான மீள் நிரப்பும் அட்டை, மலசல கூடம், என எல்லா இடங்களிலும் தமிழ் பிழை தாராளமாக காணப்படுகிறது. இது திட்டமிட்டு செய்யப்படுகிறதா? அல்லது தெரியாது செய்யப்படுகிறதா? வடக்கில் உள்ள அரச திணைக்களங்களில் பெயர்ப் பலகையில் கூட மிக மோசமான தமிழ் பிழைகள் காணப்படுகின்ற போது கூட அங்கு பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அதனை பத்திரிகையில் சுட்டிக் காட் டும் வரைக்கும் எவ்வாறு தெரியாது இருந்தது?

நாட்டில் தேசிய மொழிகள் மற்றும் ஒருமைபாட்டுக்கு என தனியான அமைச்சு அதற்கு திணைக்களங்கள் அந்த திணைக்களங்கள் மாவட்ட மாகாண மட்டங்களில் என காணப்படுகிறது. இருந்தும் தமிழ் மொழி தவறுகளும் எல்லா இடங்களிலும் காணப்படுகிறன.

இலங்கையில் தமிழ் மொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு இங்கு தரப்பட்டுள்ள படங்கள் சான்றுபகர்கின்றன.



## சமந்தாவின் தாயாக நதியா

தமிழ்ச் சினிமாவில் பல்வேறு நடிகர், நடிகைகளுக்கு அம்மாவாக நடித்துள்ள நதியா, தெலுங்கு படமொன்றில் சமந்தாவுக்கு தாயாக நடிக்க உள்ளார். தென்னக திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் நதியா. ஆண்டுகள் பல கடந்துவிட்டாலும் இன்னும் இளமை மாறாமல் அப்படியே இருக்கிறார். அவ்வப்போது சில படங்களில் முக்கிய வேடங்களில் தலைகாட்டி வருகிறார். ஏற்கெனவே தமிழில் வந்த 'எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி' படத்தில் ஜெயம் ரவியின் அம்மாவாக நடித்த நதியா, இப்போது ஒரு தெலுங்கு படத்தில் சமந்தாவின் தாயாக நடிக்கிறார். 'அ.ஆ.' என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்தப் படத்தின் கதாநாயகியாக சமந்தா நடிக்கிறார். சமந்தாவின் பெற்றோராக நதியாவும் நரே/ம் நடித்துள்ளனர். படத்தின் நாயகன் நிதின். விக்ரம் ஸ்ரீனிவாஸ் இயக்குகிறார். "நல்ல கதை என்பதால் உடனே நடிக்கச் சம்மதித்தேன். எனக்குப் பிடித்தமான, மனதை தொடக்கூடிய, சுவாரசியமான கதைகளில் நடிக்க நான் எப்போதுமே தயங்கியதில்லை. சமந்தா அழகாக இருக்கிறார். நன்றாக நடிக்கவும் செய்கிறார். அவருக்குத் தாயாக நடிப்பதில் மகிழ்ச்சி," என்கிறார் நதியா.

## அஜீத்தின் ஜோடியாகும் அனுஷ்கா

வேதாளம்' படத்துக்குப் பிறகு, அஜீத் நடிக்கும் 57 ஆவது படத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இந்த படத்தையும் சிவா இயக்குகிறார். அஜீத் பிறந்த நாளான மே 1 ஆம் திகதி இந்த படத்துக்கான பூஜை போடப்படுகிறது. படப்பிடிப்பு ஜூன் முதல் வாரத்தில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்படத்தில் ஹீரோயினாக நடிக்க பாலிவுட் நடிகை கிரிதி சனோனிடம் பேச்சு வார்த்தை நடந்து வந்தது. ஆனால், சமீபத்தில் வந்த தகவலின்படி இவர் இதில் நடிக்கவில்லை என நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இப்போது இந்த படத்தில் அஜீத் ஜோடியாக அனுஷ்கா நடிக்க இருப்பதாக தெரியவந்துள்ளது. 'என்னை அறிந்தால்' படத்துக்குப் பிறகு இதில் மீண்டும் இருவரும் ஜோடி சேருகிறார்கள். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





## பாலிவுட்டில் இணையும் ஸ்ரேயா - டாப்ஸி

கடந்த ...
அதன் ...
திடீரெ ...
இருந்த ...
சில நா ...
கோலி ...
தரும் ...
ஆனா ...
நிலை ...
ருக்கிற ...
நடிகர் ...
தமிழ் ...
பார்த்த ...
இயக்கு ...
பிரகாவ ...
தவற ...
மற்ெ ...
நால ...
ரா ...
துள் ...
பற்றி ...
தமா ...
தேர்வு ...
களாக ...

## தன்ஷிகாவுக்காக....

சமுத்திரக்கனி, கீதாரி என்ற நாவலை 'கிட்ணா' என்ற பெயரில் படமாக தயாரித்து வருகின்றார். இதற்கான போட்டோ ஷூட் மற்றும் டெஸ்ட் ஷூட் முடிந்தது. இது ஒரு மலைவாழ் மக்களின் கதை. சமுத்திரக்கனி நடுத்தர வயது மலைவாழ் மனிதராக நடிக்கிறார். அவரது மனைவியாக தன்ஷிகா நடிக்கின்றார். படம் துவங்கும் நேரத்தில் தன்ஷிகாவுக்கு கபாலியில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் சமுத்திரக்கனி தன் படத்துக்காக அந்த வாய்ப்பை தவற விட வேண்டாம் என்று சொல்லி தன்ஷிகாவை கபாலிக்கு விட்டுக் கொடுத்தார். துற்போது கபாலி படப்பிடிப்பு முடிந்துவிட்ட நிலையில் தன்ஷிகா கிட்ணாவுக்கு தயாராகிவிட்டார். ஆனால் இதற்கிடையில் சமுத்திரக்கனி தனது அப்பா படத்தில் பிஸியாகிவிட்டார். கபாலிக்கு பிறகு தன்ஷிகாவும் பிஸியாகிவிடுவார். எனவே கிட்ணா வெயிட்டிங்.

## ரஜினியுடன் நயன்

த்ரிஷா உள்ளிட்ட சில நடிகைகளுக்கு, ரஜினியுடன் நடிக்க வேண்டும் என்பது கனவாகவே இருந்து வரும் நிலையில், சந்திரமுகி, சிவாஜி மற்றும் குசேலன் என, மூன்று படங்களில் ரஜினியுடன் நடித்தவர் நயன்தாரா. இந்நிலையில், மலையாளத்தில் மம்முட்டியுடன் அவர் இணைந்து நடித்த, பாஸ்கர் தி ராஸ்கல் என்ற படத்தை தமிழில் ரஜினியை வைத்து ரீ - மேக் செய்ய, முயற்சித்து வருகிறார், அப்பட இயக்குனர் சித்திக். அப்படி, ரஜினி கால்ஷீட் கொடுத்து விட்டால், அப்படத்திலும், நயன்தாரா தான் கதாநாயகி. இதனால், அவருக்கு அடிக்கப் போகும் அதிர்ஷ்டத்தை எண்ணி, மற்ற நடிகைகள் கடுப்பில் உள்ளனர்.

கத்தி படத்தின் மூலம் லைக்கா புரொடக்ஷன்ஸ் தமிழ்சினிமாவில் தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்தியது. படங்களை தயாரிப்பது, விநியோக உரிமையை வாங்கி வெளியிடுவது என பிஸியாக இருக்கும் இந்த நிறுவனம், ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் 'எந்திரன்' 2 ஆம் பாகத்தை தற்போது பிரம்மாண்டமாக தயாரித்து வருகிறது. அதோடு கமலின் 'மருதநாயகம்' படத்தையும் தயாரிப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இந்நிலையில், ஷங்கருடன் இணைந்து இன்னொரு படத்தையும் தயாரிக் கிறது லைக்கா புரொடக்ஷன்ஸ். ஷங்கரின் 'எஸ் பிக்சர்ஸ்' நிறுவனம் தயாரித்த "இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி" படத்தின் 2 ஆம் பாகத்தை எடுக்க எஸ் பிக்சர்ஸ் நிறுவனத்துடன் தற்போது லைக்காவும் கைகோர்த்துள்ளது. இந்த செய்தியை அந்நிறுவனத்தின் சிஇஓ ராஜு மகாலிங்கம் தனது ருவிட்டர் பக்கத்தில் உறுதிசெய்துள்ளார்.

## வருகிறார் புலி...





அட்லீ இயக்கத்தில் விஜய், சமந்தா, எமி ஜாக்சன், மகேந்திரன், ராதிகா, ராஜேந்திரன், பேபி நைனிகா, உள்ளிட்ட பலர் நடிப்பில் கடந்த தமிழ் புத்தாண்டு தினமான ஏப்ரல் 14 ஆம் திகதி வெளியான படம் தெறி. படத்திற்கு இசை ஜி.வி.பிரகாஷ் குமார். இப்படம் வெளியாவதில் பல சிக்கல்கள் இருந்தன. இப்படம் தெலுங்கில் போலீஸ் என்னும் பெயரில் வெள்ளியன்று வெளியானது. "தெறி" என்றால் மலையாளத்தில் கெட்ட வார்த்தை. இப்படத்தின் டப்பிங் உரிமம் பெற்று வெளியிட்டுள்ளார் தில் ராஜு. இப்படத்திற்கு தெலுங்கில் முதலில் வைக்கப்பட்ட பெயர் போலீஸோடு. இந்தப் பெயர் பொலிஸ்காரன் என்னும் பொருள் படும்படி கொஞ்சம் மரியாதை குறைவது போல் இருப்பதால் தலைப்புக்கு பொலிஸ் வட்டாரங்கள் வருத்தம் தெரிவித்துள்ளன. இதனால் படத்திற்கு போலீஸ் என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. மேக்கிங் ஸ்டைலிஷ் ஆனால் எப்போதுமான பொலீஸ் கதை என தெலுங்கிலும் கலவையான விமர்சனங்களைப் பெற்றுள்ளது தெறி, போலீஸ்.

## தெலுங்கில் 'தெறி'க்கு ஏன் பெயர் மாறிச்சு?

கடந்த ஆண்டு “வை ராஜா வை“ படத்தில் நடித்தார் டாப்ஸி. அதன்பிறகு தமிழில் பட வாய்ப்பில்லாமல் இருந்தது. திடீரென்று சிம்பு நடிக்க செல்வராகவன் இயக்குவதாக இருந்த “கான்“ படத்தில் ஹீரோயினாக நடிக்க விருந்தார். சில நாட்கள் படப்பிடிப் பிலும் பங்கேற்றவர் இந்த படம் கோலிவுட்டில் கைகொடுக்கும் என்று நினைத்தார். அதிர்ச்சி தரும் வகையில் “கான்“ படம் டிராப் ஆனதில் அப்செட் ஆனார். வேறு தமிழ் படம் கைவசம் இல்லாத நிலையில் பாலிவுட்டில் கவனம் செலுத்திக் கொண்டி ருக்கிறார். சமீபத்தில் டாப்ஸியை சந்தித்தார் வில்லன் நடிகர் பிரகாஷ்ராஜ். அவரை கண்டதும் மீண்டும் தமிழ் படம் கைக்கு வரப்போகிறது என்று எதிர் பார்த்த டாப்ஸி ஏமாந்தார். இந்தியில் தான் இயக்கும் புதிய படத்தில் நடிக்க டாப்ஸியிடம் பிரகாஷ்ராஜ் கால்ஷீட் கேட்க வந்த வாய்ப்பை தவறவிடாமல் டாப்ஸியும் ஓ.கே சொன்னார். மற்றொரு நாயகியாக நடிக்கிறார் ஸ்ரேயா. நானா படேகர் ஹீரோ. இதுபற்றி பிரகாஷ் ராஜ் கூறும்போது “வெவ்வேறு வய துள்ள 2 தம்பதிகளின் வாழ்க்கையை பற்றிய கதை. நானா படேகர் பொருத் தமானவராக இருந்ததால் அவரை தேர்வு செய்தேன். அவரது காதலி களாக ஸ்ரேயா- டாப்ஸி நடிக்கின்றனர்.

கிட்ணா' என்ற
ர். இதற்கான
முடிந்தது. இது
முத்திரக்கனி
நடிக்கிறார்.
கின்றார். படம்
கபாலியில்
சமுத்திரக்கனி.
தவற விட
வை கபாலிக்கு
பி படப்பிடிப்பு
ட்ணாவுக்கு
டையில்
ஸியாகிவிட்டார்.
ாகிவிடுவார்.
ங்.

ஷன்ஸ்
ரத்தை
. விநியோக
பிஸியாக
க்கத்தில்
தை தற்போது
அதோடு
பாரிப்பதற்கு
பல்கள்
.
ட்த்தையும்
. ஷங்கரின்
ம்சை அரசன்

த்துடன்
து. இந்த
ஜ"

ர் புலிகேசி!



## வீர சிவாஜியில் விக்ரமுடன் ஷாமிலி

மெட்ராஸ் எண்டர்பிரைசஸ் தயாரிக்கும் படம் ‘வீர சிவாஜி'. இதில் விக்ரம் பிரபு நாயகனாக நடிக்கிறார். நாயகியாக ஷாமிலி நடிக்கிறார். இவர்களுடன் ஜான்விஜய், ரோபோசங்கர், யோகிபாபு, ‘நான் கடவுள்' ராஜேந்திரன், மனிஷாஸ்ரீ, வினோதினி, ஸ்ரீரஞ்சனி, இயக்குநர் மாரிமுத்து, சாதன்யா, குட்டி ஆகியோர் நடிக்கிறார்கள். சுகுமார் ஒளிப்பதிவை கவனிக்க டி.இமான் இசையமைத்துள்ளார். கதை, திரைக்கதை எழுதி இயக்குபவர் கணேஷ் விநாயக். அதிரடி சண்டைக் காட்சிகளுடன் குடும்பப் பொழுதுபோக்கு படமாக உருவாகிறதாம். இதில் ஷாமிலி நடிகர் விஜய்யின் தீவிர ரசிகையாக நடித்து வருவதாகக் கூறப்படுகிறது. அது மட்டுமல்ல, அவரது கதைப்படி படத்தில் அவரது பெயர் அஞ்சலியாம். மணிரத்னம் இயக்கத்தில் வெளிவந்த ‘அஞ்சலி' படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக சினிமாவுக்கு அறிமுகமானவர் ஷாமிலி என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தில் விக்ரம் பிரபு வாடகைக்கார் ஓட்டுநராக நடிக்கிறார். புதுவையில் இருந்து கன்னியாகுமரி வரை செல்லும் இடைப்பட்ட பயணத்தில் நடக்கும் சம்பவங்களே இப்படத்தின் கதையாம்.



# உண்மை வெளிவருகிறது

பகுதி 9

இரு தலைவர்களுக்கும் இடையே, போட்டியுணர்வு மோசமாகியதால், மதறாஸை தளமாகக் கொண்டிருந்த ரெலோ ஆயுதப் போராளிகளில் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்திற்குச் சென்று, இரண்டு போட்டித் தலைவர்களையும் சமாதானத்திற்கு கொண்டு வருமாறு ஸ்ரீ சபாரத்தினத்தைக் கேட்டுக்கொண்டார்கள். ஜனவரி மாதம், ஸ்ரீ சபாரத்தினம் மிக கூடியளவில் ஆயுதம் தரித்த டசின் கணக்கான ரெலோ பையன்கள் பாதுகாப்பு வழங்க யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

யாழ்ப்பாண தீபகற்பத்தில் உள்ள சகல ரெலோ முகாம்களுக்கும் அவர் சென்றார். ஆயினும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அமைந்திருந்த கல்வியங்காடு பிரதான முகாமிலேயே அவருடைய பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டார்.

10 ஆம் திகதி மார்ச் மாதம் 1986 ஆம் ஆண்டு, பொப்பி நெல்லியடிக்குச் சென்று, தாஸை சந்தித்து, காயமுற்றிருக்கும் ரெலோ போராளிகள் சிலரைச் சந்திக்க மறுதினம் யாழ்ப்பாண மருத்துவமனைக்கு வருமாறு கேட்டுக் கொண்டார்.

மறுதினம் தாஸ் தனது நான்கு மெய்ப்பாதுகாவலர்களுடன் வந்தடைந்த போது, பொப்பியும் அவரது ஆட்களும் துப்பாக்கிகளுடன் காத்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். புலோலி, மந்திகையைச் சேர்ந்த புறூஸ் ஒரு வேட்டுவைத்தார். தாஸ் கொல்லப்பட்டார். அவரது நான்கு மெய்ப்பாதுகாவலர்களும் கூட கொல்லப்பட்டார்கள். மருத்துவமனைக்குள் மேலும் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில், ஆதார நீதிமன்ற நீதவான் ஒருவர் கொல்லப்பட்டார். மருத்துவமனை ஊழியர்கள் மூவர் காயமுற்றார்கள். புலோலி, மந்திகையைச் சேர்ந்த புறூஸ் அந்தக் காலத்தில் கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்களில் சம்பந்தப்பட்ட இரக்கமற்ற பேர் வழியாவார். அவரை அவருடைய குழந்தைப் பருவத்திலிருந்து எனக்குத் தெரியும். அவர் எனது வார்த்தைகளுக்கு மதிப்பளித்தார்.

ஒரு கட்டத்தில், செல்வம் அடைக்கலநாதனை வேட்டையாட புறூஸ் தேடித்திரிந்து கொண்டிருந்தார். புறூஸிடமிருந்து தன்னைப் பாதுகாக்கும்படி செல்வம் அடைக்கலநாதன் என்னிடம் வேண்டிக்கொண்டார். செல்வம் அடைக்கலநாதனாலும் அவரின் ஆட்களினாலும் கொல்லப்பட்டவர்களின் பட்டியல் ஒன்றை புறூஸ் எனக்குத் தந்தார். அவர் கொல்லப்பட வேண்டியவர் என்று புறூஸ் கூறினார். ஆயினும் அவரை விட்டுவைக்க ஒத்துக்கொண்டார். அவர் விடை பெற்றுச் சென்ற போது கூறிய வார்த்தைகளாவன: "ஐயா, அவரை விட்டு வைக்கும்படி கேட்டுக் கொண்டதற்காக நீங்கள் மனம் வருந்துவீர்கள்."


பல கொலைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுக்காக தாஸ் மீதும் அவரது குழு மீதும் குற்றம் சுமத்தி, ரெலோ சுவரொட்டிகளை ஒட்டியது. இது ரெலோவுக்குள் பாரதூரமான நெருக்கடியை உருவாக்கியது. தாஸ் குழுவைச் சேர்ந்தவர்கள் பலர் ரெலோ விலிருந்து பிரிந்து சென்றார்கள். இந்தக் கொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். ஆயினும் தில்லையினால் வழிநடத்தப்பட்ட ஸ்ரீ சபாரத்தின விசுவாசிகள் மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இரண்டு மாணவர்களைக் கொன்றார்கள். எட்டுப் பேர் காயமுற்றார்கள்.

25 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 1986 ஆம் ஆண்டு, இலங்கைக் கடற்படை விடுதலைப்புலிகளின் படகை சுட்டு அழித்தது. மரணமானவர்களில் மேஜர் அருணாவும் உள்ளடங்குவார் என்று புலிகள் அறிவித்தார்கள். அந்த நாளுக்கு முன்னதாக, 24 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 1986 ஆம் ஆண்டு, ரெலோவின் படகு ஒன்றை தகர்த்து, 10 ரெலோ வினரைக் கொன்றது. இரண்டு குழுக்களும் தத்தமது மரணமானவர்களுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக தாக்குதல்களுக்கு அறைகூவல் விடுத்தன. ரெலோ மரணமான அதன் போராளிகளுக்கு இரங்கல் தெரிவிக்கும் சுவரொட்டிகளை ஒட்டியது. அந்த சுவரொட்டிகளை புலிகள் கிழித்தார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டது. தமது சுவரொட்டிகளை அகற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க, புலிகள் பஷீர் காக்கா மற்றும் முரளி ஆகிய தனது உறுப்பினர்களை கல்வியங்காட்டில் உள்ள ரெலோ முகாமுக்கு அனுப்பினர். புலிப் போராளிகள் ரெலோ முகாமை சென்றடைந்ததும், பிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டார்கள். தது போராளிகளில் நான்கு பேரை புலிகள் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டது.

பின்னர், அது அதன் தலைவர்களில் ஒருவரான லிங்கத்தை ரெலோ முகாமுக்கு அனுப்பியது. அங்கு அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மதறாஸிலுள்ள இந்தச் சம்பவம் அறிவிக்கப்பட்டதன் விளைவாக, ரொக்கட் ஏவு சுடுகலங்கள் மற்றும் கனரக ஆயுதங்களைப் பாவித்துக்கொண்டு, நூற்றுக் கணக்கான எல்.ரி.ரி.ஈ. போராளிகள் டெலோவின் முகாம்களுக்குள் டெலோ போராளிகளைக் கொன்று குவிக்க திடீர் நகர்வை மேற்கொண்டனர். தாக்குதலுக்கு கட்டளையிடப்பட்டது. எல்.ரி.ரி.ஈ.யின் யாழ்ப்பாண கொமாண்டன்ட் வழிநடத்தினார்.

கல்வியங்காடு முகாமில் இருந்து ஸ்ரீ சபாரத்தினம் தப்பியோடினார். அவர் இடத்திற்கிடம் ஓடியவாறு இருந்தார். ரெலோவுடன் மேற்கொண்டிருக்கும் போராட்டத்தில் தலையிட வேண்டாம் என்று புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றை எல்.ரி.ரி.ஈ. எச்சரித்தது. ஒதுங்கி இருக்குமாறு சகலரும் கேட்கப் பட்டனர்.




எல்.ரி.ரி.ஈ. பிரசார வான்கள் யாழ்ப்பாண தீபகற்பத்தை சுற்றி வந்து, இலங்கையில் ரெலோ கலைக்கப்பட்டுவிட்டது எனவும் ஸ்ரீ சபாரத்தினத்திற்கோ ஏனைய ரெலோ உறுப்பினர்களுக்கோ புகலிடம் அளிப்பதாகக் காணப்படுவோர், மரணத்தை அழைப்பவர்களாவர் என்றும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தது.

தீபகற்பத்திலுள்ள இந்துக் கோவில்களில் இருந்து களவாடப்பட்ட பொருட்கள் உட்பட பெருமளவு திருட்டுச் சொத்துகளை தாம் மீட்டிருப்பதாக எல்.ரி.ரி.ஈ. அறிவித்தது. மக்கள் மீட்டு எடுத்துச்செல்வதற்காக, அவை பகிரங்க காட்சிக்கு வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில், அகோரப் படுகொலைகள் இன்னமும் வெடித்துக்கிளம்ப இருந்தது. மட்டக்களப்பிலுள்ள பிரதான தமிழ்க்குழுக்களை எல்.ரி.ரி.ஈ. யின் தளபதி கடவுள் ஒரு சந்திப்புக்கு அழைத்து, கிழக்கில் எந்த இடத்திலும் சண்டை இருக்காது என்று கூறினார்.

மட்டக்களப்பு மற்றும் கிழக்கு மாகாணத்தின் சகல கட்டுப்பாடுகளும் கொண்ட தளபதியாக குமரப்பாவை எல்.ரி.ரி.ஈ. உடனடியாக அனுப்பியது. கடவுளின் முடிவை குமரப்பா நிராகரித்தார். கட்டளையின்படி அவர் திறமையாக செயல்பட்டு, ரெலோ போராளிகளை நிர்மூலமாக்கினார்.

ரெலோ தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தைத் தேடி, கிட்டுவும் அவரின் ஆட்களும் வீடுவீடாகத் தேடுதல்களை தொடங்கினர். புலிகள் தேடுதல் நடந்துகொண்டிருந்த அதேவேளை, ஸ்ரீ சபாரத்தினத்திற்கு புகலிடம் அளிக்கக்கூடாது என்று ஒலிபெருக்கி மூலம் புலிகள் அறிவித்தனர்.

இறுதியாக, கிட்டுவும் அவரின் ஆட்களும் ஸ்ரீ சபாரத்தினத்தை கோண்டாவிலில் உள்ள புகையிலைத் தோட்டம் ஒன்றில் கண்டு பிடித்தார்கள். அவரை தடுத்து நிறுத்த உடனடியாகவே அவரின் காலுக்கு வெடிவைக்கப்பட்டது. தடுமாறிய ஸ்ரீ சபாரத்தினம் தனது முழங்காலில் விழுந்து, தன்னை உயிருடன் விட்டுவிடும்படி கிட்டுவிடம் மன்றாடினார். பிரபாகரனுடன் தான் பேச்சு நடத்துவேன் என்றும் அவர் தெரிவித்தார். ஆனால், அவருடைய மன்றாட்டத்துக்கு காதில் போட்டுக் கொள்ளும் மனநிலையில் கிட்டு இருக்கவில்லை. அவர் ஏகே – 47 சுழல்துப்பாக்கி மூலம் ரவைகளை பொழிந்து தள்ளினார்.

குதூகலத்தில் இருந்த எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் ஸ்ரீ சபாரத்தினம் சிறைப்பிடிக்கப்பட்டு, கொல்லப்பட்டார் என்றும் ரெலோவுடன் தொடுத்த யுத்தம் முடிந்து விட்டது என்றும் யாழ்ப்பாணம் பூராவும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தார்கள். 25க்கும் அதிகமான ரவைக் காயங்களுடனான சபாரத்தினத்தின் சடலம் கோண்டாவில் பஸ் நிலையத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்வதற்காக அவருடைய குடும்பத்தார்களிடம் கொடுக்கப்பட்டது.

எல்.ரி.ரி.ஈ. – ரெலோ யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, பல் ரெலோ போராளிகளுக்கு புளொட் புகலிடம் வழங்கியது. ரெலோவின் யாழ்ப்பாண தளபதி பொப்பி இந்தியாவுக்குச் தப்பிச்செல்ல அது உதவியது. எல்.ரி.ரி.ஈ. இனால் தாக்கப்படவிருக்கும் அடுத்த குழு தான்தான் என்பதை புளொட் நன்றாகவே அறிந்திருந்தது. ஆகவே, தாம் யாழ்ப்பாணத்தில் இருந்து விலகிச்செல்வதாக அவர்கள் 29 ஆம் திகதி அக்டோபர் மாதம் 1986 ஆம் ஆண்டு அறிவித்தார்கள்.

இலங்கையில் புளொட் தடை செய்யப்பட்டுவிட்டதாகவும் தம்மிடம் உள்ள சகல ஆயுதங்களையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கையளிக்க வேண்டும் என்று அது புளொட் போராளிகளுக்கு உத்தரவிட்டது.

சிறைப்பிடிக்கப்பட்ட சில ரெலோ உறுப்பினர்களை இனம்காண தமது அலுவலகத்திற்கு வருமாறு 13 ஆம் திகதி டிசம்பர் மாதம் புளொட்டின் யாழ்ப்பாணத் தளபதி மெண்டிஸுக்கு புலிகள் தகவல் அனுப்பினார்கள். வந்தடைந்ததும், அவர் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள "கந்தன் கருணை" என்ற புலிகளின் சிறையில் அவர் அடைக்கப்பட்டார். இது எல்.ரி.ரி.ஈ. இன் பயங்கரமான வதைகூடமாகும்.

கிட்டுவுடன் தொடர்புடையவர்கள் மெண்டிஸை சென்று பார்த்தார்கள். ஈவிரக்கமற்றவிதத்தில் தன்னை நையப்புடைத்தார்கள் என்று அவர் அவர்களிடம் கூறினார். அதைத்தொடர்ந்து புலிகள் மெண்டிஸை சுட்டுக் கொன்றார்கள். அவரின் சடலம்உறவினர்களிடம் திருப்பிக்கொடுக்கப் படவில்லை. அவரின் தங்கச் சங்கிலியையும் உடுபுடவைகளை மட்டுமே எல்.ரி.ரி.ஈ. திருப்பிக் கொடுத்தது.

யாழ்ப்பாண தளபதிப் பதவியிலிருந்து டக்ளஸ் தேவானந்தாவை வெளியேற்றிய பின்னர், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஈவிரக்கமற்ற கே. சுரேஷ் பிரேமச்சந்திரனை அப்பதவிக்கு நியமித்தது. அதிகாரமிக்கதாக அமைப்பை கொண்டு செல்வதன் நடவடிக்கையாக அவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஆயுதப் போராளிகளை மறுசீரமைக்கத் தொடங்கினார்.

(தொடரும்....)

# அழகா ஆரோக்கியமா?

எதில் சம உரிமை வெளிப்படு கிறதோ, இல்லையோ ஆண், பெண் இருபாலரும் அழகு நிலை யங்களுக்கு செல்வதில் தெரிகி றது சம உரிமை. நம் முன்னோர் உடல் நலத்துக்கும், அழகுக் கும், சுகத்துக்கும் கற்றுத் தந் துள்ள ஆயிரமாயிரம் வழிகளை விட்டு விட்டு, இப்படி, 'பார்லர்' நோக்கி படையெடுக்கிறோம்.

சமீபத்தில் ஒரு திருமண வரவேற்பில், இரவு 8:00 மணி வரை மணப் பெண் மேடைக்கு வரவில்லை. காரணம், 4:00 மணி யிலிருந்து, 'மேக்-அப்' நடந்து கொண்டிருந்ததாம். இந்த சம்பவ மாவது, திருமணம் என்பதால் ஒத் துக் கொள்ளலாம். இப்போதெல் லாம், 'பார்லர்' போவதற்கு கார ணங்கள் தேவைப்படுவதில்லை. தெரிந்தவர்கள் வீட்டு விசேஷங் கள், வீட்டில் நடக்கும் சின்னச் சின்ன விழாக்கள் என்று, பெண் களுக்கு ஆயிரம் வழிகள், வாய்ப் புகள்.

கல்லூரி மாணவர்கள் சிலரை கேட்டபோது, தங்கள் தலையில், 'கலரிங்' செய்திருப்பதாகவும், 15 நாட்களுக்கு ஒரு முறை தான் தலைக்கு தண்ணீர் ஊற்ற வேண் டும் என்றும் சொல்கின்றனர். எண் ணெய் குளியலுக்கெல்லாம் வாய்பே இல்லை. நேரமேயில்லை என்று அலட்டிக் கொள்பவர்கள் கூட, பல மணி நேரங்களை, 'பார்லரில;' செலவிடுகின்றனர்.

**ஆபத்தை அறிந்தே...**

ஒரு டாக்டர் புலம்பியது, இப் போது ஞாபகத்திற்கு வந்து தொலைக்கிறது.

'எங்களுக்கு பீஸ் கொடுப்ப தையே, ஏதோ தர்மம் மாதிரி, நாங்கள் கொள்ளையடிப்பது போல் பார்க்கும் அதே மக்கள், ஆயிரம், ஆயிரமாக பார்லரில் கொடுத்து விட்டு பெருமையாக திரும்புகின் றனர்' என்பதே அந்த புலம்பல்.

'சோப்பு, க்ரீம், டியோடிரன்ட்' போன்றவை உடலில் உள்ள, வியர்வை துளைகளை அடைத் துக் கொள்ளக்கூடியவை. சிலர், பார்லரில் சிபாரிசு செய்யும், பேஸ் வாஷ், ஷம்பூ, க்ரீம்களை மட் டுமே பயன்படுத்துவதாய் பந்தா வாக கூறுவர். பக்க விளைவுகள் உண்டு என்று தெரிந்தே தான் இதை செய்கிறோம். 15 நாட்க ளுக்கு ஒரு முறை கண்டிப்பாக செய்துக்கணும்.

'நீங்கள் சிவப்பாக மாறி விடு வீர்கள்' என்று கூறும், 'பிளீச்சிங், பேஷியல் க்ரீம்'களில், 500க்கும் மேற்பட்ட இரசாயனங்கள் இருக் கின்றன என்பது, ஆய்வுகள் தெரி வித்த உண்மை.

**பாகுபாடின்றி...**

'இயற்கையாகவே மூலிகை யால் ஆனது, பக்க விளைவுகள் இல்லை' என்று விளம்பரப்படுத் தும் அழகு சாதன க்ரீம், லோஷன் களை, 'பார்லரில்' கைகளில் உறை போட்டுக் கொண்டு தான் தடவுவர். இது ஏன் என, நாம் யோசிப்பதே இல்லை.

வியாபாரிகளின் விளம்பரங்களும், அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற சுயநலமும், விழிப்புணர்வை அழி க்கும். சிந்தனை தேவையில்லா கல்வியும், நல்லதொரு அறிவியல் வழி வந்த சமூகத்தை அடிமை யாக்கி விட்டது என்று, கதற வேண்டும் போல் உள்ளது.

படிக்காத பெண்கள், படித்த பெண்கள் என்ற பாகுபாடே இல் லாமல், அனைவருமே இப்போது சகஜமாக போய் வரும் இடம், 'பியூட்டி பார்லர்' தான்.

பரீட்சையில் சித்திடையாத ஒரு பெண்ணை, அவள் வீட்டில் அனைவரும், 'ஏதாவது பார்ல ருக்கு வேலைக்குப் போய் படிச் சிட்டு, நீயே ஒரு பார்லர் ஆரம் பிக்கலாமே' என்று அறிவுரை கூறிக் கொண்டிருக்கின்றனர்.

'பார்லர்' நடத்துவது சாதா ரண விஷயம் அல்ல. இயற்கை யோடு விளையாடுவது போன்ற தொழில் அது. உடல் கூறுகள் பற்றி அறிந்து, இரசாயனத்தைப் பற்றி அறிந்து, அறிவியலைப் பற்றி உணர்ந்த பிறகே இந்தத் தொழிலை தொடங்க வேண்டும் என்பது, பலருக்குத் தெரிய வில்லை என்பது, வேதனையான விஷயம்.

'அதற்கென தனி படிப்பு, பயிற்சி, முகாம், எல்லாமே இருக்கு' எனச் சொன்னாலும், அவை எவ் வளவு தூரம் நம்பகமானவை என்பது, அவர்களுக்கே வெளிச் சம். முறைப்படி நடத்தப்படும், 'பார்லர்'களை விரல் விட்டு எண்ணி விடலாம். பிரபல எழுத் தாளர் ஒருவரின் சிவப்பு முகம், 'பார்லர்' செய்த குளறுபடியால், கறுத்துப் போனது, நிறைய பேருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

கர்ப்பிணிப் பெண்கள் புருவ முடி திருத்தக் கூடாது. மாதாந் திர தொந்தரவுகள் இருக்கும் நாட்களில், சில சிகிச்சைகள் எடுத் துக் கொள்ளக் கூடாது போன்ற அடிப்படை விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

**அடிப்படை விஷயம்**

எந்த கிரீம் வாங்கினாலும், அது எதனால் தயாரிக்கப்பட்டது போன்ற அடிப்படையான விஷ யங்களை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இது நம் கடமை. நிறை, குறைகளுக்கு நிவாரணம், நம் வீட்டிலேயே நம் சமையல் அறையிலேயே இருக் கிறது. அதை முழுமையாக தெரிந்து கொள்வோம். நம் பாட்டி, அம்மா எல்லாம் பார்லர் போகாமலேயே அழகாய், அம்ச மாய் இல்லையா?!

நம் வறட்டு வீண் பந்தா வையெல்லாம் தூக்கி போட்டு விட்டு,



இயற்கையான சிகிச் சைகளுக்கு, உணவுமுறை க்கு, அழகு குறிப்புகளுக்கு மாறு வோம். கண்டிப்பாக, நமக்கு அழ கைவிட, ஆரோக்கியம் முக்கியம் என்பது தெரியும் தானே!

**பருக்களுக்கான லேசர் சிகிச் சைக்கு பதில்**

மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு கலந்து, பருக்கள் மீது தடவி, 15 நிமிடத்திற்கு பின், கழுவி விடலாம்.

முல்தானிமட்டியில் பன்னீர் கலந்து, முகத்தில் தடவி உலர்ந்த பின் கழுவ, பருக்கள் மட்டுமல்ல அழுக்கும் போயே போய் விடும்.

**பிளீச்சிங் செய்வதற்கு பதில்**

கொஞ்சம் சர்க்கரை, சில சொட்டுகள் தேங்காய் எண்ணெய், சில சொட்டுகள் தேன் கலந்து, முகம், கழுத்து, கைகளில் தேய்த்து சிறிது நேரத்திற்கு கழுவிவிடலாம்.

**பேஷியல் செய்து கொள்வ தற்கு பதில்**

கடலை மாவு, மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, பாலாடை முத லியவற்றை ஒன்றாக கலந்து, முகத்தில் பூசி குளிர்ந்த நீரால் கழுவினால், முகம், 'பளீச்' என்றாகி விடும்.

**பொடுகு நீங்க லோஷன் போட்டு ஊறவைத்து சிகிச்சை செய்வதற்கு பதில்**

வெந்தயம் ஊற வைத்து அரைத்து தலையில், 'பேக்' போட்டு அலசி விடலாம்.

தயிருடன் வெள்ளை மிளகு தூள் கலந்து முடிக் கால்களில் படும்படி 'மசாஜ்' செய்து அலசி விடலாம்.

அழகை ஆரோக்கியமாக பாதுகாப்போம்.



# வாசலில் மாவிலை கட்டுங்கள்

வீட்டு வாசல் தாண்டினாலே இரைச்சல், புழுதி, கிருமி தொற்று என, பலவகை பிரச்சினைகள்.


வெளியில் போய்விட்டு வீட் டிற்குள் வரும்போது, நாம் மட்டும் வருவதில்லை.

சில, பல கிருமிகளும், நம்மு டனேயே அழையா விருந்தாளி களாய் உள்ளே வர வாய்ப்பு மிக மிக அதிகம்.

நிறைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இருந்தாலும், ஓர் எளிய வழி, வீட்டு வெளி வாசலில், அடிக்கடி மாவிலைத் தோரணம் கட்டுங்கள் விசே ஷங்களுக்கு மட்டும் தான் கட்ட வேண்டும் என்றில்லாமல், மாவி லைகள் கிடைக்கும் போதெல்லாம் வாசல் நிலைப் படியில் கட்டி விடுங்கள்.

'மாவிலை' கரியமில வாயுவை எடுத்துக் கொண்டு, பிராண வாயு வைக் கொடுக்கும். நம் உடம்பின் வியர்வை நாற்றத்தையும், காற்றில் ஆவியாகிப் பரவியிருக்கிற கிரு மிகளையும், வாசலிலேயே தடுத்து அழித்து விடும்.

வீட்டு வாசலும், மங்களகரமாக இருக்கும்!





# உங்கள் கழுத்து கருமையாக உள்ளதா?

சிலர் பார்க்க அழகாக இருப் பார்கள். ஆனால், அவர்களது கழுத்துப் பகுதி மட்டும் கறுத் துப்போய் காணப்படும். வெயிலில் அலைவது கூட இதற்கு கார ணமாக இருக்கலாம். அதனால், முகத்திற்கு பயன்படுத்தும் மேக்-அப்பை கழுத்து பகுதிக்கு சேர்த் துப் போடுவது நல்லது. கழுத்து கருமை நிறம் மறைய சில எளிய வழிமுறைகள் இதோ..


- கோதுமை மா, ஒட்ஸ் பவுடர், பாசிப்பயறு மா இந்த மூன் றையும் சமமாக எடுத்து பாலுடன் திக்காக குழைத்துக் கொள்ளவும். அதை கழுத்தில் தடவி சில நிமிடங்கள் மசாஜ் செய்து 20 நிமிடம் அப்படியே விட்டு விடுங்கள். பிறகு கழு விக் கொள்ளவும்.
- பப்பாளிபழத்தின் தோல், எலு மிச்சை பழத்தோல், ஒரஞ்சு பழத்தோல் – இதில் ஏதாவது ஒன்றை நன்றாக அழுத்தி கழுத்தில் தேய்த்து வந்தால் படிப்படியாக கருமை நிறம் மறையும்.
- முட்டைக்கோசை அரைத்து அந்த சாறையும் கறுப்பாக நிறம் மாறிய கழுத்தில் தேய்க் கலாம். இதனுடன் சிறிது தேன் அல்லது எலுமிச்சை சாறு கலந்து தேய்ப்பது கழுத்தின் கருமையை போக் குவதோடு மினுமினுப்பான அழகிய கழுத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.
- பயத்த மாவு, ஒலீவ் ஒயில், ரோஸ் வாட்டர் – இவற்றை ஒன்றாக கலந்து கழுத்தில் பூசினாலும் கருமை நிறம் மறையும்.
- சிலருக்கு செயின் போட்டு, அதனால் பின் கழுத்து கறுத் துப் போய் இருக்கும். அதனை போக்க சிறிது பால், தேன், எலுமிச்சை சாறு கலந்து கழுத் தில் தடவி 10 நிமிடம் கழித்து வெது வெதுப்பான நீரில் அலசி விடவும். கடலை மாவு தயிர் கலந்தும் தடவலாம்.
- கஸ்தூரி மஞ்சளை 'பக்'' செய்து கழுத்துப் பகுதியில் போட்டு வந்தால் கழுத்தின் கருமை நிறம் நீங்கி வெண் மையாக பொலிவு பெறும். நீங்களும் அழகியாகலாம்.




## வாரமொரு குறள்

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்.*

**பொருள் :**
சான்றோர்களின் பெருமையை, இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக் காட்டும்.





## அமில மழை என்றால் என்ன?

எந்த ஒரு எரிபொருளும் எரியும் போது, காற்றில் பல வேதிப்பொருட்கள் கலக்கின்றன. விறகு, பெட்ரோல், தொழிற்சாலை புகை, மின் உற்பத்தி நிலைய புகை என்று, எல்லாமே வேதிப் பொருட்களை நிமிடத்திற்கு நிமிடம் காற்றில் கொண்டுபோய் சேர்த்துக் கொண்டே உள்ளன.

இந்த வேதிப் பொருட்களில், சல்ப்யூரிக் அமிலம் மற்றும் நைட்ரிக் அமிலம் ஆகிய இரு வேதிப் பொருட்கள், காற்றிலும், மேகங்களிலும் உள்ள ஈரப்பதத்துடன் வினைபுரிந்து, அமிலத் தன்மையை அதிகரிக்கின்றன.

இப்படி மாசடைந்த மேகங்கள் மழையை பொழியும்போது, அது அமில மழை என்று சொல்லப்படுகிறது. மழையில் சேரும் அமிலம் மனித தோலில் பட்டால் புண்ணாகும் அளவுக்கு அடர்த்தியானதாக இருப்பதில்லை. ஆனால், தாவரங்கள், பயிர்களை பாதிக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்தது.


மேல் வளிமண்டலத்தில் அமிலத் தன்மை உருவாகும்போது, அது மேகத்தின் போக்கில் சுமந்து செல்லப்படலாம். இதனால், தொழில் மண்டலங்களில் மாசு உருவாக, வேறு ஒரு இடத்தில், அமில மழை பெய்ய வாய்ப்பிருக்கிறது. ஆக்ராவில் உள்ள தாஜ் மகாலின் பளிங்கு கற்கள், காற்றிலும், மழையிலும் அதிகமாகிவிட்ட அமில தன்மையால்தான், மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாக, விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

## விடுகதை

1. வெள்ளை ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை
   – இந்த ஆள் யார்?
2. ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர்
   – இது என்ன?
3. சலசலவென சத்தம் போடுவான்.. சமயத்தில் தாகம் தீர்ப்பான்..
   – யார் இவன்?
4. யாரும் தொடாமலேயே அழுவான், தொட்டால் பேசுவான்.
   – இவன் யார்?
5. வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை.
   – இது யார்?
6. அள்ளும்போது அது சலசலக்கும்.. கிள்ளும்போது நமக்குக் கண் கலங்கும்.
   – இது என்ன?
7. வாயைப் பிளந்துகொண்டு வீதியோரங்களில் நிற்பான்.
   – இவன் யார்?
8. மீன் பிடிக்கத் தெரியாதாம், ஆனால் வலை பின்னுவானாம்.
   – இவன் யார்?
9. வெள்ளம் வெள்ளமாக கருப்பன் கண்ணீர் விட்டானாம்.
   – இது என்ன?
10. ஒற்றைக் கிண்ணத்துக்குள் இரட்டைத் தைலங்கள்.
   – இது என்ன?

விடைகள்:
1. தீக்குச்சி 2. கண்ணீர் 3. அருவி 4. தொலைபேசி 5. செருப்பு 6. வெங்காயம் 7. தபால்பெட்டி 8. சிலந்தி 9. மழை மேகம் 10. முட்டை

## குட்டீஸ் பக்கம்





### சிந்தனை முத்துக்கள்




வில்லியம் ஆஸ்லர்
(நவீன மருத்துவத்தின் தந்தை)

கவனி, பதிவு செய், அட்டவணையிடு, பிறருக்கு தெரிவி. உன் ஐந்து புலன்களையும் பயன்படுத்து. கேட்கவும், பார்க்கவும், உணரவும், முகரவும் கற்றுக்கொள். பயிற்சியால் மட்டுமே வல்லுனராக முடியும் என்பதை மறந்துவிடாதே.

## அ.. ஆ...

அன்பு பெருக்கு
ஆசை சுருக்கு
இன்னல் ஒடுக்கு
ஈகை பெருக்கு
உழைத்து வாழ்
ஊழ்வினை நீக்கு
எளிமை பேண்
ஏமாற்றம் தவிர்
ஐயம் அகற்று
ஒற்றுமை வளர்
ஓர்குலம் என்றாக்கு
ஔவை போற்று



## எதிர்கால சிந்தனை

ஒரு குளத்தில் இரண்டு தவளைகள் வசித்தன. அவை மழைக்காலத்தில் மகிழ்ச்சியாக அங்கு வாழ்ந்து வந்தன. கோடைக் காலம் வந்ததும் அந்தக் குளத்து நீர் கொஞ்சம் கொஞ்சமாக வற்றத் தொடங்கியது. அதனால் அந்தத் தவளைகள் கவலை அடைந்தன.

வேறிடத்திற்குச் செல்ல நினைத்த தவளைகள், அங்கிருந்து புறப்பட்டன. வழியில் நீர் நிறைந்த ஒரு கிணற்றைக் கண்டன. அதைக் கண்டதும் ஒரு தவளை மிகவும் மகிழ்ந்தது.

"நாம் இந்தக் கிணற்றில் இறங்கி, இங்கேயே குடியிருக்கலாம். நமக்குத் தேவையான உணவை இங்கிருந்தே தேடலாம்...!'' என்றது.

இதைக் கேட்ட மற்றொரு தவளை எச்சரிக்கையுடன் ஒரு வினாவை எழுப்பியது.

"நண்பரே! தற்சமயம் இந்தக் கிணற்றில் தண்ணீர் இருப்பது உண்மைதான்... ஆனால், கோடை வெப்பத்தால் இந்தத் தண்ணீரும் வற்றிவிட்டால், நாம் எப்படி தப்பிப்பது...? ஒருமுறை இந்தக் கிணற்றில் குதித்துவிட்டால், மீண்டும் இதிலிருந்து வெளியே வருவது மிகவும் கடினமாக இருக்குமே...!'' என்றது.

"நீ சொல்லுவதும் சரியாகத்தான் இருக்கிறது...!'' என்று கூறியது இன்னொரு தவளை.

"நாம் நிம்மதியாக வாழ நிரந்தரமான ஓரிடத்தைத் தேடுவோம்!'' எனக் கூறி அவை அங்கிருந்து சென்றன.

எதிர்காலத்தில் வர இருப்பதை நிகழ் காலத்திலேயே சிந்திப்பவன் அறிவாளி!

(ஈசாப் கூறிய கதை)

## பேனா நண்பர்கள்



அருகிவரும் கடிதம் மூலமான தொடர்புகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் தினச்செய்தி பேனா நண்பர்கள் வட்டத்தை உருவாக்கவுள்ளது. எனவே கடித தொடர்பு மூலம் பேனா நண்பர்களாக விரும்புவோர் தமது முகவரி உட்பட்ட விபரங்களை எழுதி அனுப்பி பேனா நண்பர்கள் வட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

**தினச் செய்தி,**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

# இருபது (20) இலங்கை தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிலிருந்து அடுத்த வாரம் இலங்கைக்கு



அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் இருபது (20) இலங்கை தமிழ் அகதிகள் தமிழ்நாடு இந்தியாவிலிருந்து 2016 ஏப்ரல் 26 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதர உள்ளனர். இவர்கள் சென்னையிலிருந்து மிஹின்லங்கா விமானசேவை (ஆது 130) இனூடாக மு.ப. 11.05 மணியளவில் வருகைதர உள்ளனர். சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் கௌரவ அமைச்சர் சுவாமிநாதன் அவர்களின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் மிஹின் லங்கா விமானசேவை நிறுவனமும் அவர்களது பயணப்பொதியின் அளவையும் அதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 20 பேரில் 10 ஆண்களும் 10 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமானபயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75 அமெரிக்க டொலர்களும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும், உணவு அல்லாத பணநன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி அவர்கள் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டிலிருந்து மொத்தமாக 4691 இலங்கை தமிழ் அகதிகள் (1,704 குடும்பங்கள்) தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மேலும் இந்தியாவில் 64,000 பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர். மொத்தமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் கௌரவ சுவாமிநாதன் அவர்கள் மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார். தற்பொழுது தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் விரிவான கருத்திட்ட முன்மொழிகளை அனுமதிப்பது தொடர்பான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றது.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இவ் அமைச்சானது, வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடுகளை வழ்ங்குமாறு, ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. வீடுகளை இழந்தவர்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் 65,000 வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படுமென சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். அரசாங்கமானது இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக சுயவிருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் அதிகரித்த அகதிகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிக்ஞையாக காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி அவர்கள் தெரிவித்தார்.

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# புலிகளுக்கு வந்த..

வனவு செய்து சென்னை துறைமுகத்திற்கு அனுப்பி வைத்தார். அவ்வாறு வந்த கொள்கலனில் ஏ.கே. 47, றொக்கற்லோஞ்சர், குறிவைத்துச் சுடும் துவக்கு, வெடிகுண்டு, இரவில் பார்க்ககூடிய சாதனங்கள், ராங்கை எதிர்த்துச் சுடும் துப்பாக்கிகள் வானொலி தொடர்பாடல் சாதனங்களையும் கொள்வனவு செய்தார்.

இவற்றைக் கொண்டு வந்த கொள்கலனில் மே 1984 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆயுதங்களை சுங்கப் பகுதியின் அனுமதியுடன் வெளியில் கொண்டு வர முடியாமல் போய் விட்டது. எல்.ரி.ரி.ஈ. யின் அந்த கொள்கலனில் வந்த ஆயுதங்களை வெளியில் எடுக்க முடியாமல் போய்விட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பு கொண்டவர்களால் வெளியில் எடுக்க முடியவில்லை ஏனென்றால் புளொட் (தமிழீழத்திற்கான மக்கள் விடுதலை அமைப்பு) இறக்குமதி செய்த ஆயுதங்களை அனுமதிக்காது கைப்பற்றினர் ஏப்ரல் 2 ஆம் திகதி 1984 ஆம் ஆண்டு சென்னை துறை முகத்தில் வைத்து ஆயுதங்களை வெளியில் கொண்டு வர முயற்சித்த போது சுங்கப் பகுதியினர் கைப்பற்றினார்கள். புளொட்காரர் 1400 றைபிள், 300 இராணுவத்துப்பாக்கி ஜப்பானில் தயாரித்த 5 வானொலி சாதனங்கள் என்பவற்றை சுங்கப் பகுதிக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் பழைய புதினப் பத்திரிகை என்று கூறினர். புளொட்காரர் இதனை சைனா தைவான் பகுதியில் வாங்கினர். இதனை கொண்டு வருவதற்கு புளொட்காரர் முயற்சி எடுத்தனர். கம்யூனிஸ்ற் கட்சி தலைவர்களுடன் தொடர்பு கொண்டு ராஜீவ் காந்தியிடம் இது சம்பந்தமாக தொடர்பு கொள்ள ஒழுங்கு செய்தனர்.

அதையடுத்து தமிழ் நாட்டு நடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கைக்கு பதிலளிக்கையில் ராஜீவ் காந்தி இவ்வாறான ஆயுதங்களை கொள்வனவு செய்வதானால் முன் கூட்டியே என்னிடம் கூறவேண்டும் என்று கூறினார் மேலும் ஊடகங்கள் இதனை உன்னிப்பாக அவதானிக்கிறார்கள் என்றும் கூறினார். "மேலும் இந்த விடயத்தை மறந்து விடுங்கள் என்று கூறுங்கள் என்று கம்யூனனிஸ்ற் கட்சி தலைவர்களிடம் கூறினர். பிரபாகரன் செயற்பட பொறுப்பாக இருக்கும் இந்துக் கடவுள் முருகனின் பக்தன் தான் பிரபாகரன், தனது ஆயுதங்கள் வெளியில் விடப்பட்டால் தான் பழனியில் இருக்கும் முருகன் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வருவேன், என்று சபதம் செய்தார். ஆயுதங்கள் விடுவித்து வெளியே வந்தவுடன் பழனிக்குச் சென்று நேர்த்தியை நிறைவு செய்தார். அன்றைய தினத்தை அவர் விரதமாக எடுத்து உபவாசம் இருந்து முருகனுக்கு நன்றி செலுத்தினார். எம்.ஜி. இராமச்சந்திரனுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். புளொட்காரர்களின் ஆயுதங்களை பறிப்பதற்கான காரணம் இந்திய அரசு வழங்கும் ஆயுதங்களுக்கு தாம் தான் பொறுப்பாயிருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தத்தான் இந்த இந்திய அரசாங்கம் பறித்தார்கள். புது டில்லியின் செயலை பிரபாகரன் உணர்ந்தார். தன்னுடைய போராளிக் குழுக்கள் தன் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்க வேண்டும் என்பது புது டில்லியின் கருத்து. போராளிக் குழுக்கள் ஜெயவார்தவின் அரசாங்கத்திற்கு தாக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே புது டில்லியின் ஒரே நோக்கம் போராளிக் குழுக்களுக்கு புது டில்லியில் ஆயுதங்களை வழங்குவதும் ஆயுத விற்பன்னர்கள் ஒவ்வொரு போராளிக் குழுக்குழுக்கும் எவ்வளவு ஆயுதங்கள் வழங்க வேண்டும் என ந்திய அரசு கூறுகிறதோ அவ்வளவு ஆயுதங்களையே வழங்கினர். புதுடில்லி தனது ஆயுதங்களை வெளியில் எடுக்க உதவாது என்று பிரபாகரன் எதிர்பார்த்தார். அதையடுத்து பாலசிங்கத்தை எம்.ஜி. இராமச்சந்திரனிடம் அனுப்பி வைத்து அவரது உதவியை நாடினார். பாலசிங்கம் எம்.ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து அவரின் பணத்தின் மூலம் கொள்வனவு செய்த ஆயுதங்களின் நிலையை எடுத்துக் கூறினார். அந்த ஆயுதங்கள் கிடைத்தால்தான் தமிழீழ பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுக்க முடியும் எனக் கூறினார்.

அவ்வாறு கூறிய போது எம்.ஜி.ஆர். எந்தத் தடுமாற்றமும் அடையவில்லை என பாலசிங்கம் தனது குறிப்பில் குறிப்பிட்டிருந்தார். அதனையடுத்து எம்.ஜி. இராமச்சந்திரன் ஒரு சுங்க இலாகாவைச் சேர்ந்த உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டார். அதையடுத்து அவரது பெயரை ஒரு கடதாசியில் எழுதிக் கொடுத்தார்.

மேலும் அந்த உத்தியோகத்தர் எல்லா உதவியும் செய்வார் என்று எம்.ஜி. இராமச்சந்திரன் சொல்லி பாலசிங்கத்தை அனுப்பி வைத்தார் என்று பாலசிங்கம் தனது குறிப்பில் குறிப்பிட்டி ருந்தார்.

அந்த வேலையை பிரபாகரன் சங்கரிடம் ஒப்படைத்தார். அதையடுத்து ஆயுதங்கள் அடங்கிய கொள்கலன் பொலிஸாரின் பாதுகாப்புடன் சென்னைக்கு வெளியே இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மறைவிடம் ஒன்றிற்கு கொண்டு வரப்பட்டன.


சுங்கப் பகுதியினர் தமிழீழ விடுவலைப் புலிகள் கொள்வனவு செய்த ஆயுதங்களை விடுவித்த பிற்பாடு தமிழ் நாட்டு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனை சந்தித்து தனது நன்றியைக் கூறினார். அது மட்டுமன்றி எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு பிரபாகரன் ஏகே-47 துப்பாக்கி ஒன்றை அன்பளிப்புச் செய்து இந்த துவக்கு நீங்கள் நடித்த படத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அது மாத்திரமன்றி அதனை எவ்வாறு அக்கு வேறு ஆணி வேறாக கழற்றுவது என்றும் பூட்டுவது என்றும் செய்து காட்டினார். பிரபாகரன் வழங்கிய அன்பளிப்பை எம்.ஜி. இராமச்சந்திரன் மகிழ்ச்சியுடன் ஏற்று பாராட்டினார். அத்துடன் எம்.ஜி இராமச்சந்திரனின் காருண்ணியம் முடியவில்லை 1985 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு நிறைய பணம் தேவைப்பட்டது எனவே எம்.ஜி. இராமச்சந்திரனுடன் கதைப்பதற்கு பாலசிங்கத்தை அனுப்பினார். எம்.ஜி. ஆரை சந்திக்கச் சென்ற பாலசிங்கம் எம்.ஜி. ஆருக்கு தமது நிலைமைகளை எடுத்துக் கூறினார்.

"எவ்வளவு பணம் தேவை,"? என்று கேட்டார்.

"5 கோடி" எனக் கூறினார். அதற்கு கவலைப்பட வேண்டாம் எனக் கூறி ரூபா 4 கோடி (40 மில்லியன்) தனது சொந்த பணத்தில் எம்.ஜி.ஆர். கொடுத்தார்.

எம்.ஜி.ஆர். 1 வருட காலம் நோயுற்றிருந்து 1987 டிசம்பர் காலமானார். அந்த வருட ஆரம்பத்தில் எம்.ஜி.ஆரை ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தார். பாலசிங்கத்தைக் கண்டவுடன் கட்டிலில் படுத்திருந்த எம்.ஜி.ஆர். எழுந்து தலையணையைத் தூக்கி அதற்கு கீழிருந்த ஏ.கே-47 துப்பாக்கியைக் காட்டினர். அதணைக்காட்டி, "தம்பி எனக்கு அன்பளிப்புச் செய்தவர்," என்று கூறினார்.

எம்.ஜி.ஆர். இறக்கும் வரை பிரபாகரன் வழங்கிய அன்பளிப்பை தலையணையின் கீழ் வைத்தே படுத்துறங்குவார்.



# மும்பை சிறுவரின் மனதை வென்ற ஸ்டெய்ன்


தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த நட்சத்திர பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் ஐபிஎல் தொடரில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள குஜராத் லயன்ஸ் அணியில் இடம் பெற்றுள்ளார். ஆனால் இதுவரை எந்த போட்டியிலும் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இந்நிலையில் மும்பை அணிக்கு எதிராக கடந்த சில நாட்களுக்கு முன் குஜராத் லயன்ஸ் அணி விளையாடியது. அப்போது ஸ்டெய்ன் மும்பை சிறுவருடன் தெருவில் கிரிக்கெட் விளையாடி, அவர்களின் மனதை கொள்ளை கொண்டார். அந்த வீடியோவை தற்போது இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார்.

சிறுவருடன் விளையாடிய போது விக்கெட் ஒன்றை வீழ்த்திய ஸ்டெய்ன் ஐபிஎல்லில் என்னுடைய முதல் விக்கெட் என அந்த வீடியோவில் நகைச்சுவையாக குறிப்பிட்டுள்ளார். கடந்தாண்டு தென் ஆப்பிரிக்க அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்த போது, சிட்டகாங்கில் சிறுவர்களுடன் ஸ்டெய்ன் உதை பந்தாட்டம் விளையாடியது குறிப்பிடத்தக்கது. இதனிடையே குஜராத் அணி விளையாடிய 3 போட்டிகளிலும் வென்று விட்டதால், அந்த அணியில் மாற்றம் செய்ய கப்டன் ரெய்னா விரும்ப மாட்டார் என கூறப்படுகிறது. இதனால் ஆடும் லெவனில் வாய்ப்பு கிடைக்க ஸ்டெய்ன் இன்னும் சில போட்டிகள் காத்திருக்க வேண்டிய நிலையே இருக்கும் என தெரிகிறது.

## வரலாறு படைத்தார் தீபா கர்மாகர்

ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இந்திய ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை தீபா கர்மாகர் தகுதி பெற்றுள்ளார்.இதன்மூலம் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்ற இந்தியாவின் முதல் ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை என்ற வரலாற்று சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிச்சுற்றில் 52.698 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் ஒலிம்பிக் வாய்ப்பை பெற்றிருக்கிறார் தீபா. ஒலிம்பிக் போட்டியில் ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் 52 ஆண்டுகளுக்குப் பிறகு பங்கேற்கவுள்ள முதல் இந்தியர் தீபா என்பது குறிப்பிடத்தக்கது. 1952 ஒலிம்பிக் போட்டியில் இரு வீரர்களும், 1956 ஒலிம்பிக் போட்டியில் மூன்று வீரர்களும், 1964 ஒலிம்பிக் போட்டியில் 6 வீரர்களும் ஜிம்னாஸ்டிக் ஸில் பங்கேற்றுள்ளனர். அதன்பிறகு நீண்ட காலமாக ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் ஒலிம்பிக்கிற்கு




யாரும் தகுதி பெறவில்லை. அந்த குறை இப்போது தீபா மூலம் தீர்ந்துள்ளது. தீபா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றிருப்பதை சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் சம்மேளனமும் உறுதி செய்துள்ளது.

## புதிய சாதனை கனவில் நடால்


பார்சிலோனா ஓபன் டென்னிஸ் போட்டியில் பட்டம் வெல்வதில் ஸ்பெயினின் நட்சத்திர வீரரான ர.ஃபேல் நடால் தீவிரமாக உள்ளார். பார்சிலோனா நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் வெல்லும்பட்சத்தில் களிமண் தரையில் அதிக சாம்பியன் பட்டங்கள் (49) வென்றவரான கில்லர்மோ விலாஸின் சாதனையை நடால் சமன் செய்வார்.

பார்சிலோனா ஓபனில் 8 முறை சாம்பியன் பட்டம் வென்றவரான நடால் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தோல்வியடைந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்தப் போட்டியிலுமே பட்டம் வெல்லாத நடால் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் போட்டியில் சாம்பியன் ஆனார். இந்தப் போட்டியில் அவர் வென்ற 9-ஆவது பட்டம் இது. இதன்மூலம் புதிய உத்வேகம் பெற்றிருக்கும் அவர் டென்னிஸ் உலகில் மீண்டும் ஆதிக்கம் செலுத்தும் முனைப்பில் உள்ளார்.



இது தொடர்பாக அவர் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகள் எனக்கு மோசமானவையாக அமைந்தன. ஆனால் இந்த சீசனுக்காக சிறப்பாக தயாராகியிருக்கிறேன். மான்டி கார்லோ போட்டியில் வென்ற பட்டம் அடுத்த போட்டிகளில் சிறப்பாக ஆடுவதற்கு உதவும் என நம்புகிறேன். கடந்த போட்டிகள் அனைத்துமே எனக்கு கடினமானவையாக அமைந்தன. நானும் காயத்திலிருந்து மீண்டு வந்திருக்கிறேன் என்றார்.

## சிறந்த வீரர் ஹசான் சன்னி



சிங்கப்பூர் தேசிய உதைபந்தாட்ட குழுவின் கோல்காப்பாளரான ஹசான் சன்னியை உலகில் உள்ள ஆகச் சிறந்த 20 கோல்காப்பாளர்களில் ஒருவர் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த தி டெலி கிரா.ஃப் செய்தித்தாள் அடையாளம் கண்டுள்ளது. தி டெலிகிரா.ஃப் செய்தித்தாள் வெளியிட்ட பட்டியலில் இடம் பெற்றிருக்கும் ஒரே ஆசியர் என்ற பெருமை ஹசான் சன்னியைச் சேரும். ஹசான் சன்னி தற்போது தாய்லாந்தின் ஆர்மி யுனைடெட் குழுவுக்காக விளையாடி வருகிறார்.

## மேஸிக்கு என்ன நடந்தது

உதை பந்தாட்ட ரசிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்த மேஸி கோல் அடிக்க முடியாது திணறுவதால் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். பர்ஸிலோனா அணிக்காக மேஸி கடைசியாக 5 போட்டிகளில் 452 நிமிடங்கள் விளையாடி ஒரு கோல்கூட அடிக்கவில்லை. மேஸி கடைசியாக விளையாடிய 7 போட்டிகளில் ஒரே ஒரு கோல் தான் அடித்தார். பர்ஸிலோனாவின் வெற்றிக்கு மேஸியின் பங்களிப்பு மிக முக்கியமானது. சம்பியன் லீக் போட்டியின் நடப்புச்சம்பியனான பர்ஸிலோனா அரை இறுதிக்கு முன்னேறமுடியாது வெளியேறியது.






அட்லெட்டிகோ அணிக்கு எதிரான முதல் கால் இறுதிப் போட்டியில் 2 – 1 கோல் கணக்கில் வெற்றிபெற்ற பர்சிலோனா இரண்டாவது கால் இறுதிப் போட்டியில் 0– 2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. ஒட்டு மொத்த கோல்கணக்கில் 3 – 2 என பின் தங்கியதால் பர்சிலோனா கால் இறுதியுடன் வெளியேறியது. மெஸி, நெய்மர்,சாரஸ் ஆகியா மூன்று முன்னணி வீரர்கள் இருந்தும் பர்சிலோனாவால் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. 39 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்ற பர்சிலோனா கடைசியாக விளையாடிய நான்கு போட்டிகளில் சந்தித்த மூன்றாவது தோல்வி.

ரியல் மட்ரிட் அணியின் வீரர் கிரிஸ்ரியானோ ரொனால்டோ தனி நபராகப் போராடி மூன்று கோல்கள் அடித்து அரை இறுதிப் போட்டிக்கு அணியைக் கொண்டு சென்றார்.

ந்து கணிப்பிட்டு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள உதவும் ஒரு முக்கிய அலகாகும்.

* **இறுவட்டு செயற்பாட்டுகருவி :** இது இறுவட்டுக்களை (CD, DVD) உள்ளேசெலுத்தி, அதில் உள்ளதகவல்களை பெற்றுக்கொள்ள உதவுகிறது.



இணைய வசதிகள் மற்றும் அதன் பிரத்தியேக அம்சங்கள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்துவோம்.

இணையத்தோடு தொடர்பை ஏற்படுத்துவதற்கான அடிப்படை வசதியை Dial – up என்ற வசதி மூலம் பெற்றுக்கொள்ளலாம். அதற்கான பட விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

# கணினியும் சந்தேகங்களும்




## கணினி பற்றிய சிறு அறிமுகம்

- கணனியின் உதிரிப்பாகங்களின் செயற்பாடுகள்

இவை தகவல் வாசிக்கும் வேகங்கள் கருவிக்குகருவி வித்தியாசப்படுகின்றன. 52X, 56X, 64X என பல்வேறு வேகங்களில் வாசிக்கக் கூடியவை.

## கணினியின் பாகங்கள்

**பிரத்தியேக தகவல் சேமிப்பு உபகரணங்கள்**

**கணினியில் பயன்படுத்தப்படும் இயங்கு தளங்கள்**

**MICROSOFT இயங்குதளங்கள் பற்றிய சிறுகுறிப்பு**

குறிப்புக்களை பாவனையாளருக்கு வழங்குதல், வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகளை செய்யவல்லது.


இயங்குதளமே, அனைத்து பிரயோக மென்பொருட்களையும் கட்டுப்படுத்துகிறது. ஒரு பிரயோக மென்பொருளை (*உதாரணமாக Java Package*) இதற்கு MICROSOFT அடிப்படையிலான இயங்கு தளத்திற்கு ஒரு பிரதியும், LINUX இயங்கு தளத்திற்கு மற்றும் ஒரு பிரத்தியேக பிரதியும் உண்டு.

### இணையம், கம்பிகளற்ற இணைப்பு, WCDMA மற்றும் HSPDA

அடுத்து இணையத்துடன் தொடர்பை ஏற்படுத்தும் வசதிகள் குறித்து விரிவாக பார்ப்போம். அதில் அதிவேக

அடிப்படையில் சில உபகரணங்களும் தொழில்நுட்பங்களும் அவசியப்படுகின்றன என்பதை இந்தபடம் எடுத்துக்காட்டுகின்றது. அதாவது Modem, தொலை பேசி இணைப்புமற்றும் கணனி ஆகியன அவசியப்படுகின்றன. இதன் மூலம் இணையத் தொடர்பை பெற Internet Service provider எனும் இணையசேவை வழங்குனரின் தொடர்பு அவசியம்.

அடிப்படையில் சில உபகரணங்களும் தொழில்நுட்பங்களும் அவசியப்படுகின்றன என்பதை இந்தபடம் எடுத்துக்காட்டுகின்றது. அதாவது Modem, தொலைபேசி இணைப்பு மற்றும் கணனி ஆகியன அவசியப்படுகின்றன. இதன் மூலம் இணையத் தொடர்பை பெற *Internet Service provider* எனும் இணையசேவை வழங்குனரின் தொடர்பு அவசியம்.




- **திரை, சுட்டி, விசைப்பலகை, பிரதானஅலகு பற்றிய சிறுகுறிப்புக்கள்**

* **திரை** – இந்தச் சாதனமானது கணினிக்குள் தரவுகளைச் செலுத்துவ தற்கும் செலுத்தியதரவுகளைப் பார்ப்பதற்கும், தரவின் அடிப்படையில் பெறப்படுகின்றபெறுபேறுகளைப் பார்ப்பதற்கும் உதவும்.
* **சுட்டி** – இதனை ஆங்கிலத்தில் மௌஸ் (MOUSE) என்று குறிப்பிடுவார்கள். இந்தச் சாதனம் தரவுகளை உட்செலுத்துவதற்கும் பெறுபேறுகளையும் பிரயோக மென்பொருள்களையும் சிறந்தமுறையில் பயன்படுத்துவதற்கும் வசதிசெய்து கொடுக்கும்.
* **விசைப்பலகை** – இந்தச் சாதனமானது ஒரு குறிப்பிட்ட மொழியில் அல்லது பலமொழியில் தரவுகளை உட்புகுத்துவதற்கு உதவும்.
* **பிரதான அலகு**– கணினிக்குள் செலுத்தப்பட்ட தரவுகளை சிறந்தமுறையில் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஆராய்

**MICROSOFT WINDOWS 2000 PROFESSIONAL**

**MICROSOFT WINDOWS 2000 SERVER FAMILY**


**MICROSOFT WINDOWS 2000 ADVANCED SERVER FAMILY**

**MICROSOFT WINDOWS XP**

**MICROSOFT WINDOWS 7**


போன்ற இயங்குதள மென்பொருள்களை குறிப்பிடலாம். இயங்குதளமானது சாதாரணமாக ஒரு கணினிப் பொறியின் அடிப்படைச் செயற்பாடுகளை தீர்மனிக்கவல்லது.

அடிப்படைச் செயற்பாடுகள் எனப்படும் பொழுதுகணனியை இயக்குதல், அதன் உதிரிப்பாகங்களை சிறந்தமுறையில் இயக்குதல், மேலதிக பிரயேக மென் பொருள்களை இயங்கச் செய்தல், பிரச்சினைகளை சிறந்த முறையில் கையாளுதல், உதவிக்




(தொடரும்.....)

# விஜய் படங்கள் வெளியாவதில் ஏற்படும் சிக்கல்கள்




நடிகர் விஜய் நடிக்கும் திரைப்படங்கள் வெளியாவதில் சிக்கல் ஏற்படுவது வாடிக்கையான ஒன்றாகிவிட்டது.

2010ஆம் ஆண்டு விஜய் நடித்த காவலன் திரைப்படத்தில் இருந்துதான் இந்த பிரச்சனை தொடங்கியது. படம் வெளியாக தயாரான வேளையில், அதை எதிர்த்து வினியோகஸ்தர் ஒருவர் வழக்கு தொடர்ந்தார். மேலும், கோவை தியேட்டர் உரிமையாளர்கள் படத்தை வெளியிட மாட்டோம் என்று கூறினார்.

அதன்பின் ஒருவழியாக சிக்கல் தீர்ந்து அந்தப்படம் வெளியானது. அப்போது ஆளுங்கட்சியாக இருந்த திமுகதான் பிரச்சனையை உண்டாக்கியது என்று பேசப்பட்டது.

அதேபோல், தலைவா பட வெளியீட்டின் போதும் பிரச்சனை வெடித்தது. இந்த படத்தை வெளியிட்டால், திரையரங்குகளில் குண்டு வைக்கப்படும் என்று அரசுக்கு மர்ம கடிதம் வந்ததாக கூறி, பாதுகாப்பு கருதி தமிழக அரசு தடை விதித்தது. இதனால், படம் வெளியாகவிருந்த தேதியிலிருந்து 10 நாட்கள் கழித்துதான் இந்தப்படம் வெளியானது.

இதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக, இந்த படத்தின் தயாரிப்பாளருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு அவரை மருத்துவமனையில் அனுமதிக்கும் நிலைமை வரை போனது.

அதற்கு காரணம் அந்த படத்தின் தலைப்பும், பட விளம்பரங்களில் வுஅைந வழ டநயன என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த வாசகம், ஆளும் கட்சியை கோபப்படுத்தியதாகவும், அதனால்தான் அந்தப்படம் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

அதேபோல், துப்பாக்கி படம் வெளியாகவிருந்த நேரத்தில், அந்தப்படம் அனைத்து முஸ்லீம்களையும் தீவிரவாதிகளாக சித்தரிக்கிறது என்று கூறி சில முஸ்லீம் அமைப்புகள் போர்க்கொடி தூக்கின. அதன்பின் சில காட்சிகளை நீக்கிவிட்டும், சில வசனங்களை மியூட் செய்தும் வெளியிட்டார்கள்.


கத்தி படத்தை பொறுத்தவரையில், அந்தப் படத்தின் தயாரிப்பு நிறுவனமான லைக்கா, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷேவிற்கு நெருக்கமானது. எனவே இந்தப் படத்தை தமிழ்நாட்டில் வெளியிட அனுமதிக்கமாட்டோம் என்று சில தமிழ் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. அதன்பின், ஒரு வழியாக அந்த பிரச்சனையை தீர்த்து படத்தை வெளியிட்டார்கள்.அதேபோல், புலி படம் வெளியான தருணத்தில், விஜய் உட்பட அந்த படத்தின் தயாரிப்பாளர்கள் வீட்டில் வருமான வரித்துறை அதிரடி சோதனை நடத்தினார்கள். இதனால், அந்தப்படம் காலையில் வெளியாகாமல், மாலைதான் வெளியானது.தற்போது வெளியாகியுள்ள திரைப்படம் தெறி. இந்தப்படம் செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வெளியாகவில்லை. தயாரிப்பாளர் தரப்பிலிருந்து படத்திற்கு அதிக விலை விதிப்பதாலும், மினிமம் கேரண்டி முறையில் படத்தை வாங்க வற்புறுத்தியதாலும் இந்த படம் அங்கு வெளியாகவில்லை. இதனால் சென்னையிலேயே, முக்கிய தியேட்டர்களில் மட்டுமே இப்படம் வெளியாகியது. செங்கல்பட்டு பகுதிக்கு உட்பட்ட பல தியேட்டர்களில் இப்படம் வெளியிடப்படவில்லை. இது, அந்த பகுதியில் வசிக்கும் விஜய் ரசிகர்களுக்கு அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியது. தயாரிப்பாளர் தாணு தனது சொந்தச்செலவில் வெளியிட்டார். ஏறாலும் முக்கிய தியேட்டர்களில் தெறி வெளியாகவில்லை. எனவே விஜய் படம் என்றாலே வெளியாவதில் சிக்கல் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு காரணம், விஜயின் அரசியல் ஆர்வத்திற்கு முட்டுக்கட்டை போடுவதற்காகத்தான் என்றும், அவரின் படம் வெளியாவதில் சிக்கல் ஏற்படுத்தி, மறைமுகமாக ஆளும் அரசுகள் அவரை எச்சரிக்கிறது என்றும் கூறப்படுகிறது. இதையெல்லாம் நடிகர் விஜய் எப்படி சமாளித்து வெற்றி வாகை சூடுவார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.







# கழிவறைவிட அசுத்தமான கைபேசிகள்



மற்ற வயதினரைக் காட்டிலும் இளையர்களே கைபேசியை கழிவறையில் அதிகம் பயன்படுத்துகின்றனர். அத்துடன், இருவரில் ஒருவர்தான் கழிவறையை பயன்படுத்திய பின் கைகளைச் சுத்தம் செய்கின்றார். ஆயினும் கைபேசியைச் சுத்தம் செய்வதில்லை எனும் திடுக் கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளது நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மேற்-கொண்ட ஆய்வு ஒன்று. 305 பேரிடம் நடத்திய ஆய்வில் 10ல் ஒன்பது சிங்கப்பூரர்கள் கைபேசிகளைக் கழிவறையில் பயன்படுத்துகின்றனர் என்றும் அவர்களில் 10ல் ஒருவர் தான் அதைச் சுத்தம் செய்கிறார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இப்போக்கு சிங்கப்பூர் இந்தியச் சமுதாயத்திலும் பரவலாகக் காணப்பட்டாலும் ஆய்வு முடிவுகளைக் காட்டிலும் கைபேசியைக் கழிவறையில் பயன்படுத்தும் இந்தியச் சமூகத்தினரின் எண்ணிக்கை சற்றுக் குறைவாகவே உள்ளது.

ஆறில் ஒரு கைபேசியில் மலம் தொடர்பான கிருமி இருப்பதாகவும் கழிவறைகளில் இருப்பதைப் போல 18 மடங்கு கிருமிகள் கைபேசிகளில் இருப்பதாகவும் வேறு சில ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. கழிவறை—யில் கைபேசியைப் பயன்படுத்துவதாக ஒப்புக் கொண்ட நவின், 15, அதை அடிக் கடி சுத்தம் செய்ய சோம்பேரித்தனப்படுவதாகக் குறிப்பிட்டார். முக்கியமான அழைப்புகளை உடனடியாக ஏற்பது தவிர பாடல்கள் கேட்பது குறுஞ்செய்தி அனுப்புவது போன்றவற்றுக்கும் கழிவறையில் கைபே-சியைப் பயன்படுத்துவதாகச் சிலர் கூறினர்.

# இந்து தர்மத்தில் பத்து

விஜயதசமி அன்று பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதல், ஆயுத பூசை எல்லாம் நடை பெறும் என்று சொல்வார்கள். அப்படியாயின் நவராத்திரியின் பத்தாவது நாள் என்று அறிந்து கொள்ளலாம் அல்லவா. பௌத்தத்துக்கும் வைணவ சமயத்தவர்க்கும் நெருங்கிய தொடர்புண்டு மகா விஸ்ணு பத்து அவதாரங்கள் மூலம் காலத்திற்கு காலம் தோன்றிக் காத்தருள் புரிகின்றார். இவற்றை வரை மீன்,ஆமை, பன்றி,நரசிம்மம்,வாமணம்,பரசுராமன்,கண்ணன்.,ராமன்,பலதேவன் ஆகிய அவதாரங்களை எடுத்து விட்டதாகவும் எனி கல்கி அவதாரம் எடுக்க இருப்பதாகவும் வைணவர்கள் கூறுவார்கள்.



இராம அவதாரத்திலே இராமரின் தந்தைக்கு பத்து ரதங்கள் இருந்ததாகவும் அதனால் தான் தசரதன் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். ஆவதார புருசராகிய இராமர் பத்து தலைகள் வைத்திருந்த இராவணனுடன் போர் புரிந்து வென்றார். இதனாலோ என்னவோ மனித துயரங்களை நீக்குவதற்காக இந்த அவதாரங்களை எடுத்தார் என்று வைணவர்கள் கூறுவர். சைவ சமயத்திலே நான்கு நாயன்மார்கள் எப்படி தேவார திருவாசகங்கள் மூலம் சமய கொள்கைகள் பற்றிக் கூறினார்களோ அதேபோன்று வைணவ சமயத்திலே பத்து ஆழ்வார்கள் தோன்றி விஸ்ணுவின் பத்து அவதாரங்களையும் பாசுரங்களாகப் பாடியுள்ளனா. இந்தப் பத்துப் பேரையும் தென்கை தமிழ் நாயன்மார் என்று கூறுவர். இனி பிள்ளைத் தமிழ் ஆண் பெண் இரு தெய்வங்களுக்கும் பாடுவது வழக்கம். இந்தப் பிள்ளைத் தமிழிலே பத்து அங்கங்கள் வருகின்றன. ஆணுக்கும் பெண்ணுக்கும் இவற்றில் சில விதி விலக்குகள் உள்ளன. சித்தாந்தத்திற்கும் சித்தமருத் துவத்திற்கும் நிறைய தொடர்புகள் உண்டு. இருந்த போதும் இதிலே துவர்ப்புச் சுவையுடைய பத்துப் பொருட்கள் பற்றிச் சொல்லப்படுகின்றன. அவை நாவல்,கடுக்காய்,நெல்லிக்காய்,ஆல ,அரசு,அத்தி, இத்தி,முத்துக்காசு,மாந்தளிர் என்பனவாகும்.ஆகம விதிப்படி தெய்வங்கள் வடிக்கப்படுகின்றன. ஆகமத்தில் குறிப்பிடப் பட்ப கல்,உலோகம்,மண்,செங்கல்,கண்ட சக்கரை,மெழுகு, மரம்,தந்தம்,சுதை, வண்ணம் ஆகியவற்றில் சிலைகள் வடிக்கப்பட வேண்டும். இவை தவிர்ந்த பொருட்களில் சிலை வடிப்பது குற்றமாகும்.

பத்தில் வியாளன் பதியை விட்டுக் கிளப்பும் என்பர். இது சோதிடத்தில் சொல்லப்படுகின்ற வசனம். அதாவது வியாளன் ஒருவருக்கு பத்தாம் இடத்தில் மாறிவரின் அவருக்கு மேற்குறிப்பிட்டவாறு நடக்கும். வளர் பிறையிலோ தேய் பிறையிலோ பத்தாம் நாள் தசமி திதி என்பர். இந்ததிதியில் வளர்பிறைக்காலத்தில் எதுவும் செய்யலாம் என்பர். நட்சத்திர வைப்பிலே பத்தாவது நட்சத்திரம் மகம் ஆகும். எண் சோதி டத்திலே பத்தை ஒன்று என்றே கருதுவார்கள். எனவே ஒன்றிற் குரிய பலன் யாவும் இதற்கும் உண்டு அதாவது எல்லோர்க்கும் முன் மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் செயற்படக்கூடியவராகவும் இந்த எண்காரர் இருப்பர். எனவே தெய்வம் ஒன்றென்றிருப்போம் உண்டெண்டிருப்போம் அவன் கழலே நன்றென்றிருப்போம்.

கவிஞர் துரையர்



# ஊழல் புகார்கள் குறைவு மேலும் ஓர் அனுகூலம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் சென்ற ஆண்டில் புதிய ஊழல் விவகாரங்கள் எண்ணிக்கை இதுவரை இல்லாத அளவுக்கு 132 ஆகக் குறைந்தது. வந்த புகார்கள் அதிகம் என்றாலும் ஆதாரம் இல்லாமல் புலன்விசாரணையைத் தொடங்கும் அளவுக்குப் போதிய முகாந்திரம் இல்லாமல் இருந்தவை அவற்றில் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.ஊழல் அதிகம் நிலவும் ஒரு வட்டாரத்தில் அமைந்து இருந்தாலும் உலகிலேயே லஞ்ச லாவண்யங்களும் ஊழலும் குறைந்த நாடு என்று ஏற்கெனவே நற்பெயரைப் பெற்று இருக்கும் சிங்கப்பூருக்கு இது உண்மையிலேயே அதன் மகுடத்தில் மேலும் ஒரு வைரமாகவே ஒளிவிடுகிறது. சிங்கப்பூருக்கு மட்டுமின்றி பெரும் பணத்துடன் தொழில்களில் முதலீடு செய்யப் பரிசீலிக்கும் உலக முதலீட்டாளர்களுக்கும் உலகச் சுற்றுப் பயணிகளுக்கும் இந்தச் செய்தி அவர்கள் விரும்பும் ஒரு வரவேற்புச் செய்தியாகவேதான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிங்கப்பூர் பொதுவாகவே ஊழலை விரும்பாத, அதைச் சகித்துக்கொள்ளாத ஒரு நாடு என்பது அதன் சுதந்திரத்திலிருந்தே உலகம் அறிந்த ஒன்று. நவீன சிங்கப்பூரின் தந்தை என்று போற்றப்படும் நாட்டின் முதல் பிரதமர் லீ குவான் இயூவும் அவரின் சகாக்களும் முதலும் முடிவுமாக ஒழியவேண்டியது ஊழல் என்று முடிவு செய்து, அதைப் புலப்படுத்தும் வகையில் வெள்ளை உடையைத் தங்களின் அடையாளமாக, நாட்டின் அடையாளமாக உலகுக்குக் காட்டினார்கள்.திரு லீ குவான் இயூ இன்று இல்லை என்றாலும் ஊழலுக்கு எதிரான அவரின் உறுதி, அரசாங்கத் தலைவர் களிடையே, அரசாங்கம், தனியார் துறைகளின் ஊழியர் களிடையே, முதலாளிகளிடையே, மக்களிடையே இன்று இன்னும் வலுவாக நிலைப்பட்டு இருப்பதற்கு இதுவே காரணம். இதைத்தான் புதிய புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. சிங்கப்பூரில் ஊழலுக்கு எதிராக கடுமையான சட்டதிட்டங்கள் அமலில் இருக்கின்றன. அரசாங்கத் துறை, தனியார் துறை எதில் ஊழல் புகார் கிளம்பினாலும் அது பற்றி சிங்கப்பூர் ஊழல் புலன்விசாரணை இலாகா (CPIB) என்ற அமைப்பு விசாரணை நடத்துகிறது.பிரதமர் அலுவலகத்தில் அமைந்து இருக்கும் இந்த அமைப்பு யாரையும் அதிபரின் அனுமதியுடன் பிரதமரையும் விசாரிக்கும் அதிகாரம் படைத்த ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. ஊழல் இடம்பெற்று இருக்கும் குற்றவியல் விவ காரங்களையும் இது விசாரிக்கும். ஊழல் ஒழிப்புச் சட்டங் களைத் திறம்பட அமலாக்கும் வகையில் இந்த அமைப்பு சுதந்திரமான அமைப்பாக வைக்கப்பட்டுள்ளது. டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் என்ற உலக அமைப்பு ஆண்டுதோறும் உலக நாடுகளில் ஊழல் எப்படி இருக்கிறது என்பதைப் பட்டியலிடும். சென்ற ஆண்டில் 168 நாடுகளை அலசி ஆராய்ந்து அது வெளியிட்ட பட்டியலில் சிங்கப்பூர் 85 மதிப்பெண்களுடன் ஊழல் குறைந்த நாடுகளில் உலகிலேயே எட்டாவது இடத்தையும் தென்கிழக்கு ஆசியாவில் முதலிடத்தையும் பிடித்துள்ளது.



இதற்கு சிங்கப்பூர் ஊழல் புலன் விசாரணை இலாகா வின் ஆற்றல்மிக்க செயல்பாடுகளும் காரணம் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. இந்த இலாகாவின் கண்காட்சியை சில நாட்களுக்கு முன் தேசிய நூலகத்தில் திறந்துவைத்துப் பேசிய பிரதமர் லீ சியன் லூங், சிங்கப்பூரில் ஊழல் குறைந்து இருப்பதற்கு வலுவான அரசியல் தலைமைத்துவம், துடிப்புடன் செயல்படுகின்ற, பரந்த அளவிலான ஊழல் எதிர்ப்பு ஏற்பாடு, ஊழலைச் சகித்துக்கொள்ளாத சமூகம் ஆகிய மூன்றும் முக்கிய காரணங்கள் என்றார்.இந்த மூன்றும் முன்பைவிட இப்போது இன்னும் வலுவாக இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை என்றாலும் லஞ்சம், ஊழல் என்பது மனித இயல்பு என்பதாலும் மனிதனின் ஆசைக்கு அளவில்லை என்பதாலும் சிங்கப்பூரில் ஊழலை நூற்றுக்குநூறு நிரந்தரமாக அகற்றிவிடலாம் என்பது நடக்காத காரியம் என்று பிரதமர் தெரிவித்து இருப்பதை எண்ணிப் பார்த்து, சிங்கப்பூருக்குள் ஊழல் என்ற புற்றுநோயை நுழைய விடமாட்டோம் என்று எல்லாரும் உறுதிபூண்டால் லஞ்ச லாவண்யம், ஊழல் அற்ற நாடாக தொடர்ந்து நாம் உலகில் மிளிரலாம்.ஊழல் என்றால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க சிங்கப்பூர் தயங்குவதில்லை. அண்மையில் பனாமா அறிக்கை கசிவு இடம்பெற்ற உடனேயே சிங்கப்பூரில் யார் தவறு செய்திருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிங்கப்பூர் அறிவித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## மூளைச்சாவு அடைந்த கர்ப்பிணிக்கு பிறந்த குழந்தை: சாதனை படைத்த மருத்துவர்கள்

போலந்து நாட்டில் மூளைச்சாவு அடைந்த கர்ப்பிணி பெண்ணிற்கு ஆண் குழந்தை பிறந்துள்ளதாகவும், அது தற்போது வீட்டுற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.போலந்து நாட்டில் வசித்து வரும் 41 வயதான கர்ப்பிணி பெண் ஒருவர் அண்மையில் அங்குள்ள றுசழஉடயற பல்கலைக்கழக மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டார்.

இவரது மூளையில் குணப்படுத்த முடியாத கட்டி இருந்ததால், கர்ப்பிணிக்கு பிரசவம் பார்ப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனினும், கடுமையான போராட்டங்களுக்கு பிறகு, கர்ப்பிணி பெண்ணை சுயநினைவு இல்லாமலே 55 நாட்கள் மருத்துவமனையில் வைத்தனர்.இந்த நாட்களில் வயிற்றில் இருந்த குழந்தை நன்கு வளர்ந்துள்ளது. எனினும், நீண்ட நாட்கள் குழந்தை வயிற்றில் இருப்பது அதன் உயிருக்கு ஆபத்து என தீர்மானித்த மருத்துவர்கள் குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் வெளியே எடுக்க மருத்துவர்கள் முடிவு செய்துள்ளனர்.இந்நிலையில், கடந்த ஜனவரி மாதம் ஆண் குழந்தையை மருத்துவர்கள் பாதுகாப்பாக வெளியே எடுத்து அதிநவீன சிகிச்சை மூலம் கண்காணித்து வந்துள்ளனர். குழந்தை பிறந்ததும் தாயாருக்கு அளித்து வந்த சிகிச்சையை நிறுத்தியதால், அவர் உயிரிழந்தார்.குழந்தை பிறந்தபோது ஒரு கிலோ மட்டுமே இருந்ததால், கடந்த 3 மாதங்களாக குழந்தை மருத்துவமனையிலேயே வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது.இந்நிலையில், குழந்தைக்கு 3 கிலோ எடை அதி கரித்துள்ளதை தொடர்ந்து, உயிரிழந்த தாயாரின் உறவினர்களை அழைத்த மருத்துவர்கள் அவர்களிடம் குழந்தையை ஒப்படைத்தனர். குழந்தை வீட்டிற்கு திரும்பி விட்டதாகவும், குழந்தை மிகவும் ஆரோக்கியமாக இருப்பதாக மருத்துவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.


## சிற்சபேசன் மீண்டும் தேர்தலில் போட்டி



(ரோறண்டோ)

ராதிகா சிற்சபேஸன் கனடா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். ஒன்றியோ மாகாணத்தில் லிபரல் கட்சி சார்பாகப் போடடியிட முன்வந்துள்ளார்.

முன்பு புதிய ஜனநாயக கட்சியில் போட்டியிட்டு கனேடிய மக்கள் சபையில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ராதிகா சிற்சபேஸன் மாகாண சபையில் லிபரல் கட்சி சார்பாகப் போட்டியிட முன் வந்துள்ளார். சிற்சபேஸன் சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைச்தார். அச் சமயம் அம் மாகாணத்தில் போட்டியிட்ட சகலருமே தோல்வியடைந்தார்கள். அத தேர்தலில் சிற்சபேஸன் 3ம் இடத்தை 22 வீத ஆதரவுடன் பத்தாயிரம் வாக்குகள் பெற்றார். 2011ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 34 வயது நிரம்பிய சிற்சபேசஸன் புதிய ஜனநாயககட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அச் சமயம் இவரே ஒரே ஒரு ஸ்ரீலங்கா தமிழ் இனத்தைச் சேர்ந்தவர். கனடியன் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றார்.




## பொலிஸார் மூன்று விடையங்களை பின்பற்ற வேண்டும்

பொலிஸார் தங்கள தனித்துவத்தையும் பொலிஸ் சேவையின் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டுமாயின் மூன்று விடையத்தை பின்பற்றுவதை கைவிட வேண்டும் இவ்வாறு பொலிஸ்மா அதிபர் (ஐ.ஜி.பி) பூஜித் ஜெயசுந்தரா கூறினார். புதிதாக பதவியேற்ற பூஜித் ஜெயசுந்தர பேசுகையில் ஏமாற்று, ஊழல் ஆகிய விடையங்களை விசாரிக்கும் போது எல்லா விதமான ஊழல் சடவடிக்கைகளையும் கைவிட வேண்டும் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் பதவியேற்ற பொழுது இவ்வாறு அவர் கூறினார்.பொது மக்களை பாதுகாப்பது பொலிஸ் உத்தியோகத்தரின் கடைமை என அவர் கூறினார்.அவர் மேலும் கூறுகையில் பொலிஸார் சட்டங்களை முறியடித்தோ மற்றும் சட்டங்களுக்குப் புறம்பாக நடந்து கொண்டாலோ அவர்கள் மேல் கடும்-நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.போலிசாரின் நலனில் தான் அக்கறை கொள்வதாகவும் அவர்கள் தங்கள் கடைமைகளைச் சரியாகச் சைய்யவேண்டும் எனவும் கூறினார்.

(2ஆம் பக்கம் தொடர்ச்சி)

## முருகன்-நளினி....



முருகன் பேரறிவாளன் சாந்தன்



நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

காவலருக்கு பொலிஸ் அதிகாரி கூறி இருப்பார் அதையடுத்து '. ஐந்து நாட்கள் மழையிலும் வெய்யிலும் நான் பட்ட கஸ்டத்தை சிறை அதிகாரி உடன் அறிந்ததால் முருகனையும் நளினியையும்பார்க்க எமக்கு அனுமதியளித்தார்.

'தூக்குத்தண்டனை உடனடியாக நிறை வேற்றப்படமாட்டாது' என்று எனது மகன் முருகன் எனக்கு ஆறுதல் சொன்னார். வழக்கு உச்ச நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி மூன்று நீதிபதிகள் முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்பட்டது.

நளினி 1 ஆவது குற்றவாளி, சாந்தன் 2 ஆவது குற்றவாளி, முருகன் 3ஆவது குற்றவாளி, பேரறிவாளன் 18 ஆவது குற்றவாளி –

ஆகியோரின் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. மேலும் ரொபேட் பயஸ் ,ஜெயக்குமார்,.ரவிச்சந்திரன் ஆகிய மூவரின் தூக்குத்தண்டனை ரத்துச்செய்யப்பட்டு, ஆயுள் தண்டணையாக மாற்றப்பட்ட்டது.

சில காலம் வேலூரில் தங்கி விட்டு எனது பேத்தியை இலங்கைக்கு கூட்டிவந்தேன். தகப்பன் படித்த இத்தாவில் பாடசலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசிலில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற ஹரித்திரா மேல் படிப்பை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் தொடர்ந்தார்.

பின்னர் எனது பிள்ளைகளிடம் லண்டனுக்கு ஹரித்ராவை அனுப்பினேன். லண்டனில் மருத்துவம் படித்து பட்டம் பெற்றார். 2015 ஆம் ஆண்டு அவர் டாக்டர் பட்டம் பெற்ற பொழுது நான் லண்டனுக்குச் சென்று நேரே பார்த்து மகிழ்ந்தேன்.

அதன் பின் லண்டனில் இருந்து திரும்பி 2015 ஆம் ஆண்டு நவம்பரில் வேலூர் சிறையில் முருகனை பார்த்தேன். அவரைப் பார்த்ததும் எனது வேதனை அதிகரித்தது. ஒரு அடி நீளமளவிற்கு தாடி தலையில் கொண்டை, காவி உடை தரித்திருந்தார் அந்தக் கோலம் இன்னும் என் மனதை விட்டு நீங்கவில்லை.

அதையடுத்து நான் இந்தியாவுக்குச் செல்பவர்களிடம் எனது மகன் முருகனை சென்று காணும்படி கூறுவேன். அவ்வாறு கூறியவர்கள் எனக்கு தந்த தகவலின் படி அவர் இப்போது மௌன விரதம் அனுஸ்டிக்கிறார். யாருடனும் கதைப்பதில்லை. எனக் கூறினார்கள்.

எனது மகன் எந்தக் குற்றமும் செய்யாதவர். அவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இல்லை. ஏதோ ஒரு காரணத்துக்காக அவரை குற்றவாளியாக்கி மரண தண்டனை வாங்கி கொடுத்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டு முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு வழங்கப்பட்ட மரனதண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.


அதே நேரம் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி அன்றைய தமிழக ஆளுநர் பாத்திமா பீபியால் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

தினச்செய்தியில் சென்ற வாரம் சாந்தனின் அம்மா மகேஸ்வரி தனது பேட்டியில் குறிப்பிட்டது போல எனது மகன் முருகனும் இலங்கைப் பிரஜை, இலங்கைப் பிரஜையான முருகனை மணமுடித்த நளினியையும் இலங்கைப் பிரஜையாகக் கருத வேண்டும்.

நானும் சாந்தனின் அம்மா மகேஸ்வரியும் விரைவில் இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளோம். யாழ்ப்பானத்தில் இருக்கும் இந்திய உதவித் தூதுவர் மூலம் இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கும் கடிதம் அனுப்பவிருக்கின்றோம்.


சிறையில் வாடும் எமது பிள்ளைகள் குற்றமற்றவர்கள். அவர்களை விடுதலை செய்வதற்கு இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் பிரார்த்தனை செய்ய வெண்டும். என திருமதி சோமணி தினச்செய்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சாமி, மேரி கோம், சித்து உள்பட 6 பேர் ராஜ்யசபாவுக்கு பரிந்துரை



(டெல்லி): பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சாமி, குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் உள்பட 6 பேரை ராஜ்யசபா நியமன எம்.பி.களாக நியமிக்க மத்திய அரசு பரிந்துரை செய்துள்ளது. ராஜ்யசபாவில் மொத்தம் உள்ள நியமன எம்.பி.க்களின் எண்ணிக்கை 12.அதில் தற்போது 7 இடங்கள் காலியாக உள்ளது. இந்நிலையில் பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சாமி, மலையாள நடிகரும், பாஜகவின் நட்சத்திர பேச்சாளருமான சுரேஷ் கோபி, குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், பத்திரிக்கையாளர் ஸ்வபன் தாஸ்குப்தா, பொருளாதார நிபுணர் நரேந்திர ஜாதவ் ஆகியோரின் பெயர்களை மத்திய அரசு பரிந்துரை செய்துள்ளது.

முன்னாள் கிரிக்கெட் வீரர் நவ்ஜோத் சிங் சித்துவின் பெயரும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.எங்கே சித்துவை ஆம் ஆத்மி கட்சி தங்கள் பக்கம் இழுத்து பஞ்சாப் மாநில தேர்தலில் முதல்வர் வேட்பாளராக்கிவிடுமோ என பாஜக அஞ்சுகிறது.இந்நிலையில் தான் பாஜகவை சேர்ந்த சித்துவின் பெயர் நியமன எம்.பி. பதவிக்கு பரிந்துர்ரைக்கப்பட்டுள்ளது.7வது காலி இடத்தை நிறப்ப பாலிவுட் நடிகர் அனுபம் கேரை பரிந்துரைப்பதா அல்லது பத்திரிக்கையாளர் ரஜத் சர்மாவை பரிந்துரைப்பதா என்று ஆலோசனை நடந்து வருகிறதாம்.ராஜ்யசபா உறுப்பினர்களான காங்கிரஸ் தலைவர் மணி சங்கர் அய்யர், பாடல் ஆசிரியர் ஜாவித் அக்தர், நாடகத்



துறை பிரபலம் பி. ஜெயஸ்ரீ, கல்வியாளர் ம்ரினால் மிரி, பொருளாதார நிபுணர் பால்சந்திர முங்கேகர் ஆகியோர் மார்ச் மாதம் 21ஆம் திகதி ஓய்வு பெற்றனர்.முன்னதாக தொழில்துறை நிபுணர் அசோக் கங்குலி மற்றும் பத்திரிக்கையாளர் ஹெச்.கே. துவா கடந்த ஆண்டு ராஜ்சபா உறுப்பினர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றனர்.

# மேபீல்ட் தோட்டத்தில் மண்சரிவுக்கு முன் வேறு இடத்திற்கு இடம்மாற்றவும்

(க.கிருஷாந்தன்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மேபீல்ட் மேல்பிரிவு தோட்டத்திலும் மண்சரிவு ஏற்பட்டு, உயிர்கள் காவு கொள்ளப்படுவதற்கு முன்பதாக தம்மை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கு மலையக தலைமைகள் முன்வர வேண்டும் என மேபீல்ட் தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.


அனர்த்த பிரதேசமாக கடந்த 2015ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மேபீல்ட் தோட்டத்தில், கற்பாறை தொடரிலிருந்து புதன்கிழமை (20.04.2016) அன்று இரவு பாரிய கற்பாறைகள் சரியத் தொடங்கியதாகவும் இக்கற்பாறைகள் முற்றுமுழுதாக குடியிருப்புகளை நோக்கி வராமல் பாதியிலே நின்றுவிட்டதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



தினச்செய்தி
வாரமலர்

ளோமோ என்ற உணர்வேற்படும் என்று இரா ணியார் விபரித்துக் கூறியுள்ளார்.

ஒரேயொரு தடவை கிடைத்த இந்தப் பயணத்தின்போது, படப்பிடிப்பாளர் ஒருவர் எங்களைத் துரத்தியது ஏமாற்றத்தை அளித் தது. நடனம் உட்பட பல விடயங்களில் இந்தக் காதல் ஜோடி ஒத்துப் போனதாக இந்தக் காதல் கடிதம் மேலும் வெளிப் படுத்துகின்றது.



கடிதமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

பேனா மையினால், அரச குடும்பத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட வெள்ளைத் தாளில் இள வரசர் பிலிப்புடனான தன் முதல் சந்திப்பு பற்றியும், கிரேக்க டென்மார்க் இள வரசர் சந்திப்பு பற்றியும் மனதைத் தொடும் வகை யில் இளவரசி எலிஸ



# கடிதம் சொல்லும் காதல் கதை...

இது இங்கிலாந்தின் மகாராணியாரின் காதல் கதை..

திருமணமாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு மகாராணியாரால் எழுதப்பட்ட கடித மொன்று. இளவரசர் பிலிப்பும் மகாராணியாரும் எப்படிக் காதலிக்க ஆரம்பித்தார்கள் என் பதை நன்றாகவே வெளிப்படுத்துகின்றது.

பப்பராஸிகள் என்று வர்ணிக்கப்படும் படப் பிடிப்பாளர்கள் பின்னே துரத்த, இலண்டன் தெருக்களில் தங்கள் வாகனத்தில் ஓடி ஒளி த்து, இரவு விடுதிகளில் ஜாலியாக இந்த ஜோடி நடனமாடியதை, அந்தக் கடிதம் அழகாக விப ரித்துச் சொல்கின்றது.


காதல் கடிதம் எழுதிய சமயம் மகாஇரா ணியாரின் வயது 21. .. இளவரசர் பிலிப்புடனான முதல் சந்திப்பு 1939 இல்!


இந்த முதல் சந்திப்பிலேயே தனக்கு வேக மாக ஓடும் கார்களில் உள்ள மோகத்தை இள வரசர் பிலிப் வெளிப்படுத்தி இருக்கின்றார். தன்னிடம் இருந்த சிறிய ஸ்போர்ட்ஸ் கார் பற்றியும் அவர் காதலியிடம் சொல்லத் தவற வில்லை.

1947 இல் இராஜகுடும்பத்தாரின் திருமணத் தையொட்டி ஒரு ஞாபகார்த்த புத்தகம் ஒன் றைத் தொகுத்த Betty Shew என்பவருக்கு, இந்தக் காதல்கடிதம் இராணியாரால் அனுப்பப் பட்டுள்ளது. இராஜ குடும்பத்தினரின் ஞாப கார்த்த சின்னங்கள் என்று இந்த மாதப் பிற்பகுதியில் வில்ட்ஷயர் என்னுமிடத்தில் ஏலமிடப்படவுள்ள பல பொருட்களில் இந்தக்

பெத் குறிப்பெழுதி இரு க் கின்றார்.

டார்ட்மவுத்திலுள்ள அரச கடற்படைக் கல் லூரியில் பிலிப்பை முதற் தடவையாகச் சந் தித்த ஞாபகம் எனக் கிருக்கின்றது. யுத்தம் வெடிக்கு முன்பு, ஜூலை 1939 இல் இது நிகழ்ந் தது. (கென்ட் கோமக னின் முடிசூட்டு விழாவின் போது ஒருவேளை சந் தித்திருக்லாம். அது என க்கு ஞாபகம் இல்லை)


BALMORAL CASTLE



எனக்கு அப்பொழுது வயது 13 தான். அவருக்கு வயது 18. கடற்படைப் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் சமயம் அது.. அவர் கடற்படையில் இணைந்து விட்டார். யுத்தமும் வெடித்து விட்டது. அவர் அபூர்வமாக லீவில் வரும் போதுதான் - மூன்று வருடங்களில் இரண்டு தட வைகள் என்று நினைக்கிறேன்- என்னால் அவரைக் காண முடிந்தது..

இவருடைய மாமாவும் மாமியுமான பிரபு மவுண்ட் பட்டன், சீமாட்டி மவுண்ட்பட்டன் நாட்டை விட்டு வெளியே சென்ற சமயம், எங்களுடன் வின்சரில் வாரமுடிவில் இவர் வந்து போவதுண்டு. அதன் பிற் பாடு, இவர் பசுபிக் பிராந்தியத்திற்கும், கிழக்கு ஆசியாவிற்கும் பணியாற்றச் சென்றவர், இரண்டு வருடங்களை அங்கு கழித்துள்ளார்.







மிக வேகமாகக் கார் ஓட்டுவது இளவரசர் பிலிப் பிற்கு பிடிக்கும். தான் வைத் திருந்த சிறிய ஸ்போர்ட்ஸ் கார் பற்றி எப்பொழுதுமே அவர் பெருமைப்பட்டுக் கொள்வார். ஒரு தடவை என்னை இலண்டன் நகர் வரை காரில் கொண்டு சென்றுள்ளார். காரின் சக் கரங்கள் மிக உயரமா னவை என்பதால், காரில் உடகார்ந்திருக்கும்போது தெருவில் உட்கார்ந்துள்

எங்கள் இருவருக்கும் நடனமாட மிகவும் பிடிக்கும். Ciro, Quaglino என்று அப்பொழுது பிரபல்யமாக இருந்த இரவு விடுதிகளிலும், வைபவங்களிலும் இருவரும் நடனமாடியுள் ளோம்" என்று காதல் கடிதக் குறிப்புகள் சொல்கின்றன.

1947 இல் அன்றைய இளவரசி Corsham என்னும் இடத்தில் அரச கடற்படை அதிகாரி களுக்கான கல்லூரியில் 2 வருட வேலை யொன்றிற்கு இளவரசர் போகத் தொடங்கிய தும், நாம் இருவரும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவரையில் இருவ ருக்கும் ஒருவரையொருவர் பற்றிய அறிமுகம் அடியோடு இல்லை என்றே சொல்ல வேண்டும்.

வார முடிவுகளில் எங்களுடன்தான் தங்கி இருப்பார். கல்லூரி மூட்டப்பட்டபோது ஆறு வாரங்களை Balmoral என்னும் இடத்தில் கழித்தார் - இப்படிச் சொல்கிறார் இளவரசி.

இராணியார் கூறும் மேலதிக கதைகள் இவை.

மிகச் சுருக்கமாக எலிஸபெத் என்று கை யொப்பம் இடப்பட்டுள்ள இக் கடிதம் Wiltshire இல் உள்ள சிப்பன்ஹாம் ஏல விற்பனை நிலையத்தில் 23 ஆம் திகதி ஏறத்தாழ 1200 பவண்ட்ஸ் தொகைக்கு ஏலத்தில் விற் பனையாகலாம் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஏப். 24, 2016 அன்று வெளியிடப்பட்டது.